# சங்ககாலச் சோழமன்னர்

[illegible]

**நா. கனகராஜையர், M. A.,**

முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், குடந்தைக் கல்லூரி,

மதுரை.

CONNEMARA PUBLIC LIBRARY
4 - JUN 1956
MADRAS

---

**இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்**

மதுரை :: திருநெல்வேலி :: சென்னை

[பதிப்புரிமை] **1955** [விலை அணா 13

ii
4 - JUN 1956
MADRAS

முதற் பதிப்பு—1955

# முகவுரை

தமிழ் மொழியின் வரலாற்றிலே மிகச் சிறந்த காலம் கிறிஸ்து நாதர் பிறப்புக்கு முந்திய சில நூற்றாண்டுகளும், பிறந்த பிறகு இரண்டு மூன்று நூற்றாண்டுகளும் ஆகும். சேரரும் சோழரும் பாண்டியரும், குறுநில மன்னரும் வேளிரும் பிறரும் தமிழ் பயின்ற நன்மக்களைப் புரந்து புகழ் பூண்ட காலம் அதுவே ஆகும். புலமை படைத்த சான்றோருள் கபிலர், பரணர், நக்கீரர், திருவள்ளுவர், மாங்குடி கிழார், கோவூர் கிழார், முதலிய ஒளி மணிகள் விளங்கிய காலம் அதுவே. இம் மணிகளைப் பதிக்கத்தக்க முடிகள் அந்நாளில் இருந்ததாலன்றோ இன்று தமிழகம் தனது பழமையை எண்ணித் தலை நிமிரும் பெருமித வுணர்வைப் பெறுகிறது!

சேரருள் முன்னைய சேரர் ஒரு வகையர். பின்னாளில் வந்த கேரள மன்னர், தம் தாய் மொழியை இழந்து மலையாளிகள் ஆயினர். சோழருள் முன்னைய வகுப்பினர் தூய தமிழறம், தமிழுணர்ச்சி பூண்ட வாழ்வுடையவர். பின்னைய சோழர், தமிழொடு வடமொழி கலக்க இடம் தந்தவர். பாண்டியருள் முன்னையோர் நிலந்தரு திருவின் நெடியோன் போன்ற நீர்மையுடையவர். பின்னையவர் சிலகாலம் பல்லவர் கீழும், சிலகாலம் களப்பிரர் கீழும், சில காலம் விசயநகரத்து ஆந்திரர் கீழும் அடங்கியிருந்து அவ்வப்பொழுது தலையெடுத்து அரசு நடத்தினவராவர்.

சங்கம் இருந்த காலத்தே தனியரசு நடாத்திய சேர சோழ பாண்டிய மன்னர் வரலாறுகளைச் சங்கச் செய்யுட்களின் உதவி கொண்டே அறியவேண்டும். சங்கச் செய்யுட்களால் அறியப்படும் மன்னவர் பலர். அவர் தம் காலக் கணக்கை, அறுதியிட்டுரைப்பது இன்று எத்தகைய நுண்ணறிவு படைத்தவர்க்கும் எளிதில் இயல்வதன்று. தென்னிந்திய சரித்திரம் என்ற பெரிய வரலாற்று நூல் இயற்றிய திரு. க. அ. நீலகண்ட சாத்திரியாரும், ‘இம் மன்னருள் எவர் முந்தியவர், எவர் பிந்தியவர் என்று கூறுவது எளிதில்லை’ என்கிறார்.

இங்ஙனமாகிய சங்ககாலச் சோழமன்னர் சிலர் வரலாறுகள் இச்சிறு நூலில், கலாசாலை மாணவர் மனம் கொள்ளத் தக்க வண்ணம், சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன. இதனைத் தமிழுலகம் அன்பால் வரவேற்கும் என்று நம்புகிறேன். இதனைப் பதிப்பிக்கும் பொறுப்பேற்ற, மதுரைப் புத்தக வர்த்தகர் திரு இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்கட்கு என் நன்றி உரியதாம்.

மதுரை
23—9—55

**நா. கனகராஜையர்.**

---

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:-’55.

JUN 1958



# பொருளடக்கம்


1. சோழர் வளர்த்த தமிழ் ... 1
2. சோழ மரபு ... 10
3. கரிகாலன் முன்னோர் ... 14
4. சோழன் கரிகாலன் ... 19
5. நலங்கிள்ளி ... 36
6. கிள்ளி வளவன் ... 47
7. கோப்பெருஞ் சோழன் ... 60
8. சோழன் செங்கணான் ... 82
9. பெருநற்கிள்ளி ... 93
10. இளஞ்சேட் சென்னி ... 100

4 - JUN 1956

# சங்ககாலச் சோழமன்னர்

## 1. சோழர் வளர்த்த தமிழ்

"மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவரும் தழைத்தினி திருந்த
மையறு சோழ வளநா டென்ப."

**சங்கம்:** உலக மன்னவர் என்று சாத்தனார் புகழ்ந்த சோழர் குலத்தார் சங்கமிருந்த காலத்திலே தமிழ் வளர்த்த வரலாற்றை அறிய முயல்வோம். சோழர் ஆண்ட நாடு, பொன்னி, காவிரி என்று புகழப்பெற்ற வற்றாத நீர்ப்பெருக்குள்ள யாற்றினால் வளம் படைத்தது. யாற்றினிருமருங்கும் இயல்பாய் எழுந்த பல சிறந்த புண்ணியத் தலங்களை யுடையது. பெருமிதத்துக்குரிய பண்புகள் எல்லாம் பொருந்திய முடிமன்னர் ஆட்சியில் நெடுங்காலம் இருந்தது. 'பாண்டியர் சங்கத்தால் தமிழ் வளர்த்ததுபோலவே சோழரும் வளர்த்தார் என்று கூறத்தக்க சில சான்றுகள் உள' என்று அறிஞர் கூறுவதுண்டு.

**சோழர்:** சங்கச் செய்யுட்களுட் பெரும்பான்மை யானவை அகப்பொருள் நுவலும் செய்யுட்களே.

புறப்பொருளை உரைப்பன சிலவே. புறப் பொருட் செய்யுட்கள் அரசர் வேளிர் முதலிய வள்ளலர் வரலாறுகளை வெளிப்படையாய் உரைக்கின்றன. அகப் பொருட் செய்யுட்கள் இங்ஙனம் அரசரையும் பிறரை யும் புகழ்தல் பொருந்தாமையால், ஆங்காங்கே சில வரலாறுகளை இலைமறை காய் போல் மறைத்து வைத்துள்ளன. புறச் செய்யுட்களைக் கொண்டே சோழர் தமிழறச் சிறப்பை அளவிடல் எளிதாம் ஆயினும், அகச் செய்யுட்களிலும் அம்மன்னரைப் பற்றி வரும் செய்திகள் உண்டாமாதலின், அவற்றை யும் இயைத்தே இவ்வரலாறு உரைக்கப்படும்.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று"

என்ற குறளின் உரையிலே பரிமேலழகர் பழங்குடி என்ற தொடர்க்கு விளக்கம் கூறக் கருதிச் சேர, சோழ, பாண்டியரைப் போலப் 'படைப்புக் காலம் தொட்டு வரும் குடி' என்று கூறுகிறார். படைப்புக் காலம் இன்னது தான் என்று அறுதியிடத்தக்க சான்று ஒன்றும் இல்லை. ஆதலால் தமிழ் நாட்டு முடிவேந்தர் மூவரும் மிகவும் பழமையான காலத் திலிருந்தே இந்நாட்டை ஆண்டு வந்தனர் என்று கருதுவோம். அயல் மக்கள் நம் நாட்டைப் பற்றி உரைத்த வரலாறுகளைப் பார்ப்போமாயின் பெரிப்ளஸ் என்ற வரலாற்று நூலிலும் அசோக சாசனங்களிலும் தமிழகத்தின் சிறப்பு வெளிவந் துள்ளது என்று துணியலாம்.

**சோழர் ஆட்சி பிறந்த காலம்:** தமிழ் நாட்டில் இம் முடி வேந்தர் ஆட்சி தோன்றிய காலம், வால்மீகி ராமாயணத்துக்கு முந்திய காலமாகவே இருக்க வேண்டும் என்பதை வால்மீகி முனிவரே கூறிய வாக்கியங்களால் அறியலாம். சேர, சோழ, பாண்டியர் இராமாயண காலத்துக்கு முன்பு இங்கு வாழ்ந்ததே யன்றிப் பாரத காலத்திலும் படைத் துணையும் பெருஞ்சோற் றுதவியும் புரிந்திருக்கின் றனர். ஆதலின் இம்மன்னர் மரபு தொடர்பாக நெடுங்காலமாக வந்துள்ளது என்றே துணியவேண்டும். களவியல் உரைகூறும் சங்க வரலாற்றிலும் தலைச் சங்க கால முதலே பாண்டியர் ஆட்சி தமிழகத்தில் இருந்த செய்தி வருகிறது. சேர, சோழ, பாண்டியர் மூவருமே ஒரே காலத்தில் இந்நாட்டிலே தோன்றினர் என்ற பழஞ் செய்தி ஒன்று உண்டு. அக்காலம் இது தான் என்று திட்டமாகக் கூற இயலாதாயினும் மிகவும் பழமையானதே என்று முடிவு செய்வோம்.

**நான்கு பொருள்:** தமிழ் நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி, தமிழரசு என்ற நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களே போல ஒன்றோடொன்று இயைந்தே உயர்வு படைத்தவை யாம். ஆதலின், முடிமன்னர் மூவரும் தமிழகத்தே ஆட்சிபுரியத் தொடங்கிய காலம் முதலே தமிழ் மொழியும் வளர்தலாயிற்று என்று துணிதல் வேண் டும். அங்ஙனம் வளர்வதற்கு அமைந்த முறையிலே சோழர் திருப்பணியை ஒருவாறு அளந்தறிய முயல்வோம்.

**சோழர் புலமை:** சோழ மன்னருள் புலமை படைத்தவர் பலர் இருந்தனர். புலவராற் புகழப்பட்டவர் மிகப்பலராவர். கோப்பெருஞ் சோழன் குறுந்தொகையில் நான்கு செய்யுளும், புறநானூற்றில் மூன்று செய்யுளும் பாடியிருக்கிறான். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் புறநானூற்றில் ஒரு செய்யுள் பாடியிருக்கிறான். சோழன் நலங்கிள்ளி புறநானூற்றில் இரண்டு செய்யுள் பாடியிருக்கிறான். சோழன் நல்லுருத்திரன் புறநானூற்றில் ஒரு செய்யுள் பாடியிருக்கிறான். கலித்தொகையில் முல்லைக்கலியைப் பாடிய நல்லுருத்திரன் இம்மன்னனே என்று கருதுவாருளர்.

**புலவர் பாடிய சோழர்:** புலவர் பாடும் புகழ் படைத்த சோழ மன்னர் புறப்பாட்டு அளவில் அடங்காது, பிற சங்கச் செய்யுட்களாலும் அறிய வருகின்றனர். உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் புலவர் மூவர் புகழ்ந்துளர். கரிகால் வளவனைப் புலவர் எண்மர் பாடியிருக்கின்றனர். கோப்பெருஞ் சோழனை ஐவர் புகழ்ந்துளர். சேட்சென்னி நலங்கிள்ளியை மூவர் புகழ்ந்திருக்கின்றனர். இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளியை நால்வர் புகழ்ந்திருக்கின்றனர். பெருந் திருமாவளவனை நால்வர் புகழ்ந்துளர். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பதின்மர் பாடிப் புகழ்ந்துளர். சோழன் செங்கணானை ஒருவர் பாடியுளார். இன்னும் ஆறு சோழ மன்னர்களைப் புலவர் பதின்மர் பாடியிருக்கின்றனர்.

**சோழர் பெருமை:** பத்துப் பாட்டு என்ற தொகையில் இரண்டு பெரும் பாட்டுக்களை யேற்றுக்கொண்டு பரிசில் ஈந்த பெருமை சோழன் கரிகாலனுக்கு உரியதாம். பதினெண் கீழ்க்கணக்குள் ஒன்றான களவழி நாற்பது, பொய்கையார் என்ற பெரும் புலவரால், சோழன் செங்கண்ணான் என்ற கோச் செங்கட் சோழன், சேரமான் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறைசெய்த பெரும்போரின் சிறப்பை விளக்க இயன்றதே ஆகும். சோழ மன்னர் தமிழ்ப் புலமையை வளர்த்த பெருமை சங்க காலத்தில் இருந்த நன்மக்களால் நன்றாக உணரப்பட்டிருந்தது. கரிகாற் பெருவளத்தான் பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில் ஈந்தான் என்ற செய்தியைக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது. சோழ மன்னர் சங்கத்தார் வாழ்ந்த பழங்காலத்தில் மட்டுமின்றிப் பின்னாளிலும் மிகப் புகழ் பொருந்த வாழ்ந்தனர் என்பதற்கு மூவருலாவும், கலிங்கத்துப் பரணியும் உரிய சான்று பகர்வனவாம்.

**சோழர் தமிழ்ச் சங்கம்:** சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார் பாடிய பாடல் ஒன்றில் நன்றி கொன்றவர்க்கு உய்தி இல்லை என்ற செய்தி வருகிறது. இப் புலவர் "நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென அறம் பாடிற்றே" என்று மனம் உருகிக் கூறும் வண்ணம் கிள்ளிவளவனிடம் பெற்ற பேருதவி யாது என்று ஆராய வேண்டும். ஆலத்தூர் கிழார்

இளம் பருவத்தை இம் மன்னன் ஆதரவில் எளிதே கழித்தார் என்பது இச் செய்யுளால் நன்கு விளங்குகிறது.

"இரத்தி நீடிய அகன்றலை மன்றத்துக் கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன், எங்கோன் வளவன் வாழ்க என்று நின் பீடுகெழு நோன்றாள் பாடேனாயின் பல்கதிர்ச் செல்வன் படுவது அறியேன்" என்று கூறுகிறார். இவ்வடிகளால் இப்புலவர் தெரிவிக்க விரும்பும் கருத்து ஒன்று உண்டு. காலையும் மாலையும் பாணர் குழுவினர்க்கு வயிறார உணவளித்து அவர்கள் கரவு இல்லா மனத்தோடு கூறிய மொழிகளைக் கிள்ளி வளவன் கேட்டான். அம் மொழிகளைக் கேட்டதற்கு மாறாக அவர்களுக்கு அகலாச் செல்வம் நிரம்ப உதவினான். அப் பாணர் குழுவினுள் இப் புலவரும் இருந்தார்.

இக் குழு இலந்தை மரத்தை அடையாளமாக உடைய மன்றத்தில் இருந்தது. சங்கம் என்ற சொல் முன்னாளில் வழக்கில் இல்லை. மன்றம் என்பதே அப் பொருளில் வழங்கியது. இங்கு ஆலத்தூர் கிழார் கூற விரும்புவது இலந்தை மன்றத்திலே நூற்றுக்கணக்கான புலவர்களையும் பாணர்களையும் இருக்கச் செய்து அவர்கள் அவ்வப்பொழுது பாடிய பாடல்களையும் பேசிய இனிய கலைத்துறைப் பேச்சுக்களையும் கிள்ளி வளவன் கேட்டு மகிழ்ந்து அவர்களுக்கு அழியாத பெருஞ் செல்வம் உதவினான் என்பதே.

இங்ஙனம் உதவிய மன்னனை மறப்பேனாயின் கதிரவன் வருவதும் மறைவதும் அறியாது அழிவேன். ஒருவர் செய்த நன்றியை 'மறந்தவர்க்குக் கழுவாய் இல்லையே என்று கூறுகிறார். இதனால் சோழர் தமிழ்ச் சங்கம் உறையூரிலும் புகார் நகரத்திலும் சிறப்புற்று இருந்திருக்க வேண்டும் என்று உணரலாம். மற்றும் சில செய்திகளாலும் இதனை உறுதிப்படுத்தலாம்.

கரிகாலன் காலத்தில் பெரும் புலவர் பலர் அவனை அடுத்து வாழ்ந்தனர். இப்புலவர் சோர்ழர் தமிழ்ச் சங்கத்தின் பெருமையை உலகறிய வைத்தனர். பிசிராந்தையார் என்ற பெரும் புலவர் பாண்டியன் அறிவுடைநம்பி ஆண்ட காலத்திலே பாண்டியநாட்டில் வாழ்ந்தவர். இப்புலவரும் உறையூரில் வாழ்ந்த கோப்பெருஞ்சோழனும் கொண்ட நட்பு வள்ளுவர் வாக்கில் அமைந்த

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

என்ற மெய்ந்நட்பின் இலக்கியமாய் அமைந்தது என அறிவோம். பிசிராந்தையார் சோழன் இறக்கும் அளவும் அவனை நேரிற் காணாதவரே ஆயினும் அவன் நற்பண்புகளைக் கேட்டே அவனிடம் அன்பு பூண்டவர்.

**சோழனும் சான்றோரும்:** இத்தகைய மெய்யன்பு சோழனிடம் இருந்த எக் குணத்தால் எழுந்தது? அவன் எப்பொழுதும் புலமை சிறந்த நன்மக்களாற் சூழப்பட்டிருந்தான். அவர்களோடு நூற்பொருள்களை

ஆராய்வதே பொழுதுபோக்காகக் கொண்டிருந்தான். அதனால் அரசியற் பொறையையும் நெகிழவிட்டான். மக்கள் இருவர் அவன் போக்கை வெறுத்து அரசைக் கவரப் போர் தொடுக்கவும் துணிந்தனர். உறையூர்ப் புறத்தே இருந்த பறந்தலையில் அவன் சான்றோர் பலரோடு வடக்கிருந்து உயிர் துறந்தான்.

அங்கு வந்து உயிர் நீத்தவருள் பிசிராந்தையாரும் ஒருவராம் என்பதை உணர்வோம். அரசனும் புலவர் பலரும் இறந்து நடுகற்கள் ஆனபிறகு அங்கு வந்த பொத்தியார் என்ற அமைச்சப் புலவரும் நடுகற்களி டையே தமக்கும் இடம்பெற்றார். இவ்வரலாற்றால் விளங் கும் உண்மை ஒன்று உண்டு. கோப்பெருஞ் சோழன் என்றுமே புலவர் குழுவின் இடையே இருந்தான். இறக்கும்போது அக்குழுவின் இடையே இறந்தான். இக்குழுவே சோழர் தமிழ்ச் சங்கம் என்று மதிக்கத் தக்கதாம்.

இச் சங்கத்தில் எத்துணைச் செய்யுட்கள் பாடப்பெற்றனவோ! புறநானூற்றில் வந்துள்ள சில செய்யுட்கள் கோப்பெருஞ்சோழன் ஆதரவு படைத்த புலவர் குழுவைப்பற்றி நன்கு விளக்குகின்றன. சோழ மன்னருட் புலமை சிறந்த பலர் இருந்தனர். அவர் எல்லாருமே பாடல் பாடியிருப்பர். சங்கச் செய்யுட்கள் என்று தொகுப்புண்டு வந்த தொகையில் நாம் அவற்றுட் சிலவற்றையே காண்கிறோம். மதுரையிலே அரசரும் புலவரும் ஒருங்கமர்ந்து அந்நாளிற் கிடைத்த செய்யுட்களைத் தொகுத்து எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் ஆக்கிக் கொடுத்தனர்; இத்தொகுப்புக்குட்

படாது மறைந்த செய்யுட்கள் எத்தனையோ! சோழர் பெருமையை விளக்க வல்லவற்றுள் மூத்தொள்ளாயிரத்தில் ஒரு பகுதியான சோழரைப் பற்றிய தொள்ளாயிரம் பாட்டுக்கள் இன்று அகப்படவில்லை. அவையும் இருந்தால் சோழர் தமிழ்ப்பணிச் சிறப்பு நன்கு விளங்கும்.

சங்கச் செய்யுட்களால் அறியப்பெறும் சோழ மன்னர் பதினல்வர் என்று தோன்றும். அவருள் தமிழ்ப் புலமை நாட்டில் வளரத்தக்க திருப்பணி புரியாதவர் ஒருவரும் இல்லை என்று கூறலாம். புலமையின் சிறப்பைத் தாமே நன்கு அறிந்தாலன்றிப் புலவரை ஆதரிக்கும் பண்பு அரசகுலத்தினர் இடையே பிறத்தல் எளிதாகாது. அரசர் போர் புரிவதும் நாடு வளர்ப்பதுமே தம் குலத் தொழிலாகக் கருதி அடங்காமல் நெடுந் தொலையிலிருந்து தம்மை நாடி வந்த புலவர்க்கு உரிய வரிசைகளை அறிந்து செய்ததால் இன்றளவும் நாம் நினைந்து மதிக்கத்தக்க நிலையில் இருக்கின்றனர். 'வாணன் வைத்த விழுநிதி' மோரியர் கங்கையுள் மறைத்த செல்வ முதலிய பெருஞ் செல்வ வரலாறுகளைப் புலவர் இன்றும் நாம் நினைத்து மருள உரைத்தது, சோழ மன்னர் அளித்த சோற்றின் செருக்கே ஆகும். தேரும் யானையும் கொடுத்துப் புலவரைச் சிறப்பிப்பார் சிலர். உணவு கொடுத்தே வாழ்த்துப் பெற்றவர் சோழ குல மன்னரே.

## 2. சோழ மரபு

சோழ மரபின் பழமை விளக்கும் வரலாறுகள் பல தமிழகத்தில் வழங்குகின்றன. சங்கம் இருந்த காலத்தில் வாழ்ந்த புலவர்களாற் பாடப்பெற்ற சோழரைப் பற்றியே நாம் அறியப் புகுந்தோமாயினும் அவர்க்கு முன்னும் சோழர் மரபு சிறந்திருந்த உண்மையைச் செவிவாயிலாகக் கேளாதிருக்க இயலாது. தமிழர் காலக் கணக்கைச் சேர, சோழ, பாண்டிய மரபினர் வரலாறு கொண்டு ஆராயப் புகுந்த திரு. சிவராஜ பிள்ளையும் சோழ மரபின் சிறப்பைப் பல படியாக விளக்கி, மற்ற இரு மரபுகளுக்கும் தொடர்பான வரலாறு கிடைப்பது அரிது என்றும் சோழர்க்கே பண்டைக்காலம் முதல் இடையறாத வரலாறு உண்டு என்றும் கூறியிருக்கிறார்.

**சங்கத்துக்கு முந்திய சோழர்:** சங்க காலத்தில் வாழ்ந்த சோழர்க்கு முன்பும் சில புகழ்மிக்க சோழ மன்னர் இருந்தனர். புறாவின் பொருட்டுத் துலையில் ஏறி நின்று தன் உயிரையே கொடுக்கத் துணிந்த சிபி மன்னன் சோழ குலத்து முன்னவனே என்று புறநானூற்றிலே மாறோக்கத்து நப்பசலையாரும் தாமப்பல் கண்ணனாரும் பாடியிருக்கின்றனர். சோழ குலத்தின் பெருமையை உரைக்க விரும்பும் புலவர் எல்லாம் இவ் வரலாற்றை நினையாதிருப்பதில்லை. சிபி மன்னன் சூரிய குலத்தவன் என்று உணரப் படுகிறான். சோழர் குலம் சூரிய குலம் என்றே புலவர் கருதுதலால் இம் மன்னன் சோழ மரபின் முன்னோன் ஆயினான்.

சிபி மன்னன் வரலாறு கேட்கத்தக்கதே ஆகும். இம் மன்னன் ஒரு நாள் தனது அரண்மனையில் அறங் கூறும் அவையத்தில் அமர்ந்திருந்தான். அப் பொழுது புறு ஒன்று பறந்து வந்து அவன் காலில் விழுந்தது. அதனை எடுத்து மன்னன் மார்புற அணைத்தான். புறுவைத் தொடர்ந்து பருந்து ஒன்று வந்தது. பருந்துக்கு இரையாகாது உயிர் பிழைக்க வேண்டியே தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறுவைக் காப்பாற்றுவதே தன் கடமை என்று மன்னன் துணிந்தான். பருந்து வந்ததும் "எனக்கு உணவாக உதவும் புறுவை என்னிடம் தருவதே அறமாகும்" என்று மன்றாடியது. புறுவும் தன் உயிர் காக்க மன்றாடியது. அடைக்கலம் புக்க புறுவுக்கு உயிர்ப் பிச்சை தருவதே தலையாய அறம் என்று துணிந்த மன்னன் பருந்தை நோக்கிப் புறுவின் நிறை யளவு தன் உடலிலிருந்தே ஊன் எடுத்துத் தருவதாய் உரைத்தான். பருந்து அதற்கு இசைந்ததால் யானைக் கொம்பால் இயன்ற துலாம் ஒன்றை வரு வித்து அதில் ஒரு புறம் புறுவை அமர்த்தி மற்றொரு தட்டில் தனது உடலிலிருந்து அரிந்து எடுத்த ஊன் பகுதிகளை இட்டான். எத்தனை முறை அரிந்து இட்டும் பற்றாமையால் இறுதியில் தானே அத்துலாக் கோலில் ஏறித் தன் கடனைக் கழித்தான். உயிர் கொடுத்தும் அடைக்கலம் காக்கத் துணிந்த இம் மன்னன் புகழைச் சோழ குலத்தோடு பல புலவர் இசைத்தே கூறியிருக்கின்றனர்.

முசுகுந்தன் என்ற மன்னனும் சோழர் மரபின் முன்னவன் என்று உரைக்கப்படுவதுண்டு. இம்

மன்னன் துவாரகையில் வாழ்ந்த கண்ணபிரான் காலத்தில் மிகவும் முதியவனாக இருந்தான் என்று உரைக்கப்படுகிறது. இந்திரனுக்கு ஒரு பெரும் போரில் உதவி புரியச் சென்று அவன் நன்றியறிவாற் கொடுத்த பூதத்தைச் சோழ நாட்டிலே புகார் நகரத்தில் இருக்கவைத்தான் என்று மணிமேகலை கூறுகிறது. இப்பூதம் நாளங்காடியில் இருந்தது என்பர். அன்றி யும் இம்மன்னன் இந்திரன் தந்த சிவ மூர்த்தங்களை நிலவுலகத்திலே சில தலங்களில் நிறுவினான் என்றும் கூறுவர். புராணக் கதைகளில் இம் மன்னன் இடம் பெற்றிருக்கிறான்.

இந்திரவிழா : தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்ற பண்டை மன்னனைப் பற்றி மணிமேகலையும் சிலப்பதிகாரமும் உரைக்கின்றன. செம்பியன் என்ற பெயர் சோழர் குலத்து மன்ன ருக்கே உரியது. இம்மன்னன் வானவீதியில் திரிந்து பலர்க்கு இடுக்கண் விளைத்த மூன்று எயில்களை நிலத் தில் இருந்தவண்ணம் படைகளை எறிந்து அழித்தான் என்ற வரலாறு ஒன்று வழங்குகிறது. இவனே இந்திரனை வேண்டி நிலவுலகத்தில் இருபத்தெட்டு நாள் நிகழும் இந்திர விழாவை ஏற்றுக்கொள்ளச் செய்தான் என்று மணிமேகலை கூறும். இச்சோழன் புகார் நகரத்துக்கு உரியவன் என்று சிலப்பதிகாரம் கூறும்.

மனுச் சோழன் : மனுச் சோழன் என்ற மன்னனைப் பற்றி இளங்கோவடிகள் கண்ணகி வழக்குரையிற் பேசுகின்றார். இம் மன்னனும் புகார் நகரிலிருந்தே

அரசாண்டான் என்று இளங்கோவடிகள் உரைக்கின்றார். இவன் திருவாரூரை அரசிருக்கையாகக் கொண்டு அரசாண்டான் என்று பெரியபுராணம் கூறும். மனுச்சோழன் தனது அரும்பெறல் மைந்தன் தேரேறிச் செல்லும்போது ஒரு ஆன் கன்றை அறியாது கொன்ற செய்தியை அறிந்தான். கன்றுக்குத் தாயான பசுவே அரண்மனை முற்றத்துக்கு வந்து அங்குத் தூங்கிய ஆராய்ச்சி மணியைக் கொம்பால் அடித்தது. அம்மணி முழக்கம் கேட்டு வெளிவந்த மன்னன் தன் அருமந்த மைந்தன் இழைத்த குற்றத்தை அறிந்து தேரேறிச் சென்று கன்று இறந்து கிடந்த இடத்தில் அம்மைந்தனையும் தேர்க்காலாற் கொன்று முறை செய்தான்.

**அரசிருக்கை நகர்:** முன்னாளிலே உறையூர் சோழர் அரசிருக்கை நகராக நெடுங்காலம் இருந்தது. கரிகாலனுக்குப் பிறகு புகார் நகரமும் சிறப்புமிக்க அரசிருக்கை நகரமாயிற்று. சேக்கிழார் கருதும் வண்ணம் திருவாரூர்த் திருநகரமும் பண்டைச் சோழர்க்கு அரசிருக்கையாக இருந்திருக்கலாம். உறையூர்க்கு முன்பே திருவாரூர் சிறப்புற்றிருந்திருக்கலாம் என்று நன்மக்கள் கருதுகின்றனர். உறையூரிலும் புகார் இருந்த கடற்றுறையிலும் தருவிளைமையின், முன்பு அங்குப் பெரு நகரங்கள் இருந்த அடையாளம் கிடைப்பதே அருமையாய் இருக்கிறது. திருவாரூரிலும் பழைய சின்னங்கள் இன்று ஒன்றும் காணப்படவில்லை. சங்கச் செய்யுள் விளக்கிய சோழர் பெருமையை இனி நாம் அறிய முயலுவோம்.

# 3. கரிகாலன் முன்னோர்

சோழர் மரபு தமிழகத்திலே என்று அரசாளத் தொடங்கியது என்பதை அறுதியிட்டுரைக்கத் தக்க கருவிகள் இந் நாளில் மிகுதியாய் அமையவில்லை. சங்கச் செய்யுட்கள் வழங்கிய காலத்தை ஒருவாறு உறுதி செய்துகொண்டு அவற்றின் உதவியாற் சோழர் குடியின் பழமையை அளப்பதும் அரிதே. சங்கத்தார், சங்கப்புலவர், சங்கச்செய்யுள் என்ற தொடர் எல்லாம் பொய்க் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே என்று துணிவாரும் இருக்கின்றனர். இந் நிலையிலே சங்கச் செய்யுள் என்ற பெயரால் நாம் அறிந்திருக்கும் புறநானூறு அகநானூறு குறுந்தொகை முதலிய செய்யுட்களின் உதவியால் கரிகாற் பெருவளத்தானுக்கு முன்பு வாழ்ந்த சோழ மன்னர் யாவர் என்பதை அறிய முயலவேண்டும்.

அசோக மன்னன் காலத்திலும் பெரிப்ளஸ் இயன்ற காலத்திலும் பிற மேனாட்டுச் சரித்திராசிரியர் இந்நாட்டில் நடந்த காலத்திலும் உயர்ந்த நிலையில் இருந்த சோழமன்னர் தமிழ் மக்களே என்று துணிய வேண்டும். சோழர் குடி தோன்றிய வழி எளிதில் அறியப்படாததே என்று மலைக்காமல், அத்துறையிலே சிறிது முயன்று பார்ப்போம்.

**தித்தன்:** கரிகால் வளவனுக்கு முன்பு வாழ்ந்த சோழர்களைப் பற்றி விரிவான வரலாறு விளங்கவில்லை ஆயினும், சில செய்திகள் கிடைக்கின்றன. சங்கச் செய்யுட்களிற் பலவாறு சிதறிக் கிடக்கும் குறிப்பு

களைக் கொண்டு இவர் செயல்களை ஒருவாறு உணரக் கூடும். தித்தன் வேண்மான் என்ற பெயர் பூண்ட தலைவன் ஒருவன் சோழ நாட்டில் கடற்கரையிலுள்ள வீரை என்ற ஊரில் வாழ்ந்தான். அவன் சிறிது சிறிதாகப் படை திரட்டித் துணைவரையும் சேர்த்து உறையூரைக் கைப்பற்றிக் கொண்டான். உறையூர் இவன் ஆட்சியிலே பல்லாண்டு இருந்திருக்க வேண்டும். சங்கப் புலவருள் உலக வரலாறு நன்கு உணர்ந்த பரணர் இத்தலைவனைப் பற்றி "இழையணி பணைத் தோள் ஐயைதந்தை மழைவளம் தரும் மாவண் தித்தன்" என்று புகழ்ந்து, பிண்ட நெல்லின் உறந்தை (உறையூர்) இவனுக்கு உரியது என்று பாடுகிறார்.

இப்புலவரே நொச்சி வேலித் தித்தன் உறந்தை என்று மற்றொரு செய்யுளிற் பாடுகிறார். இதனால் அந்நாளில் உறையூர்க்கு அரண் அமையவில்லை என்பதும் விளங்கும். இச்செய்யுட்கள் அகநானூற்றில் உள்ளவை. இவன் மகள் பெயர் ஐயை என்று பரணர் கூறுகிறார். உறையூரில் ஆண்ட சோழர் மரபினருள் தித்தன் மிகவும் பழமையுள்ளவன் என்று துணிய வேண்டும். தித்தனுக்கு ஒரு மைந்தன் இருந்தான். அவன் தன் பாட்டன் பெயரே பூண்டிருந்தான். வெளியன் என்பது அவன் பெயராம். அவன் இளமையில் தந்தையின் வெறுப்புக்கு ஆளாயிருந்தான்.

வெளியன்: முக்காவல் நாட்டு ஆமூர் மல்லன் என்ற பெரு வீரன் ஒருவன் இருந்தான். வெளியன் அவனோடு மற்போர் புரிந்து அவனை வென்று புகழ் பூண்டான். தித்தன் மகன் வெளியன் என்று அடக்க

மாக இருந்த நிலைமாறி, உறையூர் மன்னன், சோழர் குலக் குரிசில், ஆர்புனைமன்னன் என்ற பெருமை பூண்டு, சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி என்ற பெயருக்கும் உரியவன் ஆனன். உறையூரில் அரச மரபைத் தொடங்கிய பெருமை இவனுக்கே உரியதாம் என்று நினைப்பவர் உண்டு. தித்தன் வரலாற்றுக் குறிப்பில் 'இவன் ஒரு சோழன்' என்று புறநானூறு பதிப்பித்த தமிழ்ப் பெருங்கிழவர் உரைத்திருக்கின்றார். ஆதலால் தித்தன் சோழர் குலத்தின் தந்தை ஆகலாம். பரணர் தித்தன் புகழைப் புறத்திலும் அகத்திலும் உரைத்திருக்கின்றார். சாத்தந்தையார் என்ற புலவர் தன் மைந்தன் ஆமூர் மல்லனை வென்ற மற்போர் வெற்றியைத் தித்தன் கண்டு மகிழ வேண்டும் என்று கூறுகின்றார். இப்புலவர் புறத்திற்பாடிய மூன்று செய்யுட்களில் தித்தன் மகன் பெயர் சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி என்றே வருகிறது.

இவ்விருவரும் எக்காலத்தில் உறையூரைப் பற்றி அரசு செலுத்தினர் என்று அறுதியிட்டுக் கூற இயலாதாயினும் கரிகாலனுக்கு முந்திய காலமாக இருக்க வேண்டும் என்று அறிஞர் துணிகின்றனர். சேரர் குலத்தில் இரண்டு கிளைகள் இருந்தது போலவே சோழர் குலத்திலும் இரண்டு கிளைகள் இருந்தன என்றும், ஒரு கிளைக்கு உரியவர் கிள்ளி என்ற பட்டம் பூண்டனர் என்றும், மற்றொரு கிளைக்கு உரியவர் சென்னி என்ற பட்டம் பூண்டனர் என்றும் நினைக்கும் அறிஞர் உளர். கிள்ளியும் சென்னியும்

சோழனைக் குறிக்கும் பெயர்கள் என்றே இன்று உலகம் மதிக்கிறது.

**கிள்ளி மரபு:** சோழன் முடித்தலைக்கோப் பெருநற் கிள்ளி என்ற மன்னனும் வேற்பஃறடக்கைப் பெருநற் கிள்ளி என்ற மன்னனும் உறையூரில் அரசு பூண்ட கிள்ளி மரபினர் ஆவர். இவ்விருவர் வரலாறும் புலவர் பாடல்களால் ஒருவாறு விளக்கமாகியுள்ளது. முடித்தலைக்கோ, உறையூரில் அரசாண்ட வரலாற்றைப் பற்றி விளக்கும் செய்யுட்கள் இல்லை. ஆயினும் இம் மன்னன் உறையூரிலிருந்து ஒரு மதயானைமேல் வஞ்சி நகர் சென்றான் என்றும் அங்கு அன்று அரசு பூண்டிருந்த சேர மன்னனுடன் அமர்ந்திருந்த புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் சேரனும் சோழனும் போர் புரியா வண்ணம் காத்துதவினர் என்றும் ஒரு செய்யுளால் அறிகிறோம். அந்துவன் சேரல் இரும்பொறை என்ற சேரன் சேரருள் மிகப் பழங்காலத்தவன் என்பது சிலர் கருத்தாம். அவனே இச்சோழனை வஞ்சி நகரிற் கண்டவனும்.

வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி என்பவன் இவனுக்குப் பின் அரசாண்டிருக்கலாம். இம் மன்னன் உறையூரில் அடங்கி யிருக்க மனம் இன்றிச் சேர நாட்டிலே படை நடத்திச் சென்று திருப்போர்ப்புறம் என்ற நகர்க்கருகில் உள்ள பறந்தலையிலே குடக்கோ நெடுஞ்சேரலாதனை எதிர்த்தான். இருவருமே அம்பு பட்டு வீழ்ந்தனர். சோழ மன்னன் சிறிது பொழுது உயிர் துடித்துப் பிறகு இறந்தான்.

இத் துயரக் காட்சியைக் கண்ட புலவர் கழாத் தலை யார் பரணர் என்னும் இருவரே; இவ்விருவரும் மிகவும் மனம் வருந்தி இவ்வரலாற்றை விளக்கியுரைக் கின்றனர்.

**சென்னி மரபு:** சென்னியர் வழியில் இன்றளவும் நாம் அறிய விளங்கும் முதல் மன்னன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியே ஆவன். இவன் இளமை அடை பெற்றிருப்பதால் இவனுக்குத் தமையனை சேட் சென்னி என்ற ஒரு மன்னன் அரசுரிமை பூண்டிருந்தானே என்று நினைக்க இட மூண்டு. இளஞ் சேட் சென்னி அழகிய தேர்கள் பல அமைத்து அவற்றின் உதவியோடு போர்க்களம் புகுவதே தொழிலாய் இருந்தான். இவனும் உறை யூரில் அரசாண்டவனே ஆயினும் இளஞ் செல்வன் திருமாவளவனைத் தக்க துணையின்றி விட்டுச் சென் றான் என்றே தோன்றுகிறது. இம் மன்னன் போர்க் களத்தில் இறந்திருக்கலாம். இவன் பின் அரசுக்கு உரிமை பெற்ற கரிகால்வளவன் இளம் பருவத்தே சிறைப்பட்டது இதனாலேயே ஆகும்.

---

# 4. சோழன் கரிகாலன்

சோழர் மரபின் பேரொளி விளக்கமாக விளங்கும் சிறப்புடையவன் கரிகால் வளவனே. இளம்பருவத்தில் இம்மன்னன் திருமாவளவன் என்ற பெயர் பூண்டிருந் தான். இவன் தந்தை பெயர் உருவப்பஃறேர் இளஞ் சேட்சென்னி என்பதாம்.

இளஞ்சேட்சென்னி: இளஞ்சேட்சென்னி புற நானூற்றிலே இரண்டு பாடல்களாற் புகழப்பட்டிருக் கிறான். பரணர், பெருங்குன்றூர் கிழார் என்ற புலவர் இருவர் இவனைப் பாடியுளர். பரணர் இவன் போர்த் திறத்தையே வியந்துரைக்கின்றார். "உனது வாள்கள் குருதிக் கறைப்பட்டுச் செவ்வானம் போல் அழகுற விளங்குகின்றன. வீரக்கழல் அணிந்த உன் தாள்கள் ஆனேற்றின் கொம்பு போன்றன. கேடகங் கள் அம்பு துளைத்ததால் நிலை தவறாத இலக்கம் போன்றன. குதிரைகள் பகைவரைத் தாக்கும் செவ் வாயுடைமையால், மான் முதலிய விலங்குகளைக் கவ்விக் குருதி சிந்தும் புலியை ஒத்தன. களிறுகள் உயிர் உண்ணும் கூற்றையே போன்றன. நீயும் பொன்மய மான தேரின்மேற் பொலிவுற விளங்குவதால் செஞ் ஞாயிறு போலத் தோன்றுகின்றாய். இங்ஙனம் விளங் குதலால் உன் பகைவர் நாடுகள் தாயை இழந்த குழவி கள் போல் ஓயாது கதறும்" என்பது அவர் கூறிய புகழ் மொழியாம்.

பெருங்குன்றூர் கிழார் தமது "வறுமை அறிவைக் கெடுக்கின்றது என்று கூறிச் சான்றோர் அவைய

கத்தே அடைக்கலம் புக்க ஒருவனை அவர் காக்கு மாறு போல நீயும் என் துயர்களைந்து காப்பாயாக" என்று வேண்டுகின்றார். இங்ஙனம் போர்த் திறமும், கொடைச் சிறப்பும் பொருந்தி யிருந்த உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகன் திருமாவளவன் இப்பண்புகளால் 'தந்தையினும் சத மடங்கு தனயன்' என்று புகழ் பெறத் தக்க வாழ்வை நடத்தினான். கரிகாலன் புகழ் விளக்கும் சங்கச் செய் யுட்கள் எட்டுத்தொகையிலும், பத்துப்பாட்டிலும், பதி னெண் கீழ்க்கணக்கிலும் உண்டு. சிலப்பதிகாரமும் இம்மன்னன் பெருமையை விளக்கி யுரைக்கிறது. கரிகால் வளவனைச் சங்கப் புலவருள் எண்மர் பாடியுள்ளர். இம் மன்னனைப் பற்றிய பாடல்கள் இவன் வீரத்தை யும் புகழையும் நன்கு விளக்குகின்றன.

**திருமாவளவன் சிறை:** இளஞ்சேட் சென்னியின் மைந்தன் என்ற காரணத்தாலோ, தாயாதியர் பிறர் அரசுரிமை பெற முயன்ற காரணத்தாலோ இளம் பருவத்திலேயே தந்தையை இழந்து தக்க துணை பெறாது நின்ற காரணத்தாலோ, உலகம் புகழப் பின்னாளில் வாழ்ந்த கரிகாலன் அரசு பெறுமுன் தன் உரிமையை எதிர்த்த பகை மன்னராற் சிறை செய்யப் பெற்றான். தாய்வயிற்றிலிருந்தே தாயம் எய்திய இளஞ் செல்வன் திருமாவளவன் தக்க படைத்துணை பெறாத குறையால் இளமையிலே சிறைக்களத்தில் அடைப் புண்டு வருந்தினான். சூழ்ச்சியால் அரசு பெற்ற பகைத் திறத்தார் சோழ நாட்டைக் கைக்கொண்டு உறை யூரிலிருந்து அரசு நடாத்தினர்.

திருமாவளவனுக்கு ஒரு மாமன் இருந்தார். அவர் சிறந்த புலமை படைத்தவர். பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதியைப் புகழ்ந்த புறப் பாட்டில் 'இரும்பிடர்த்தலை' என்றதோர் தொடர்மொழி வருவதால் இரும்பிடர்த்தலையார் என்ற பெயர் பூண்டார். இப்பெயர் அவரது இயற்பெயரன்று. பிற் காலத்தார் சூட்டிய பெயரே ஆகும். படைத்துணை பகைவர் பக்கம் சேர்ந்து விட்டதால், இப்புலவரும் தம் மருமான் சிறைத்துயரத்தை மாற்ற இயலாதவர் ஆனார். ஆயினும் தக்க துணைதேடும் கருத்தால் மறைவாக உறையூர் நீங்கிக் கருவூர் சென்றார்.

**திருமாவளவன் சிறை மீண்டது :** உறையூரில் திருமா வளவனைச் சிறை செய்த பகைத்திறத்து மன்னன், இளவரசன் உயிரோடு இருப்பானாயின், குடிமக்கள் எழுந்து கிளர்ச்சி செய்து தன் ஆட்சியை ஒழித்து விடக்கூடும் என்று எண்ணிச், சிறைக் களத்துக்கே தீயிட்டான். பண்டைக் காலத்துச் சிறைக் களங்கள் இந்நாளில் இருப்பவைப் போல உறுதியான கற் கட்டடங்கள் அல்ல. சிறைக் களத்திலே பாதலக் கிடங்குகள் பல இருக்கும். மேற்கூரை தென்னை யோலை பனையோலை மூங்கில் முதலிய எளிதிலே தீப்பற்றத் தக்க பொருள்களால் இயன்றிருக்கும். இத்தகையதோர் சிறையில் இருந்த திருமாவளவன் தன் கால்களைப் பிணித்த இருப்புத் தளைகளைத் தகர்த்தெறிந்து நெருப்பினூடே தாவி வெளியே பாய்ந் தான். இருண்ட வேளையிலே தீப்பற்றிய தாயினும் சிறைக்குள் அரசகுமாரன் இருப்பதை அறிந்த

குடிமக்கள் பலர் அங்கு வந்தனர். அவர்கள் வரு முன்னே காலில் நெருப்புண்ட கோலத்தோடு கரிகாலனுகச் சோழகுலக் குமரன் வெளியேறினுன். புண்பட்ட வருத்தத்தை மதியாது இரவோடிரவாய் நடந்து உறையூரை நீங்கிக் கருவூரை அடைந்தான்.

**அரசுவா அரசை அழைத்தல்:** உறையூரிலே குடிகள் சிறைக்களம் தீயுண்டதால் இளவரசன் இறந்தான் என்றே துணிந்து அரசைக் கைப்பற்றிய தாயாதியரை அரண்மனையை விட்டு ஓட்டிப் பெருங்கலகம் செய்து அரசற்றதாக்கி விட்டனர். 'கணப் பொழுதேனும் நாடு அரசின்றி இருக்கக் கூடாது' என்ற சான்ருேர் மொழி கேட்ட நன்மக்கள், அப்பொழுதே அரசுவாவின் துதிக்கையில் ஒரு மாலையைக் கொடுத்தனுப்பி அது யாரை மாலையணிந்து பிடரில் ஏற்றி வருகிறதோ அவனையே அரசனுக்கிக் கொள்வோம் என்று துணிந்தனர். உறையூர் நகரம் பாழ்பட்டதால், நன்மக்கள் கழுமல நகரத்திலே கூடி, இறைவனை வேண்டி, அரசுவாவை மாலையோடு நடக்கவிட்டனர். அது தன் கடமையை அறிந்தது போலக் கருவூர் நோக்கி நடந்து, திருமாவளவனைக் கண்டு, அவனுக்கே மாலையிட்டுத் தன் பிடர்மேல் ஏற்றி அழைத்து வந்தது. இரும்பிடர்த் தலையாரும் விரைவில் உறையூர்க்கு வந்தார்.

உருவப்பஃறே ரிளஞ்சேட் சென்னியின் மைந்தனும் அரசுக்கு உரிமை பூண்டவனுமான திருமாவளவனே வருகின்ருன் என்பதை உணர்ந்த குடிகள்

மனம் மகிழ்ந்து அவனை அரியணையேற்றி, பெரு மக்களால் திரு முடிசூட்டித் தம் நாட்டின் அரசன் என்று ஏற்றுக் கொண்டனர். திருமாவளவன் கரி காலனாகிய செய்தியை நாட்டு மக்கள் அனைவரும் அறிந்ததால், மன்னனான நிலையிலும் அவன் குடி கள் அன்புக்கு உரியவனாகித் தான் உரிமை பெற்று அரசு எய்திய சிறப்பை விளக்கும் பெயரையே பூண்டான்.

**கரிகாலன் அமைச்சர்:** அரசு தாங்கும் பொறுப்பு எளிதன்று என்பதை நன்குணர்ந்த கரிகாலன் தனது நலத்தையே நாடும் மனம் உள்ள பிடர்த்தலைப் பெரியாரை அமைச்சர் ஆக்கிக் கொண்டான். பகைவர் அடங்கியதால் நாடு ஆட்சி அமைதியாகவே நடந்தது. படைஞர் தம் மன்னன் பால் மிக்க அன்பு பூண்டு நாட்டின் நலத்தைக் கருதி உயிர் வழங்கவும் துணிந்திருந்தனர். கரிகாலன் இளஞ் செல்வனே ஆயினும் உறையூர் நகருள் அடங்கி இருந்த நிலையில், அரண்மனையில் இருந்த நூற்கருவூலத்தே நெடுங்கால மாகச் சேமித்து வைத்திருந்த பழைய சுவடிகளை நன்கு படித்து நாட்டின் வரலாறுகளை ஒருவாறு அறிந்துவந்தான்.

**முதியோர் வழக்கு:** இந் நிலையில் முதியோர் இருவர் தமக்குள் நேர்ந்த ஒரு வழக்கைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு, உறையூர் நகரத்திற்கு வந்தனர். அரசனை நேரிற் கண்டு அவனிடம் தம் வழக்கை உரைத்து, முடிவு கேட்க வேண்டுமென்பதே அவ் விருவரும் கொண்ட கருத்தாம். அரண்மனைக்கு வந்த முதுமக்கள்

இருவரும் வாயில் காவலரிடம் தம் கருத்தைச் சுருக்கமாய் உரைத்து, அரசனைக் காணவேண்டும் என்று தெரிவித்தனர். காவலர் அவ்விருவரையும் கரிகாலனிடம் சேர்த்தனர். மன்னர்க்குரிய பீடத்தில் அமர்ந்திருந்த அவ் விளஞ் செல்வனை நோக்கிய இருவரும் "அரசே நீடு வாழ்க! சோழநாடு நலம் பெறுக!! சோழகுலம் மேன்மேலோங்குக!!!" என்று கூறிவிட்டு, வெளியே புறப்பட முயன்றனர்.

மன்னன் முதியவரை நோக்கிப் "பெரியீர், நீவிர் இருவீரும் உறையூரில் அரண்மனை வாயில் வரை வந்து மனக் குறையோடு மீள்வதாகத் தோன்றுகிறதே; இங்கு என்ன நோக்கத்தோடு வந்தீர்? நிறைவேற வேண்டிய எதனையும் அரசரிடம் தெரிவிக்காமல், உங்களைப் போன்ற பெரியோர்கள் இங்கிருந்து மீண்டு போகும் வழக்கம், இன்றளவும் இவ்வரசில் இல்லை; கருத்தைத் தெரிவிக்கலாமே" என்று கூறினன். முதியவர் இருவரும் கைகுவித்து, "அரசே! நாங்கள் ஒரு வழக்கை உரைத்து முடிவுபெறவே வந்தோம். இத்துணை இளஞ் செல்வராய் இருக்கும் அரசர் வழக்கைக் கேட்கவும், முடிவுரைக்கவும் தக்கவர் ஆகார் என்று எண்ணியே மீள்கின்றோம்" என்றனர்.

கரிகாலன், முதியோர் மொழிகேட்டுப் புன்னகை புரிந்தான். "ஐயன்மீர்! அறங்கூறவையத்தாற் புகழ் பெற்ற உறையூர்க்கு வந்து, சோழ மன்னர் அரண்மனைப் படியேறி அரசவையளவும் வந்தபிறகு, 'எமது வழக்குக்கு உரிய தீர்ப்பு அகப்படுவது அரிது' என்று கருதி நீங்கள் போவது இவ் வரசகுலத்தின் புகழை

அழிப்பதாம். முதியவர் வழக்கை முதியவரே கேட்டல் வேண்டும் என்ற நியாயத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். பெரியோர்களே, இந் நாட்டை ஆளும் அரசர் நரை, திரை, மூப்பால் தளர்ந்த முதியவரே. அவர் அரண்மனைக்குள் ஒரு தனி இடத்தே இருக்கிறார். நான் அவர் விரும்பிய வண்ணம் அரசப் பொறுப்பில் உதவி புரிகின்றேன். சற்றே அமர்ந்திருங்கள். ஏவலர் உங்களை முதிய மன்னரிடம் அழைத்துச் செல்வார்கள். நானும் அவர்க்கு உங்கள் வரவைத் தெரிவிக்கிறேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

முதியோர் இருவருமே ஏவலர் உதவியால் அரசர் இருந்த அறையை அடைந்தனர். நரைத்துப் பழுத்த அரசர் பெருமானைக் கண்ட முதியவர் இருவரும் தம் வழக்கைத் தெளிவாக உரைத்தனர். அரசரும் இருவர் வழக்கையும் முறையே கேட்டு, எள்ளுக்காய் பிளந்தது போல், இருவரும் பொருத்தம் என்று கருதத்தக்க முடிபைக் கூறினர். முதியவர் இருவரும் அரசரை வணங்கி விடைபெற முயன்றனர். அப்பொழுது முதிய அரசர் அவர்களை நோக்கி, "அன்பர்களே, உங்கள் வழக்கு முறைப்படி தீர்ந்தது. இனி நீங்கள் விடைபெற வேண்டும். வாதி பிரதிவாதி என்ற இருவருமே இணங்கி யேற்கும் முடிபு கூறுதற்கு, அற நூல் அறிவும் உலக அநுபவமும் வேண்டும் என்பது உண்மையே. உங்களை நோக்கி ஒன்று கூற விரும்புகிறேன். 'முதுமையே வழக்கறியச் சிறந்த தகுதி யுடையது' என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனல் இளமை இப்பொறுப்பை

ஏற்கத் தகுதி யற்றது என்று நாமே முடிவு செய்யலா காது. இளமை யுடலுள் முதுமை யறிவு இருப்பதும் முதுமை யுடம்பினுள் இளமை யறிவு இருப்பதும் எங்கும் காணத்தக்க காட்சிகளே ஆகும். உங்கள் வழக்கைத் தீர்த்த முதிய அரசருக்கு நீங்கள் வணக்கம் நன்றி அன்புரை எல்லாம் கூறுகின்றீர்கள். இம் முதிய அரசரே இளம் பிள்ளை என்று அறிந்தால் உங்கள் மனம் என்ன பாடுபடும்! என்னைப் பாருங்கள்," என்று கூறி நரை முதுகோலத்தைக் களைந்து தன் இயற்கைக் கோலத்திலே திருமாவளவன் காட்சி கொடுத்தான்.

முதியவர் இருவரும் சோழர் குலக் குரிசிலை நோக்கி மனம் மருண்டனர். இரு கரங்களையும் கூப்பி அரசிளஞ் சிங்கத்தை வணங்கி "அரசே, நாங்கள் அறியாது கூறிய சொற்களைப் பொறுத்தருள வேண்டும். 'சோழர் குலத்திலே தோன்றிய இளஞ் செல்வர்க்கு அற நூல் நுணுக்கம் தெரியாது' என்று நாங்கள் கருதியது குற்றமே யாகும். வழக்கைக் கேட்ட அழகை வியப்பேமா! விரைவில் அதற்குரிய முடிபு கூறிய நுண்ணறிவுத் திறத்தை வியப்பேமா!! 'குல வித்தை கல்லாமற் பாதி' என்ற பழமொழியின் பொருளை இன்று நன்றாக உணர்ந்து கொண்டோம். விடை பெறுகின்றோம்" என்று கூறி வணங்கிச் சென்றனர்.

**வெண்ணிப் போர் வெற்றி:** அகப் பகைவர் சூழ்ச்சியால் அரசை இழந்து சிறை புகுந்து இறைவன் அருளால் மீண்ட கரிகாலன் தனது ஆட்சிக்குள்

இருந்த சோழ நாட்டில் மறவர் வன்மையை வளர்க்க முயன்ருன். போர்ப் படையைச் சிறிது சிறிதாகப் பெருக்கினுன். நாட்டின் செல்வநிலை நலம்பெற வேண்டிய முயற்சிகளையும் செய்தான். இங்ஙனம் இளஞ் சிறு மன்னன் தனது அரசாட்சியை வலி யுறுத்த முயல்வதை அறிந்த பெருஞ் சேரலாதனும் பாண்டியனும் அவருக்குத் துணையாகச் சேர்ந்த வேளிர் பதினொருவரும் பெரும் படையோடு சோழ நாட்டுட் புகுந்தனர். கரிகாலன் 'நீருள் இருக்கும் முதலை, யானைப் படை திரண்டு வந்தாலும் அஞ்சாது' என்ற உண்மையை விளக்கச் சித்தம் ஆயினுன். தன் படையை நன்கு பயிற்சி பெறச் செய்து உறையூர்க்குப் புறத்தே நடத்திச் சென்ருன். பகைப் படை வெண்ணிக்கு அருகே வந்து விட்டது. அந் நாளில் அவ்வூர்க்கு அருகே பெரியதோர் வறு நிலம் இருந்தது. அதுவே அன்று போர்க்களமாக உதவி யது. இப்போர்க்களம் கரிகாலன் புகழோடு பொருந்தி இன்றும் நினைக்கத் தக்கதாய் உள்ளது.

வெண்ணிப் பறந்தலையிலே பகைப்படை திரண்டு புகுந்தது. சேரமான் பெருஞ்சேரலாதன் கரிகாலனது இளமையைச் சிறிதாக எண்ணியே போர்க்குப் புறப்பட்டான். தான் தனியே போர்க்கு வருவதைக்காட்டிலும் பாண்டியன் உதவியோடு வரு வது நன்றென்று கருதியே, அவனையும் சேர்த்துக் கொண்டான். தனக்கு அடங்கிய வேளிர் பதினொரு வரைப் படைத்துணையாக அழைத்து வந்தான். கரிகால்வளவன் வெண்ணிப்பறந்தலையிலே பகைப்

படை திரண்டதை அறிந்து தன் படையோடு விரைந்து சென்றான். போர்த்தொழில் நூல்களை நன்கு பயின்ற பயிற்சியால் தனது படையை மனத்தளர்ச்சியின்றி முன் நடத்திச் சென்றான். ஆறு நாட்களில் போர் முடிந்தது. பாண்டியன் இறந்தான்; வேளிருட் பலர் இறந்தனர்; எஞ்சியவர் மறைந்தனர். படைஞரிற் பெரும்பாலோர் களத்திலே பிணமாயினர். பலர் மாறுவேடம் பூண்டு ஓடினர். பெருஞ்சேரலாதன் போர்க் களத்திலே படை நடத்தியிருக்கையில் புறப் புண்பட்டான். அதனால் அவன் மனம் வருந்தி அக் களத்திலேயே வடக்கிருந்து உயிர்விட்டான். கரி காலன் வெற்றியோடு உறையூர்க்கு மீண்டுவந்தான்.

மன்னர் இருவரோடு சேர்ந்து போர் தொடுத்த பதினொரு வேளிர் படைத்திறனை முறியடித்த கரிகா லன் அரசிருக்கை நகர்க்கு வந்ததும் நாட்டின் எல்லையை வளர்ப்பதற்கும் மக்கள் செல்வப் பெருக்கை வளர்ப்பதற்கும் வழி துறைகளை ஆராய் வானாயினான். உறையூர் இனி வளர இடம் இன்றி இருந்ததால் வேறொரு புது நகரம் வகுப்பதே சிறப் பென்று துணிந்தான். நாட்டின் செல்வமும் வாணி கமும் தொழிற்றுறைகளும் வளர்ப்பதற்குக் கடற்கரை யிலே ஒரு பெரும் பட்டினம் தன் வசம் இருத்தல் நலம் என்று நினைத்தான். படைத்திரளும் அரசன் பண்பை அறிந்து அவனிடம் உயிரன்பு பூண்டு வளர்ந்து வந்தது.

படையுதவியால் வாகைப் பறந்தலையில் ஒன்பது மன்னரை வென்றான். இரும்பிடர்த்தலையார் என்ற

சிறப்புப் பெயர் பூண்ட பெரும் புலவர் அமைச்சுரிமை பூண்டிருந்ததால் அரசனுக்குத் தமிழ்ப் புலவர் குழுவிலே பயிலும் விருப்பம் எழுந்தது. புலவர் பலர் உறையூர்க்கு வருதலாயினர். பிடர்த்தலைப் புலவரைத் தலைவராகக் கொண்ட சோழர் தமிழ்ச் சங்கம் வளர்வதாயிற்று. புலவர் பலர் அமைச்சரையும் அரசனையும் கண்டு, தமது புலமைத் திறத்தைத் தக்கவாறு விளக்கி, அரசன் உவந்து கொடுத்த பரிசில் பெற்றுச் சென்றனர். சோழநாடு புலவர்க்குத் துறக்கம் ஆயிற்று. இம்மையிலேயே துறக்கத்திற் பெறும் இன்ப வாழ்வு பெறலாம் என்பதைப் புலவர் பலர் கூடி அளவளாவி, அரசன் செய்த சிறப்புக் களால் அறிந்து, மகிழ்ந்தனர். சோழர் குலத்தின் புகழ் தமிழகம் எங்கும் பரவியது. புலவருள் வேளாளர், வணிகர், குயவர் முதலிய இனத்தினரும் ஆண்பாலரே அன்றிப் பெண்பாலரும் குழுமி மகிழ்ந்து பொழுது போக்கினர்.

பொருநர் ஆற்றுப் படை: முடத்தாமக் கண்ணியார் என்ற பெண்பாற் புலவர் கரிகாலன் பெருமை விளங் கப் பொருநராற்றுப்படை என்ற பாட்டைப் பாடினார். உறையூரில் அரசவையிற் கூடியிருந்த புலவர் பலரும் கேட்க அதனை அரங்கேற்றி அரசன் செய்த சிறப்பை உவப்போடு ஏற்றுக்கொண்டார். ஆண்மக்களே புலமைச் செல்வம் பெறத்தக்கவர் என்ற குறுகிய நோக்கம் இல்லாதிருந்த அந்நாளில் கரிகாலன் அவைக்களத்திற் பெரும் பரிசில் பெற்ற முதற்புலவர் முடத்தாமக் கண்ணியாரே ஆவர்.

**புகார்நகர் அமைவது:** கடற்கரையருகே பெரிய அரசிருக்கை நகரம் அமையவேண்டும் என்ற எண்ணம் கரிகாலன் மனத்தே வலி பெற்றது. சேர மன்னர் வஞ்சிமாநகரத்தைத் தமக்குரிய தலைநகராய்க் கொண்டு கடற் கரையால் வரும் நலன்களை யெல்லாம் பெறுவதை அறிந்தான். பாண்டிய மன்னர்க்குக் கொற்கை கடற் கரைப் பட்டினமாக உதவுவதையும் உணர்ந்தான். சேர பாண்டியர்க்கு வாய்த்தது போலவே சோழர்க்கும் ஒரு கடற் றுறைப் பட்டினம் வேண்டும் என்று முடிவு செய்து காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் உள்ள புகார்ப் பட்டினத்தையே அரசிருக்கையாக்கத் துணிந்தான்.

சிற்பிகளிற் சிறந்த சிலரை அமர்த்திப் புகார் நகரம் அமைக்க ஏவினன். மருவூர்ப் பாக்கம் பட்டினப் பாக்கம் என்ற இரு பகுதிகளாகப் புகார் நகரம் அமைந்தது. மருவூர்ப் பாக்கத்தில் மாளிகை வகை களும், யவனர் இருக்கையும், கடற்கரையும், நகர வீதியும், வணிகர் வீதியும், கூல வீதியும், ஊன்விற்கும் இருக்கையும், கஞ்சகாரர், செம்பு கொட்டிகள், தச்சர், கொல்லர் முதலிய மக்கள் வாழும் தெருக்களும், இசைக்கலை பயின்றவர் வாழும் பெரும்பாணிருக்கை யும் பிற தொழிலாளர் வாழும் இடங்களும் அமைந் தன.

பட்டினப் பாக்கத்திலே, கோவியன் வீதியும், கொடித்தேர் வீதியும், பீடிகைத் தெருவும், பெருங்குடி வாணிகர் வாழும் மாட வீதியும், மறையோர் வாழும் வீதியும், உயர்குடி உழவர், ஆயுள்வேதியர், கால

கணிதர் முதலியோர் வாழும் இடங்களும், மணிகுயிற்று வோர், வளைபோழ்பவர் வீதியும், சூதர், மரகதர், வேதாளிகர், நாழிகைக் கணக்கர் முதலியோர் வாழும் இடங்களும், குதிரை செலுத்துவோர், யானைப் பாகர், தேர் நடத்துவோர், காலாட் படைஞர் முதலிய வீரர் வாழும் தெருக்களும், பிற பெரியோர் வாழும் தெருக்களும் இருந்தன. இங்ஙனம் அமைந்த நகரத்திலே செல்வச் சிறப்பும், கல்விச் சிறப்பும் விளங்க, நல்ல நாளிலே, கரிகாலன் நகர்க்கு நடு நாயகமான அரண்மனையிற் குடிபுகுந்தான். உறையூரிலும், புகாரிலும் அரசர்க்கு உரிய இருக்கைகள் இருந்தன ஆயினும் கரிகாலன் பெரும்பாலும் புகார் நகரிலே புலவர் குழுவோடு வாழ விரும்பினான்.

**வடநாட்டுப் போர்:** கரிகால் வளவன் தனது அரசியற் சிறப்புக்கு ஏற்ற நகரம் அமைந்ததும், நெடுங்காலமாக உண்டு கொழுத்திருக்கும் தன் படைஞர்க்கு ஏற்ற பணிகள் தேட முனைந்தான். தமிழகத்தின் குறுகிய எல்லைக்குள்ளே தன்னை எதிர்த்துப் போர் புரியவல்ல அரசர் இன்மையை உணர்ந்த கரிகால் வளவன் போரிலே பேராசை பூண்டு, வடநாடு அகன்ற பெருநாடாதலால் அங்குள்ள அரசர்களோடு சமர்புரியக் கருதி, நல்ல நாளிலே வாளும், குடையும், முரசும் முன்வைத்துத் தனது போர்த்தினவு மிக்க தோள்களுக்கு ஏற்ற பகைவரை வடதிசை யாயினும் தருக என்று தன் வழிபடு தெய்வத்தை வணங்கிப் புறப்பட்டான்.

விந்தியமலையை எளிதிற் கடந்து, இமயவரையை அணுகிய மன்னன் அதன்மேற் செல்ல இடம்பெறாது

தடைபட்டதால், இமயத்துச்சியில் தனது புலிப்பொறியைப் பொறித்துத் தென்னாட்டுக்கு மீண்டான். இமயமலையளவும் இம்மன்னன் வந்து தனது வெற்றிக்கொடி நாட்டியதைச் சிலப்பதிகாரமும், கலிங்கத்துப் பரணியும் விளக்கி யுரைக்கின்றன. கலிங்கத்துப் பரணியிலே கரிகாலன் இமயத்தைச் செண்டால் அடித்த செய்தியும் வருகிறது. செண்டு என்று வழங்கிய படையை இம் மன்னன் வடநாட்டுப் போர்க்குப் புறப்படு முன்பு காஞ்சிமா நகரில் கோயில்கொண்டிருக்கும் காமக்கோட்டி அம்மையிடம் காவற்றொழில் பூண்டிருக்கும் சாத்தனிடம் வேண்டிப் பெற்றான் என்று ஒரு பழஞ் செய்யுள் கூறுகிறது. இவ் வரலாறுகளால் கரிகாலன் இமயத்தெல்லை வரையிற் சென்று மீண்டது தெளிவாகும்.

திறைப் பொருள்: சோழன் கரிகாற் பெருவளத்தான் வட நாட்டிலிருந்து மீண்டு வரும்போது சோணையாற்றங்கரையில் உள்ள வச்சிர நாட்டின் மன்னன் வணங்கித் திறையாகக் கொடுத்த கொற்றக் குறியான முத்துப் பந்தரைப் பெற்றுக்கொண்டான். மகத நாட்டுக்கு வந்து அந் நாட்டு மன்னன் போர்க்களத்தில் ஈடுகொடுக்க இயலாது கொடுத்த பட்டி மண்டபத்தையும் பெற்றுக்கொண்டான். பின்பு, அவந்தி நாட்டுக்கு வந்து அந் நாட்டின் மன்னன் நண்புரிமை பூண்டு, தந்த தோரண வாயிலையும் பெற்றுக்கொண்டான். சிற்பச் சிறப்பு அமைந்த இம் மூன்று பொருள்களும் மயன் செய்தவை யென்றும், திறைதந்த மன்னர் முன்னோர் அவனை உவப்பித்துப் பெற்றவை என்றும்

கூறுவர். இவற்றைத் தன் பெரும் படையின் உதவியால் புகார் நகரத்துக்குக் கொண்டு வந்து தக்க இடங்களில் நிலைக்கச் செய்தான்.

**மணமும் வாழ்வும்:** கரிகாலன், நாங்கூர் வேளின் திருமகளை மணம் புரிந்து, அமைச்சர் சொற்கேட்டுப், புலவரொடு அளவளாவிப் புகார் நகரில் இன்புற வாழ்ந்து வந்தான். புலவர் பலர் மதுரையில் இருந்த தமிழ்ச் சங்கம் போலவே புகார் நகரத்திலும் ஒரு சங்கம் தோன்றிற்று என்று உலகம் வியக்கும்படி கூடினர். கடியலூர் உருத்திரங் கண்ணனர் என்ற புலவர் பெருமான் கரிகாலனது பெருமையை என்றும் உலகம் அறியத் தக்கவாறு ஒரு பெரும்பாட்டு இயற்றினர். அதனைப் புலவர் இடையே கரிகாலன் வீற்றிருக்க இரும்பிடர்த் தலையார் செவிசாய்த்து இன்புற அரங்கேற்றினர். அப்பாட்டைக் கேட்ட அரசர் பெருமான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. பெரும்பான்மையும் வஞ்சியடிகளால் இயன்ற இப்பெரும் பாட்டு, சங்கச் செய்யுட்களில் பத்துப்பாட்டு என்ற வகையிலே மிக்க சிறப்புற்று விளங்குகின்றது. புலவர் மண்டலத்தின் நடுநாயகமாக வீற்றிருந்து கரிகாலன் இப்பாட்டின் மூந்நூற்றேரடிகளையும் செவி குளிர உள்ளத்தில் அமுதூறக் கேட்டான். கேட்டதும் நிதிச் சாலையைத் திறந்து பொன் நாணயங்களைக் கொணரச் செய்து, புலவரைப் பீடத்தில் அமர்த்தி ஒரு முகூர்த்த காலம் கனக அபிடேகம் செய்தான். அதனல் அவர் பெற்ற செல்வம் பதினறு நூறுயிரம் பொன் என்று கலிங்கத்துப் பரணி கூறுகிறது.

**கரிகாலன் அரசியல்:** கரிகால் வளவன் அரசியல், நாட்டு மக்களுக்கு எல்லா நலங்களையும் விளைப்பதாக அமைந்திருந்தது. காவிரி நீர் வேளாண்மைக்கு நன்கு உதவுமாறு அணைகள் அமைத்தான். காவிரி வாய்க் கால்கள் பழனங்களுக்கு வேண்டுமளவு பாயும்படியும் செய்தான். குடிகள் தம் மனக்கருத்துக்களை அரச ரிடம் எளிதில் முறையிட்டுக் கொள்ள இடம் தந்தான். நாடு முழுவதும் பற்பல கோட்டங்களாகப் பிரித்து அங்கங்கு வாழும் மக்களே தமக்கு வேண்டிய நலங் களை இயற்றிக்கொள்ள இடம் தந்தான். நகரம் மேன் மேலும் செல்வம் செழிப்ப வளர்ந்தது. கடற்றுறை வாணிகம் ஓங்கி உயர்ந்தது.

நிலவாணிகத்தாற் பெரும் பொருள் திரட்டிய வணிகரை அரசன் பாராட்டி மாசாத்துவான் என்று பட்டம் அளித்தான். கடல் வாணிகத்தாற் பெரும் பொருள் திரட்டிய வணிகர் மாநாய்கர் என்ற பட்டம் பெற்றனர். கடற்றுறை வாணிகத்தாற் பெரும் பொருள் ஈட்டிய வாணிகரை மிகவும் மதித்து ஆத ரித்து, எட்டி என்ற பட்டம் தந்து, அதற்கு அடையாள மாக எட்டிப் பூவும் தந்தான். எட்டிப் பட்டம் பெற்ற வாணிகர் பலர் அந்நாளில் இருந்தனர். எட்டிப் பூ பொன்னால் இயன்றதாய், பொன்னணிலே கோத்துக் கழுத்தில் அணியப்பட்டது. இயற்றமிழ்ப் புலவரைச் சங்கம் சேர்த்து ஆதரித்ததே யன்றி, இசைத் தமிழ் நாடகத் தமிழ் வல்ல புலவர்களையும் அவர்க்கு ஏற்ற மதிப்பு அளித்து ஆதரித்தான். கலையை நன்கு பயின்று தேர்ந்த பெண்மணிகளையும் அரங்கேற்றம்

புரிய அரண்மனைக்கு அழைப்பித்து அவர்கள் கலைத் திறத்துக்கேற்ற சிறப்புச் செய்தான்.

**கரிகாலன் மக்கள்:** மன்னன் கரிகாலன் சேட் சென்னி நலங்கிள்ளி, மாவளத்தான் என்ற இரு மைந்தர்களைப் பெற்ருன். ஆதிமந்தி என்ற மகளையும் பெற்ருன். மக்கள் மூவரும் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினர். ஆதிமந்தியார் இளம் பருவத் திலே சேர குலத்தானுகிய அத்தி என்ற வீரனை மணந்தார். புலமை சிறந்த இப் பெண்மணி பாடிய பாடல்கள் சங்கச் செய்யுட்களில் உண்டு. இவரைப் பற்றிப் புலவர் பாடிய பாடல்களும் உண்டு. கழார்ப் பெருந்துறையில் ஆட்டன் அத்தி காவிரி நீரில் நீந்தும் பொழுது கடல் நீராற் கவரப்பட்டான். மருதி என்ற தோழி அவன் இருக்கும் இடம் காட்டத் துணையாயி ஞள். ஆதிமந்தியார் நெடுந்தொலை அவனைத் தேடிக் கடலிலே கண்டு உயிரோடு அழைத்து வந்தார். கரிகாலன் மருகன் உயிர் உய்ந்து மீண்டுவந்த செய்தி கேட்டு மனம் மகிழ்ந்தான். முதுமைப் பருவம் வரையில் இருந்த மன்னன். இளவரசுப் பட்டத்தை உறுதி செய்யாமல் இறந்ததால் அவனுக்குப் பிறகு அரசுரி மைப் போராட்டம் தொடங்கியது.

## 5. நலங்கிள்ளி

சேட்சென்னி நலங்கிள்ளி என்ற பட்டம் பூண்ட சோழ மன்னன் புலமையும் புகழும் மிக்கவன். கரிகாலனுக்குப்பின் அரசுரிமை பூணவந்த இவனுக்கு அரசு கிடைப்பது எளிதாகத் தோன்றவில்லை. சேரன் செங்குட்டுவன் வரலாற்றில் ஒரு செய்தி வருகின்றது. சோழ நாட்டு அரசுரிமையைக் கைக்கொள்ளும் பொருட்டு ஒன்பது இளவரசர் போர்புரிந்தனர். முறையால் அரசேற்கத்தக்கவனை அரியணை யேற்றும் பொருட்டுச் சேரன் செங்குட்டுவன் தனக்கு நெருங்கிய உறவினனான இளவரசனுக்கு உதவிபுரிந்தான். அவ் வுதவியால் அரசு பெற்றவன் சேட்சென்னி நலங்கிள்ளியாய் இருக்க வேண்டும் என்பது சரித்திரம் வல்லார் கருத்தாம்.

நலங்கிள்ளி சூளுரை: புறநானூற்றில் நலங்கிள்ளி சிறந்த வீரனாகவும் புலமை படைத்த புரவலனாகவும் காட்சி தருகின்றான். அவன் அரசு ஏற்றுக்கொள்ள முன்வந்தபோது சில இடையூறுகள் இருந்திருக்கலாம் என்று அவனே பாடிய சூளுரைச் செய்யுள் விளக்கும். நலங்கிள்ளி உரிமையைக் கைக்கொள்ளப் பலர் முயன்றார் என்பதும் அப்பாடலால் வெளியாகின்றது. சோழர் குலக் குரிசிலான நலங்கிள்ளி கூறும் சூளுரை அவனது உத்தம குணத்தைத் தெளிவாக்குகின்றது. அவன், "இன்று என்னை அரசுரிமை காரணமாக எதிர்க்கத் துணிந்திருப்பவர்கள் மெல்ல வந்து என் அடியிலே வீழ்ந்து 'ஐயா எமக்கு உனது உரிமையை

ஈந்தருள்க' என்று வேண்டுவாரே ஆயின், முரசு முழங்கும் இந்த அரசச் செல்வம் ஒரு பொருட்டோ? எனது உயிரையே கேட்டாலும் தருவேன். ஆற்றல் உள்ளவர் திறத்தை அறியாமல் எனது உள்ளத்தின் உறுதியை இகழ்ந்து எதிர்க்கத் துணிந்தவர் உறங்குகின்ற புலியை இடறிய குருடன் போல உயிரோடு மீள்வதே அரிதாம். கரும்பைத் தின்னுகின்ற மத யானையின் காலின்கீழ் அகப்பட்ட மூங்கில் மிஞ்சுமா? யானை வலிய உறுதிவாய்ந்த அம் மூங்கிலையைத் தகர்த்தெறிந்தே தன்சினம் தணிவது போல என் பகைவர் வருந்தும் வண்ணம் போர்புரியேனாயின் தீது இல்லாத தூய மனதிலே மெய்க்காதல் பூணாத பலவகையிற் புனைந்த கூந்தல் உள்ள பொதுமகளிரைத் தழுவி என் மாலை வாடுவதாக' என்று சூளுரைத்தான்.

இதனால் அவன் ஒழுக்கச் சிறப்பும், மனப் பண்பும், வீரத் திறமும் நன்கு புலப்படுகின்றன. முதற்கண் பலரைக் குறிப்பதாக எழுந்த செய்யுள் பிறகு ஒருவனைக் குறிப்பதாக முடிவதில் ஒரு உண்மை மறைந்துளது. செங்குட்டுவன் வரலாற்றில் வருவது போலவே இச்சோழனை அரசு கருதி எதிர்த்தவர் பலரே. அவருள் ஒருவன் மற்ற எல்லாரும் முறியடிக்கப்பட்டும் நெடுங்காலம் வரை இவனுக்குத் துன்பம் விளைவித்துக் கொண்டிருந்தான். அவன் பெயர் நெடுங்கிள்ளி என்பதாம். நலங்கிள்ளி வரலாற்றோடு அவன் செயல்கள் இணைந்தேயிருப்பதால் அவற்றை ஆராய்ந்து தெளியலாம். ஒன்பது இளவரசர்கள் நேரிவாயில் என்ற போர்க்களத்தில் அழிந்தனர் என்பது சிலப்பதிகாரத்தாலும் பதிற்றுப்பத்தாலும் விளங்கும்.

**நெடுங்கிள்ளி பகைமை:** கரிகாற் பெருவளத்தான் மகன் என்றே சரித்திர ஆசிரியர் கருதுகின்ற நலங் கிள்ளி அரசை யேற்றுக்கொண்டு புகார் நகரத்தில் இருந்தான். உறையூர், ஆவூர் என்ற இரு நகரங்களை நெடுங்கிள்ளி கைப்பற்றிக்கொண்டான். நலங்கிள்ளி படைத்திறத்தை நன்கு அறிந்திருந்த நெடுங்கிள்ளி உறையூர் அரணை அடைத்து அகத்தே இருந்தான். அவனிடம் படைத்திறன் மிகுந்திருந்ததாக உரைக்க இயலவில்லை. நகர மக்களும் அவனிடம் அன்பு பூண்டு அவன் அரசு பூண்பதை யேற்றுக்கொண்டார் என்று கூற இயலவில்லை. ஆயினும் அவன் தன் கையில் அகப்பட்ட நகரங்களைத் தானே ஆள்வதாகத் துணிந்து படை திரட்டவும் புறப்பட்டான்.

நேரிவாயிற் போரிலே செங்குட்டுவன் படைத் துணையால் வெற்றி பெற்று அரியணை யேறிய சேட் சென்னி நலங்கிள்ளி, ஆவூரும், உறையூரும் நெடுங் கிள்ளி வசத்திலிருப்பதை உணர்ந்ததும் படைத் திரளோடு புறப்பட்டு வந்தான். நலங்கிள்ளி போருக்கு வருவதை ஒற்றரால் உணர்ந்த நெடுங்கிள்ளி தன் படை வன்மை பற்றாது என்பதை நன்கு உணர்ந்து உறை யூரிற் படைகளை நிறுத்திவிட்டு ஆவூரில் வந்து அரண் வாயிலை அடைத்து உள்ளிருந்தான். அரண் பாழ் படுவதை விரும்பாத நலங்கிள்ளி, அரணை அழிக்கும் படைகளை ஏவாமல், தம்பியை அங்கு படையோடு அனுப்பினான். சோழநாடு இங்ஙனம் அகப்பகையால் இடர்ப்படுவதை அறிந்த கோவூர்கிழார் என்ற புலவர் ஆவூர்க்கு விரைந்து வந்தார். புலவர்க்கே அமைந்த

சிறப்பு உரிமையால் அவர் அரணுக்குள் நுழைந்தார். அங்கு அரண்மனையிலே சோம்பியிருந்த நெடுங்கிள்ளியைக் கண்டார்.

**புலவர் அறம் உரைப்பது:** கோவூர் கிழார் நெடுங்கிள்ளிக்கு நல்லது கூற நினைத்து அவன் முன் நின்று "ஐய, பகைவர் நெருங்குதற்கு அரிய வன்மையுள்ள குதிரைகளையுடைய பெரு வீரனே! இவ்வரணுக்குள் இருக்கும் நிலைமையை அறியாயா? பிடிகளோடு களிறுகள் குளத்திற் குளிக்கவில்லை. நெய் கலந்த நெல்லஞ் சோறு உண்ணவில்லை. கட்டுத் தறியில் மோதி நிலத்திலே துதிக்கை புரள நெடுமூச்சு விடுகின்றன. வருத்தம் மிக்கு முழங்குகின்றன. பால் பெறாத குழவிகள் கதறுகின்றன. பெண் மக்கள் பூ இல்லாத வெறுங் கூந்தலைச் சுருட்டி முடிக்கிறார்கள். பெருமனைகளில் தண்ணீர் இல்லையே என்ற கூக்குரல் எழுகின்றது. துயரக் காட்சிகள் சூழ்ந்திருக்கும் நிலையில் நீ ஒன்றும் அறியாதவன் போல் இருப்பது வருந்தத்தக்கது. நீ அறம் உணர்ந்தவனாய் இருந்தால் இவ்வரண் உன்னுடையதே என்று கூறி நலங்கிள்ளி வருமாறு திறந்து விடுக. மறம் மிக்க வீரன் ஆயின் போர் புரியத் துணிந்து எழுக. இரு திறமும் இல்லாது இவ்வண்ணம் திறவாமல் அடைத்த திண்ணிய நிலையுள்ள கதவுகளின் பின்னே ஒடுங்கியிருத்தல் நாணத்தக்கதே" என்றார்.

நெடுங்கிள்ளி, கோவூர் கிழாருக்குச் சோழ நாட்டில் இருந்த மதிப்பை நன்கு அறிந்தவன். ஆதலால் அவர் கூறிய நன்மொழியைச் செவிசாய்த்துக்

கேட்டான். நலங்கிள்ளியை எதிர்க்க இயலாது என்று நன்கு அறிந்து ஆவூர் அரணை விட்டு உறையூர்க்கு ஓடினான். அவன் துணைவரும் அவனு டன் பறந்தனர். ஆவூர் எளிதாகத் தன் வசம் ஆனதை அறிந்த நலங்கிள்ளி மனம் மிக மகிழ்ந்து புலவரைப் பாராட்டினான்.

ஒரு நாட்டு மக்கள் இருகட்சியாகப் பிரிந்து போர் புரிந்து மாய்வது அவன் மனத்துக்கு உவப்பாய் இல்லை. நெடுங்கிள்ளி அரசுரிமை தனக்கு வராது என்ற உண்மையை உணர்ந்தும் இங்ஙனம் செய்வது கண்டு மனம் வருந்தினான். ஆவூரிற் புகுந்து மக்கள் மனத்தளர்ச்சியை மாற்றி, அவரவர்க்கு வேண்டிய பொருள்கள் எளிதில் அகப்படும்படி செய்து, ஆட வரும் பெண்டிரும் தன்னை வாழ்த்த அங்கு இரண்டு மூன்று நாட்கள் இருந்தான். அக் குறுகிய காலத் துள் நெடுங்கிள்ளி உறையூர்க்குட் புகுந்து முன் போலவே கதவுகளை அடைத்து அடங்கி யிருக்கும் செய்தியை அறிந்து கொண்டான். சிறிய தேர்ர் படையை ஆவூர் அரணில் நிறுத்தி விட்டு உறையூர் நோக்கிப் புறப்பட்டான். உறையூர் அரண் கரிகாலன் காலத்தில் நன்கு அமைக்கப்பட்டதாதலால், புறத்தே யிருந்து வரும் பகைவர் எளிதிற் புகத்துணியாத வலிமை பூண்டிருந்தது. அதன் வலிமையே தனக்குப் பேருதவியாகும் என்று எண்ணிய நெடுங்கிள்ளி, சோழ மன்னன் படை புறத்தே இருப்பதை மதியா மல் அகத்தே அடங்கி யிருந்தான். நலங்கிள்ளி அரணையே அழித்து நகரைக் கைக்கொள்ளத் துணிந் தான். படைஞர் நகருட் புகத் துடித்தனர்.

**கொடுமை மாறியது:** கோவூர் கிழார் இதனை அறிந்தார். தாயாதிப் போரால் ஒரு பழம்பெரு நகரம் அழிவதை அவர் மனம் பொறுக்கவில்லை. உறையூர்க்கு விரைந்து வந்தார். அவர் வந்தபொழுது அங்கு ஒரு கொடுமை நிகழ இருந்தது. ஆவூர் அரண் பக்கம் போய்விட்டு உறையூர்க்கு வந்த இளந்தத்தன் என்ற புலவரை நெடுங்கிள்ளி ஒற்றன் என்று துணிந்து கொலைத் தண்டம் விதித்தான். ஒரு பாவமும் அறியாது பரிசில் வாழ்க்கை பூண்ட புலவர் சிறிது பொழுதில் உயிரை இழக்கும் நிலையில் இருந்தார். ஏவலர் கூறிய சொல்லை நம்பி நெடுங்கிள்ளி அப்புலவரை ஒன்றும் கேளாமலே கொல்வதாக முடிவு செய்துவிட்டான். கோவூர் கிழார் உறையூருள் நுழையும்போது இளந்தத்தன் வாளுக்கு இரையாக இருந்தார். நெடுங்கிள்ளி ஆணையைப் பிறப்பித்து விட்டு அரண்மனைக்குள் சென்றுவிட்டான். கொலைஞர் இளந்தத்தனை கொலைக் களத்துக்கு அழைக்க வந்தனர். சிறைச்சாலையளவும் போய் அழைத்து வருமுன்னே, அவர் உயிரைக் காக்கத் துணிந்த கோவூர் கிழார் நெடுங்கிள்ளி முன் சென்று தம் நாவன்மையைப் பயன்படுத்த முயன்றார்.

நெடுங்கிள்ளி அவரை வரவேற்று அன்புரை கூறினான். புலவர் பெருமான் அவனை நோக்கி, "சோழர் குலக் குரிசிலே, என்ன கொடுமை இழைக்கத் துணிந்தாய்! புலவரைப் போற்றுவதே உனது குலத்தின் அறம் என்பதை மறந்தாயா? வண்மையுள்ள செல்வர் எங்கே இருக்கின்றார் என்று தேடி நடந்து சென்று தமக்குத் தெரிந்தவளவு அவரைப் புகழ்ந்து பாடி அவர்

கொடுத்ததைப் பெற்று மகிழ்ந்து, அப் பொருளை நெடு நாள் வைத்திருக்கும் நினைப்பின்றிச் சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் கொடுத்து உண்ணும் வாழ்வுள்ள புலவர் இனத்தார் மனம் என்றேனும் பிறர்க்குத் தீங்கு நினைத்தது உண்டோ? புலவர் தாம் கற்றறிந்த கலை களில் வாதப் பிரதிவாதம் புரிந்து வெற்றி பெற்று இறு மாந்து நடப்பது உண்டு. இன்றளவும் உலகத்திலே எப் புலவரேனும் ஒற்றராகும் இழிநிலை அடைந்தார் என்று நீ கேட்டது உண்டா? இளந்தத்தன் என்பவர் நம் நாட்டுக்குப் புதியவர் ஆதலால், நீ அவரை இன்னவர் என்று அறியாது ஒற்றர் என்று நினைத்துக் கொல்லத் துணிந்தாய். ஆவூரிலிருந்து உறையூர்க்கு வருவது குற்றமாயின், நீயும் அங்கு இருந்து வந்தவனே. நானும் அங்கிருந்தே வருகிறேன். புலவர் பெருமையை அறிந்த குலத்திலே பிறந்த நெடுங்கிள்ளி ஒரு கொடுமை இழைக்கத் துணிந்தான் என்ற பழிமொழி நாட்டிற் பரவு முன்னே, இப் புலவர்க்குத் தக்க பரிசில் தந்து விடையும் தருவாயாக.” என்று கூறினார். நெடுங்கிள்ளி கோவூர் கிழாரை மனமார வாழ்த்தி இளந்தத்தனைச் சிறை வீடு செய்து பரிசில் தந்து போக்கினன். இங்ஙனம் புலவர்க்குப் பரிந்து மன்னன் மனதை மாற்றிய புலவரின் நாவன்மைதான் என்னே!

இளந்தத்தனர் கோவூர் கிழாரை வாழ்த்தி விடை பெற்றார். பிறகு நெடுங்கிள்ளி கோவூர் கிழாரை அரண்மனைக்குள் அழைத்துச் சென்றான். ஒரு தனி அறையில் இருந்த இருக்கைகளில் அரச குலக் குரிசி லும் புலவர் குலத் தலைவரும் அமர்ந்தனர்.

## தாயாதிப் போரை நிறுத்தல்

**கோவூர் கிழார்:** இளவரசே! சோழ நாட்டில் உள்ள மக்கள் நலம் பெறவேண்டும் என்ற எண்ணம் உண்டு என்றால், சோழர் குலத்தைப் பற்றி உலகம் பழிக்க லாகாது என்ற எண்ணம் உண்டு என்றால், தாயாதிப் போரில் நீ இறங்காதிருப்பதே நல்லது.

**நெடுங்கிள்ளி:** பாரதப் பெரும் போரில் பாண்ட வர்க்கு உதவிபுரிந்த குலத்தில் வந்தவன் நான். இன்று நான் போர்க்கு அஞ்சுவேனா?

**கோவூர் கிழார்:** போர்க்கு அஞ்சுக என்று நானும் கூறத் துணியேன். நன் மக்கள் பழிக்கும் செயல் செய்ய நாணுக, அஞ்சுக என்றே கூறுவேன். சிபி யும், மனுவும் பிறந்த குலம் பழிபூணலாகாதே என்று கருதியே இம் மொழிகளை உரைக்கிறேன். இளவரசே உறையூர் அரணுக்குப் புறத்தே மூற்றியிருக்கும் நலங் கிள்ளி பனம்பூ மாலை அணிந்த சேர குலத்தான் அல்லன்; வேப்பம்பூ மாலை அணிந்த பாண்டிய குலத் தான் அல்லன்; உனது மாலையும் ஆத்தி மாலையே; அவன் மாலையும் ஆத்திமாலையே. உம்முள் யார் ஒருவர் தோற்றாலும் சோழர் குடியே தோல்வி அடைகிறது. இருவரும் வெற்றி பெறலாம் என்பது இயல்பன்று. இப் போர் உம் குலப் பெருமையை வளர்ப்பதாக இல்லை. உம்மைப் போன்ற மன்னர் இதுகேட்டு நகைக்கவே இடமாம் என்று துணிந்து கூறுவேன்.

மூது பெரும் புலவர் இங்ஙனம் அறிவுரை கூறக் கேட்ட நெடுங்கிள்ளி சிறிது பொழுது மவுனம் பூண்

டிருந்தான். பிறகு, புலவரை வணங்கி விடைகொண்டு உறையூர் அரணைத் திறந்து வெளிப்பட்டான். உறையூர் நலங்கிள்ளி வசமாயிற்று. பல நூற்றாண்டுகளாகச் சோழ மன்னர் அரசிருக்கையாக இருந்த உறையூர்ப் பெருநகரம் தன் உரிமையானதும் அவன் மனம் மகிழ்ந்தான். ஆயினும் தன் உரிமையை எதிர்த்த பகையை அடியோடு அழிக்கவே கருதினான்.

சோழர் படை பகையை அழிக்கப் புறப்பட்டது. ஆலத்தூர் கிழார் என்ற புலவர் அப்படை நடந்த அழகைச் சிறிது மிகைபடவே புகழ்ந்துள்ளார். படைஞருள் முன்சென்ற பகுதியார் பனைநுங்கின் இனிய சேற்றைப் பருகினர்; இடையிற் சென்றவர் பனம் பழம் தின்றனர்; இறுதியில் வந்தவர் பனங்கிழங்கு தின்றனர். இள நுங்கு பழமாகிப் பழம் நிலத்திற் புதைபட்டுக் கிழங்காகும் காலம் அளவும் இப் படை நடந்தது என்று புலவர் மனமாரப் புகழ்கின்றார்.

நலங்கிள்ளி நெடுங்கிள்ளியைத் தொடர்ந்து பெரும் படையோடு சென்று காரியாறு என்ற சிற்றூரில் அவனைக்கண்டு பெரும்போர் புரிந்தான். நெடுங்கிள்ளி அப்போரில் எதிர்த்து நின்று சில நாள் அமர் புரிந்து உயிர் இழந்தான். நலங்கிள்ளி தனது ஆட்சித் தொடக்கத்தில் எழுந்த புகைக் குழுவை ஒழித்து மனவமைதியுடன் உறையூர்க்கு மீண்டான்.

**நலங்கிள்ளி வெற்றி:** புகார் நகரிலும் உறையூரிலும் நலங்கிள்ளியின் அரசுவலாப் புலிக்கொடி பறந்தது. உறையூர் முதுகண்ணன் சாத்தனர், ஆலத்தூர் கிழார்,

கோவூர் கிழார் என்ற புலவர் பெருமக்கள் அரச வைக்கு அணியாக விளங்கினர். போர்புரிவதில் மிக்க விருப்பம் கொண்டிருந்த இம்மன்னனை அமைதி நெறியில் நிறுத்தச் சாத்தனர் மிகவும் முயன்றார். புலமையிற் சிறந்த நலங்கிள்ளி புலவரோடு அளவளாவி மெய்ப்பொருளை ஆராய்ந்து அறிய முயன்றான். முது பருவத்தில் இலவந்திகைப்பள்ளி என்ற இடத்தில் இறந்தான். இதனல் இம்மன்னன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய சேட்சென்னி நலங்கிள்ளி என்ற பெயர் பூண்டான். புலவர்க்குத் தேர் கொடுத்ததால் இவன் பெயர் தேர்வண்கிள்ளி என்றும் வழங்கியது.

**மாவளத்தான்:** நலங்கிள்ளி தம்பி மாவளத்தான் சிறந்த போர் வீரன். குலத்தின் மானம் அறிந்த மனப்பண்பு உள்ளவன். இவன் ஒரு நாள் தாமப் பல்கண்ணனர் என்ற புலவரோடு வட்டாடிக்கொண்டிருந்தான். புலவர் அவ்விளையாட்டின் நுட்பங்களை நன்கு அறியாமையாற் காய்களை மறைத்தார். அது கண்ட சோழர்குலக்குரிசில், அவர் புலவர் அந்தணர் என்பதை மறந்து அவர் செய்த குற்றத்தையே பெரி தாக நினைந்து, வட்டை எடுத்து அவர் முகத்தில் எறிந்தான். புலவர் நெற்றியிலிருந்து உதிரம் பெருகியது. அவரும் தம்மை மறந்து ஏதோ பேசினர். மாவளத்தான் மிக்க நாணம்கொண்டு தலைகுனிந்தான். அந்நிலைகண்ட புலவர் அவன் பெருமையை உள்ள முற உணர்ந்து பாடினர். அச்செய்யுளின் கருத்து "புறவுக்கு அடைக்கலம் தந்ததால் துலாத்தில் ஏறத் துணிந்த மன்னன் மரபில் உள்ளாய்! தேர்வண்

கிள்ளியின் தம்பியே! வீரர் பெருமானே! நான் உன் பிறப்பின் ஐயமுடையேன். உன் முன்னோர் இங்ஙனம் செய்யார் என்று வாயறியாது கூறி நானே பிழைபுரிந்தேனாக, நீயே பிழைபுரிந்தவன் போல் நாணினாயே! குற்றம் புரிந்தவரைப் பொறுத்தருளும் பெருந்தன்மை இக்குடியிற் பிறந்தவர்க்கு இயல்பு என்று விளக்கினாய்; நீ நெடுங்காலம் வாழ்வாயாக" என்று வாழ்த்தினார்.

மாவளத்தான் என்ற பெயர் பூண்டிருந்த இளவரசன், நலங்கிள்ளி உயிரோடு இருந்த வளவும் அவனுக்கு வலக்கரம் போல உதவி புரிந்தான். தமையன் இறந்ததன் பிறகு அவன் அரசை யேற்கத் தக்க உரிமையுள்ளவர் வேறு எவரும் இன்மையால், தானே அரசன் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். அவன் அரசனாகும் போது கிள்ளிவளவன் என்ற பெயர் பூண்டான்.

## 6. கிள்ளி வளவன்

**கிள்ளி வளவன் ஒருவனே:** நலங்கிள்ளி தம்பி மாவளத்தான் என்ற பெயர் பூண்டிருந்ததை அறிவோம். அவனே கிள்ளி வளவன் என்ற பெயரோடு அரசையேற்றுக் கொண்டான். நலங்கிள்ளிக்கு மைந்தர் இல்லாக் குறையால் அரசு இங்ஙனம் வந்தது. கிள்ளி வளவன் என்ற பெயர் இரு மன்னர்க்கு உரியதாகப் புறப்பாட்டில் வந்துள்ளது. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன் என்ற இருபெயரும் ஒருவனையே குறிப்பதாக இருக்கலாம் என்று சரித்திரம் வல்லார் கருதுகின்றனர். குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்ற சோழன் பெயரும் சங்கச் செய்யுட்களில் வரும். அவனைப் பாடிய புலவர் ஒருவர் நலங்கிள்ளியையும் பாடியிருப்பதால் கிள்ளி வளவனே பின்னளிற் பெருந்திருமாவளவன் என்ற பெயர் பூண்டானோ என்று நினைக்க இடம் உண்டு. மணிமேகலை கதையில் ஒரு கிள்ளி வளவன் வருகின்றான். இம்மன்னனே அங்கு வரும் புகழாளன் என்று அறிஞர் பலர் கருதுகின்றனர். நான்கு வகையாக அறியப்பட்ட மன்னன் ஒருவனே என்று துணிவோமாயின் அவன் வரலாற்றிற் பல உண்மைகளை ஆராய்ந்து உணர்வது எளிதாகும்.

கிள்ளி வளவன் உறையூரில் அரசுரிமை பெற்றான் என்று சங்கச் செய்யுட்களால் உணரலாம். சங்கப் புலவருள் பலர் இவனைப் பாடியிருக்கின்றனர். இப்

பாடல்களால் இவன் வரலாறுகளை இன்று நாம் நன்கு அறிகிறோம். ஆலத்தூர் கிழார் என்ற புலவர் இளமையிலேயே இம்மன்னனை அடுத்து உதவி பெற்று வாழ்ந்தவர். அவர் புறப்பட நினைத்தபொழுது 'நீர் எம்மை நினைத்து மீண்டும் இங்கு வருவீரா?' என்று மன்னன் கேட்டான். அப்பொழுது அவர் 'அரசே! ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்கு உய்தி இல்லை என்று அறம் பாடியது. இந் நகரில் உள்ள இலந்தையடியில் விளங்கிய பெருமன்றத்தில் எண்ணிறந்த பாணர் கூடித் தமிழ்ச் சுவை தெளியச் செய்தாய். புலமை பெற்றவர்க்கு அழிவில்லாச் செல்வம் தந்தாய். இங்ஙனம் நன்மை செய்த உன் புகழைப் பாட மறப்பேனாயின் நான் வாழவும் வழியுண்டோ? அரசே! நான் ஒரு சிறியேன். உலகில் சான்றோர் செய்த புண்ணியம் உண்டாயின் இமய மலை மேல் எழுந்து மேகங்கள் பொழிந்த பல மழைத் துளிகளைக் காட்டிலும் நெடுங்காலம் வாழ்க" என்று வாழ்த்தினார்.

**சேரநாட்டிற் போர்:** சில ஆண்டுகளின் பிறகு ஆலத்தூர் கிழார் கிள்ளிவளவனைக் காண வந்தார். அப்பொழுது அவன் சேரமன்னன் எளிமையை உணர்ந்து கருவூரை முற்றுகையிட்டான். ஆன் பொருநை ஆற்றின் கரையில் உள்ள வஞ்சிமா நகர் சேரருக்கு அரசிருக்கையாக விளங்குவது. அங்கு உதியன் சேரலாதன், செங்குட்டுவன் முதலிய மன்னர் பலர் சிறப்புடன் விளங்கினர். பின்னாளில் வந்த மன்னன் தன் நாட்டையே காக்கும் திறம் அறியாத

கோழையாய் இருந்தான். கிள்ளி வளவன் சோழநாடு அகன்று, சேரநாட்டிற் படையோடு புகுந்து, வஞ்சிமா நகர்க்கும் வந்து முற்றுகை செய்தான். அரண் புறத்தே உள்ள காவற்காட்டில் நெடுங்காலமாகச் சேரர் குலத்தின் புகழ்போல ஓங்கி வளர்ந்த கடி மரத்தை அவன் படைஞர் வெட்டினர்.

கடிமரத்தை வெட்டும் ஓசை அரண்மனை அகத்தே கேட்டது. சேரன், அம் முழக்கம் கேட்டும் எழுந்து வராதிருந்தான். இக் காட்சி கண்ட புலவர் சோழனை நோக்கி, "அரசே! இங்ஙனம் கடிமரம் தகர்ந்து விழும் ஓசை கேட்டும், அரண்மனையுள் அடங்கி ஒடுங்கி யிருக்கும் மன்னன் உனக்குத் தக்க பகைவனல்லன். இப் போரால் நீ வெற்றியே பெற்றாலும் பெருமை யில்லை" என்று கூறிப் போரை நிறுத்திச் சோழ நாட்டுக்கு மீளச் செய்தார். பசும் பூண் கிள்ளி வளவன் என்ற பெயர் பூண்ட இச் சோழன் புலவ ரோடு உறையூர்க்கு மீண்டும் வந்து அவர் மன நிறையப் பரிசில் ஈந்தான்.

ஆலூர் மூலங்கிழார் என்ற பெரும் புலவர் இம் மன்னனைப் பற்றி இரண்டு பாடல் பாடியுள்ளார். குமணன் பெருமையை உலகறியச் செய்த பெருந் தலைச் சாத்தனார் இப்புலவருக்கு மைந்தர் என்று அறிவோம். நன் மனப் பண்பு உள்ள மூலங்கிழார் கிள்ளிவளவன் போன்ற மன்னரைப் புகழ்ந்து பரிசில் பெற வேண்டும் என்ற ஆசை இல்லாதவர். உயர்வை எங்கே கண்டாலும் உள்ளம் உருகி உரைக் கும் இயல்பு உள்ளவர். அவர் ஒரு நாள் உறையூர்

அரண்மனைக்கு வந்தார். மன்னன் கிள்ளிவளவன் "ஐய, புலவர் பெருமானே! நீர் சோழ நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவராய் இருந்தும் எம்மை நினைக்க வில்லையே" என்று கேட்டான்.

**புலவர் புகழும் பெருமை:** புலவர் "அரசே! நீ சினந்து நோக்கிய பக்கத்தில் நெருப்பு எழும். உவந்து பார்த்த திசையிலே பொன் பூக்கும். ஞாயிற்றிலே நிலவு வரச் செய்வாய். திங்களிலே வெயில் பரக்கவும் செய்வாய். உன் நிழலிலே பிறந்து உன் நிழலிலே வாழ்ந்து வரும் என்னால் உன் பெருமையை அளப்பது எளிதாமா? தேவரும் தாம் முன்செய்த புண்ணியத்தின் பயனையே அடைவதுண்டு. தேவர் உலகில் ஈவதும் இரப்பதும் உண்டோ? அங்கு உள்ள நலம் எல்லாம் இந்நாட்டில் உண்டு. இங்கு உள்ள நலங்கள் அங்கு இல்லை. ஆதலால் என்னைப் போன்ற பரிசில் வாழ்க்கைப் புலவர் எல்லாம் தேவர் உலகத்தை மறந்து சோழ நாட்டு வாழ்வையே பெரிதாக மதிப்பர். நீயே பிறர் அரண்களை வென்று அவரது முடிகளில் இருந்த பொன்னால் செய்த வீரக்கழல் பூண்டிருக்கின்றாய். நாங்களோ உன்னை இகழ்பவர் அடங்கவும், புகழ்பவர் பொலியவும், இன்று கண்டாற்போல, உன்னை என்றும் காணவே விரும்புகிறோம். அரசே நீ புலவரை வரவேற்க, இன் சொல்லும் எளிமையும் உள்ளவனாய் இருப்பாயாக. ஒரு பிடி உறங்கும் சிறு நிலத்தில் விளையும் நெல் உன் நாட்டின் சிறப்பால் ஏழு களிறுகள் வயிறார உண்ண உதவுவதாக" என்றார்.

இடைக்காடர் என்ற புலவரும் இம் மன்னன் நாட்டில் மக்கள் எக்குறையும் இன்றி வாழ்கிறார்கள் என்று உரைக்கின்றார். "மலையினின்று இறங்கி, நிலத்தின் வழியே சென்று, கடலை நோக்கும் ஆறுகளைப் போலவே புலவர் எல்லாம் உன்னையே நோக்குவார். நீயோ புலவர்க்கு வேண்டும் பொருள் உதவ வேண்டிப் பகை மன்னர் நாடுகளிலே படை நடத்தவே நினைக்கின்றாய்" என்று மன்னனைப் புகழ்ந்திருக்கின்றார்.

**அறம் உரைக்கும் புலவர்:** கோவூர் கிழார் என்ற புலவர் நலங்கிள்ளியைப் பாடியவர் என்பதை நாம் அறிவோம். அவரே இம் மன்னனையும் பாடியிருக்கிறார். கிள்ளி வளவன் பகைவர் நாடு, அவன் பெயரை நினைத்தே கலங்கும் என்றும், பகைவர் பல தீய கனாக்களைக் கண்டு நனவில் அவன் படையோடு வருதல் நோக்கி மனம் கலங்குவர் என்றும் கூறுகிறார். கிள்ளி வளவன் திருக்கோவலூர்த் தலைவன் மலையமான் திருமுடிக்காரியைப் பகைத்தான். அவனை அடக்க இயலாமை கண்டு, கடுஞ்சினங் கொண்டான். அவன் மக்களை ஒற்றர் சிலர் பற்றி வந்தார். தந்தை மேற் கொண்ட கோபத்தைப் பால்மணம் மாறாத குழந்தைகள் மேற் செலுத்தினான். இரு செல்வரை யானைக் காலின் கீழ் இட்டுக் கொல்லத் துணிந்தான். கோவூர் கிழார் அக் கொடுமை நிகழவிருப்பதை உணர்ந்துகொண்டார். உறையூர்க்குப் பறந்துவந்தார்.

வளவன் முகத்தில் இருந்த புகையையும் நெருப்பையும் மதியாது தம் கருத்தை உரைக்கின்றார்.

"அரசே! நீ புறுவின் துயரையும் பிறர் துயரங்களையும் போக்கிய மன்னர் மரபிலே பிறந்தவன். இவரோ புலவர்க்குத் தம் பொருளைப் பகுத்துக் கொடுத்துண்ணும் நிழலில் வாழும் சிறுவர். யானை தம்மைக் கொல்ல வருவதை அறியவும் இயலாது, அழவும் தெரியாது நிற்கின்றார். துன்பம் என்பதே புதுமையாக உணர்பவர். இச் சிறு செல்வரோடு உனக்குப் பகை இருக்க முடியுமா! நான் கூறியது கேட்டாய் என்றால், உன் மனம் விரும்புவதைச் செய்க" என்றார். கிள்ளிவளவன் உடனே தனது குற்றத்தை உணர்ந்து புலவரை வணங்கிச் சிறுவரைக் கோவலூர்க்கே போக்கினான்.

புலவர் பிறகு சில நாட்கள் உறையூரிலே இருந்தார். பலபட அவன் புகழைப் பாடினார். இப் புலவரே குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் அழித்த வரலாற்றை உரைக்கின்றார். கருவூரில் கடிமரம் தடிந்த வரலாற்றை முன்பு கேட்டோம். வஞ்சி முற்றத்தைக் களமாகக் கொண்டு போர் நிகழ்ந்ததாகக் கூறுகிறார். குடபுலத்தில் (சேர நாட்டில்) அதரிகொண்டான் என்றும் கூறுகிறார். பகைவரை முற்றிலும் அழித்த வரலாறே இங்ஙனம் உரைக்கப்படும். அரண் கொண்ட வெற்றியில் தமக்குரிய பரிசில் வேண்டும் புலவர், மன்னன் 'கிள்ளி வளவனைப் போன்ற பிறர் இல்லை' என்று கூறுகிறார். மற்றும் ஒரு முறை கிள்ளி வளவனைப் பாடிய பாட்டில் 'வெள்ளி எத்திசை நோக்கிச் சென்றாலும் எமக்குக் குறைவில்லை' என்று கூறுகிறார். தாயங் கண்ணனார் என்ற புலவரும் வளவன் வண்

மையையும் அவன் நாட்டில் அறநெறி நிலைத்திருக்கும் அழகையும் புகழ்கின்றார். நல்லிறையனார் என்ற புலவர், வளவன் தம் உடுக்கை களைந்து, புது உடுக்கை தந்து உணவு அளித்த அழகை நன்கு உரைக்கிறார்.

வளவன் வறுமை கண்டு பொறாத மனத்தவன் என்பதை இவ்வரலாறுகளால் உணரலாம். மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர் கிள்ளி வளவனைப் பலபடப் புகழ்கின்றார். பகைவர் அரண்களை அவற்றின் வலிமை மதியாது இம் மன்னன் அழித்து வெற்றி பூண்ட பெருமையை, ஒரு செய்யுளால் உரைக்கின்றார். மற்றொரு செய்யுளில், "சிபியின் வழியில் வந்த மன்னனே, ஈகை என்பது உன் புகழ் அன்று. தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன் முதலிய நின் முன்னோரை நினைப்போமாயின்; போரிற் பகைவரை அழித்தலும் உன் புகழன்று. மறம் விளங்கும் சோழர்க்கு உரிய உறையூர் அவையில் அறம் நின்று நிலைபெற்றதாதலின், முறைமையும் உன் புகழ் அன்று. பகைவர் எழுந்து வரும் போர்களில் வெற்றியே பெறும் மன்ன, உன்னை எங்ஙனம் புகழ்வேன்? இமயமலையில் வில்லைப் பொறித்த சேரர் மரபிற் பிறந்த மன்னன் தோல்வியுறும்படி அவனுக்குரிய தலைநகரமான வாடாவஞ்சியை வாட்டும் உனது வன்மையை எச் சொற்களால் எடுத்துரைப்பேன்" என்கிறார்.

**குடிகளும், அரசரும்:** சோழநாட்டில் வெள்ளைக்குடி என்றதோர் சிற்றூர் உண்டு. அவ்வூரில் நாகனார் என்ற புலவர் ஒருவர் இருந்தார். அவருக்கு அங்குச் சில

செய்கள் இருந்தன. அவர் புலவர்க்கே இயல்பாக உள்ள வறுமையால் அரசினர்க்கு இறுத்தற் குரிய செய்க்கடன் கொடுக்க மறந்து இரண்டு ஆண்டு கழித்தார். நிலங்களே பறிமுதல் ஆகும் நிலே வந்ததை கண்டு, உறையூர்க்கு ஓடி வந்து வளவனைக் கண்டார். அரசன் அவரைப் புலவர் என்று அறிந்து அன்புடன் வரவேற்ருன்.

புலவர் அரசனை வணங்கி, "அரசே! தமிழ் நாட்டில் உள்ள அரசு மூன்றிலும் உண்மையில் அரசு என்ற புகழ்க்கு உரிமை பூண்டது சோழவரசே. ஞாயிறு நாற்புறமும் தெரிந்தாலும், வெள்ளி தெற்கே சென்ருலும், காவிரி வளம் குறையாத நாடு உனக்கு உரியதே. பெருமை யெல்லாம் பொருந்திய அரசே, ஒன்று கூறுவேன் கேட்க வேண்டும். குடிகளுள் அரசை நேரிற் கண்டு முறை வேண்டுவோர் சிலர் எப்பொழுதும் உண்டு. அத்தகைய மக்கள் அரசிருக்கை நோக்கி வரும்போது, அரசர் அவர்களை எளிதில் வரவேற்று, வேண்டியது முடித்துதவினுல் நாடு செழிக்கும். உன் குடை வெயிலே மறைக்கப் பிடித்த தன்று, வருந்திய குடிகளின் துயரை மறைப்பதற்காகப் பிடித்ததேயாம். அயல் நாடுகளில் படை நடத்திப் பெறும் வெற்றி யெல்லாம் இந் நாட்டில் உள்ள உழவர் நிலத்தில் ஏர் நடத்தித் தேடித் தந்த பொருளால் வந்த பயனே ஆகும். மழை குறைந்தாலும், நீர் வரவு சுருங்கினுலும், இயற்கை யல்லாதன தோன்றினுலும் உலகம் மன்னரையே பழிக்கும். இவ் வுண்மையை நீ நன்கு அறிந்தால் அயலார்

கூறும் பொது மொழியைச் செவியில் ஏற்காமல், உழவர் பாரத்தைப் பாதுகாத்துக் குடிகளை நன்கு காப்பாய். உழவராக உள்ள குடிமக்கள் நன்கு வாழப் பெற்றாலே பகைவர் உன்னைப் பணிவர்." என்று கூறினர். வளவன் புலவர் மனக் குறிப்பை நன்கு உணர்ந்து அவர் அரசுக்குத் தரவேண்டியிருந்த பழஞ் செய்க் கடனை வீடு செய்தான்.

உறையூர் மருத்துவன் தாமோதரனர் பெருந் திருமாவளவனை மனம் உருகிப் புகழ்கின்றார். வானத்தில் மதியம் விளங்கக் கண்ட அப் புலவர், 'வளவன் குடை போல அது விளங்குவதாக', என ஒரு பாடலில் உரைத்திருக்கிறார். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர் என்ற புலவர், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் இம் மன்னனும் ஒருங்கிருந்த காட்சி கண்டு வாழ்த்துகிறார். கிள்ளி வளவன் சேரனைப் பகைத்து அழித்த வரலாறு முன் உரைக்கப்பட்டது. பாண்டியனேடு அவன் போர் புரிந்த வரலாறு முன்வரவில்லை. இச் செய்யுளால் பெருந்திருமாவளவனகிய சோழன், பெருவழுதி என்ற பாண்டியனேடு நட்புப் பூண்டிருந்த சிறப்பு நன்கு உரைக்கப்படுகின்றது. போர்களைத் தூண்டுவதே புலவர் பணி என்று பலர் கருதும்படி சங்கச் செய்யுட்கள் நூற்றுக்கணக்கில் இருப்பினும், இவ்வண்ணம் அமைதியைப் பாராட்டும் செய்யுட்களும் இடையிடையே உண்டு என்பதை நாம் உணர வேண்டும். புகார் நகரத்துப் புலவராகிய காரிக்கண்ணனர் பாடியிருப்பதால், இவ்வளவன் புகார் நகரில் வாழ்ந்தவனே என்று

நினைக்க இடம் உண்டு. கிள்ளி வளவனே உறையூரையும் புகாரையும் தனது ஆட்சியின் கீழ் அமைத்திருக்கலாம்.

**வளவன் பாண்டியன் நட்பு:** காரிக்கண்ணனார், "அரசே, நீ காவிரி பாயும் சோழ நாட்டு மன்னன். இவனோ பாண்டியர் குலத்தின் பழம்பெருமை அழியாது காக்க முயலும் மன்னன். நீ உறந்தை வீரன். இவன் தமிழ் விளங்கும் கூடலின் வேந்தன். பலராமனும் கண்ணனும் உடன் நின்றது போல, இப்படி நீங்கள் அன்போடு இருப்பதினும் சிறந்த காட்சி ஒன்று உண்டோ? உம்முள் ஒருவர் ஒருவரை வெல்லும் ஆற்றல் உடையீர். இருவரும் மனமொத்து இணங்கி நண்பு பூண்டால், உலகமே உங்கள் கைவசமாவது எளிதாம். ஆதலால் நல்லவை போலவும், நயம் உள்ளவை போலவும், முன்னோர் சென்ற நெறியில் உள்ளவை போலவும் உம்மிடம் வந்து சொல்ல வரும் அயல் மக்கள் மொழிகளைக் கேளாமல், உமது அன்பு வாழ்வு இன்று இருப்பது போலவே, என்றும் இருப்பதாக. போர்க்களத்தில் உமக்கு வெற்றியே விளைக. அயல் மன்னர் நாட்டு மலைகள் உமது புலிப் பொறியும் மீன் பொறியும் பொறிக்கப்படுவன ஆகுக" என்று பாடி இருவரையும் வாழ்த்தினர்.

**பண்ணன் புகழ்:** கிள்ளிவளவன் காலத்திலே சிறுகுடிகிழான் பண்ணன் என்ற வேளாளன் ஒருவன் இருந்தான். அவன் வாழ்ந்தவூர் சிறுகுடியே ஆயினும் அவன் மனத்தாற் பெரியன்; அறத்தாற் பெரியன்; அன்பாற் பெரியன். அவன் பெருமையைப் புலவர் பலர் புகழ்ந்திருக்கின்றனர். கிள்ளிவளவனும்

நாவார மனமாரப் புகழ்ந்திருக்கிறுன். "பண்ணன் கடவுள் அருளால் தனக்கு அமைந்த வாழ்நாள் அளவோடு நில்லாமல் என் வாழ்நாளேயும் சேர்த்து வாழ்வானுக. இவனே நம்பியிருக்கும் ஏழைக் குடிகளின் நிலேயைப் பாணர் காண வேண்டும். பழுத்த மரத்துக்குப் பறவைகள் வந்து ஒலிப்பது போலவே எப்பொழுதும் அவன் இல்லத்தின் புறத்தே ஊண் ஒலி அரவம் கேட்கும். மழை பெய்ய இருப்பது உணர்ந்தும், முட்டைகளே எடுத்துக்கொண்டு மழையாற் கரையாத வலிய நிலத்துக்குப் போகும் எறும்புகளின் வரிசை போலவே, சோற்றுத்திரளே ஏந்திய கையோடு தனித்தனியே ஒழுங்காக நடந்துவரும் சிறுவர்களேக் காண்போம். மற்றும் ஒலி கேட்டுக்கொண்டே அவன் இல்லத்தை அடைவோம். அவன் பெயர் பசிப்பிணி மருத்துவன் என்றே கூறுவோம்." அரசனுற் பாடப் பெற்ற வேளாளனே உலகம் மறக்கவும் இயலுமா?

**மணிமேகலே வளவன்:** மணிமேகலே வரலாற்றிற் கலக்கும் சோழ மன்னன், இங்கு உரைத்த கிள்ளி வளவனே என்று அறிஞர் துணிகின்றனர். அக்கதை பிற்காலத்துப் புராணங்கள் போலவே, விஞ்சையர் தெய்வங்கள் பாவைகள் முதலியவற்றை இடையிடையே கலந்து கொண்டிருப்பினும், சேரன் செங்குட்டுவன் தம்பி என்று தெளிவாக அறியப்பட்ட இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தோடு இணைந்த வரலாருகவே கருதப்படவேண்டும். இந்த இரு காப்பியங்களும் செங்குட்டுவன் ஆரியப் படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் சோழன் பெருங்கிள்ளி என்ற முடி

மன்னர் மூவர் வரலாற்றை உரைக்கின்றன. சிலப்பதிகாரம் அந்நாளில் உறையூரில் ஆண்ட அரசன் பெருங்கிள்ளி என்று கூறும். அடியார்க்கு நல்லார் அவன் பெயர் பெருநற்கிள்ளி என்பர். மணிமேகலையில் வடிவேற்கிள்ளி, வென்வேற்கிள்ளி, நெடுமுடிக் கிள்ளி, கிள்ளிவளவன் என்ற பல பெயர்களோடு சோழ மன்னன் ஒருவன் வருகின்றான். இவன் மைந்தனே உதய குமரன் என்பான். இவனே மணிமேகலையைச் சிறையிட்டு அவள் கூறிய அற நெறி கேட்டுச் சிறைக் கோட்டத்தை அறக்கோட்டம் ஆக்கியவன். உதய குமரன் என்ற மகனை இழந்தும் அவன் செய்த குற்றத்தை அறிந்து துயரம் கொள்ளாத மாண்புடைய மன்னனும் இவனே. இவன் பெற்ற ஒரே மகனை இழந்து இராசமா தேவியோடு புகார் நகரம் நீங்கி உறையூர்க்கே வந்தான்.

**புலவர் துயர்:** போர்கள் பல புரிந்த பெருவீரனே ஆயினும் இம்மன்னன் முதுமையால் இறந்தான் என்றே துணியவேண்டும். உலகம் இம்மன்னனை இழந்த துயரச் செய்தியைப் புலவர் பலர் பாடியுளர். மாறோக்கத்து நப்பசலையார் "வளவனைக்கொண்ட கூற்றுவன், பாடும் புலவர் போலவே கைதொழுது ஏத்தி இரந்தே, அவன் உயிரைக் கைக்கொண்டிருக்க வேண்டும். எதிர்த்துப் பகைத்துப் படைத்திறத்தால் உயிர்கொள்ள இயலாது" என்று பாடுகிறார். ஆடுதுறை மாசாத்தனார் "கூற்றமே! நீ மிகவும் பேதை, அறிவில்லாமல் வித்தை ஆக்கி உண்டாய். போர்க் களங்களிலே மறவரைக் கொன்று உனக்கு நாள்

தோறும் உணவு படைத்த வளவனை உயிருண்டாய்! ஆதலால் இனி நின் பசிதீர்ப்போர் யாரோ!" என்று பாடுகின்றார். ஐயூர் முடவனார் "கலஞ் செய்யும் வேட்கோவே, கிள்ளிவளவன் உடம்பை அடக்கும் தாழியைச் செய்ய நினைத்தாய் ஆயின் உன்னால் இயலுமோ? நிலத்தையே சக்கரமாகக் கொண்டு மேருமலையை மண்ணாகக் கொண்டு வனைய இயலுமானால் அவனுக்கேற்ற தாழி அமையலாம்" என்று பாடினார்.

கிள்ளிவளவன் புகழோடு வாழ்ந்து புலவர் பாடச் சிறந்திருந்து புலவர் குலம் இரங்க விண்ணுலகம் புகுந்தான் என்பது இவ்வரலாற்றால் விளங்கும்.

---

# 7. கோப்பெருஞ் சோழன்

சங்கச் செய்யுட்களால் அறியலாகும் சோழ மன்னருள் இளஞ் செல்வரும் மறவாது நினைத்துருகும் நற்பண்பு, நல்லோர் சேர்க்கை, மானம் போற்றுதல் முதலிய சிறப்புக்களை உடையவன், கோப் பெருஞ் சோழன் என்ற மன்னனும். இவன் உறையூரில் இருந்து நெடுங்காலம் அரசாண்டான். பல புலவர் தன்னை எப்பொழுதும் சூழ்ந்திருக்கும் பேற்றையும் பெற்றான். அயல் நாட்டு மக்களும் நினைத்துப் போற்றும் பெருமையும் பொருந்தி யிருந்தான். ஆயினும் இவன் கரிகாலனுக்கு முந்தியவனா பிந்தியவனா, உறையூரில் எந்த நாளில் அரசு செலுத்தினான் என்பதை அறுதியிட்டுரைக்கத் தக்க உதவிகள் இல்லை. சரித்திரம் வல்லவரும் காலக் குழப்பத்துள் அழுந்திக் கலங்குகின்றார். இக் காலத்துக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் ஒன்றும் இல்லை என்றே உரைக்கின்றனர். காலம் அறுதியிட இயலாவிட்டாலும் இம் மன்னன் வாழ்ந்த சிறப்பை எவரும் மறக்கவோ மறைக்கவோ இயலாது.

**கோப்பெருஞ் சோழன் நற்பண்புகள்:** செம்மையும் சிறப்பும் விளங்க உறையூர் நகரில் இருந்து சோழ நாட்டை அரசாண்ட கோப் பெருஞ் சோழன் பிறர் நாட்டைப் போரால் கவர நினைத்ததுமில்லை; தனது நாட்டைப் பிறர் முற்றுகை இட வருவார் என்று கருதவுமில்லை. நாடு அமைதியில் நிலைபெற வேண்டும் என்பதே என்றும் அவன் கருத்தாய் இருந்தது.

மன்னன் நற்பண்புகளை அறிந்த சான்ருேர் பலர் உறையூர்க்கு வந்தனர். உறையூர் அரண்மனை எப்பொழுதுமே நன்மக்கள் கூடும் மன்றமாக விளங்கியது. அறிவால் முதியரும், கலையால் முதியரும் ஒழுக்க நெறியால் முதியரும், பிறர் நலம் பேணிய பெரிய பண்பால் முதியனுகிய கோப் பெருஞ் சோழன் அவைக் களத்திலே கூடி, எத்தனையோ அரும்பொருள் களைப் பற்றி ஆராய்ந்து உண்மை உணர முயன்றனர்.

**சான்ருேர் இணக்கம்:** கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் என்ற நாற்பெரும் பேறும் அமைந்த சான்ருேர்கள் கோப் பெருஞ் சோழன் முன் இம்மை மறுமை என்ற இருமையைப் பற்றியும் நல்வினை தீவினைகள் தொடர்ந்து வரும் இயல்பைப் பற்றியும் எத்தனையோ கோடிக் கணக்கான உயிர்கள் உலகத்தே இருந்தும், மனித இனம் ஒன்றே தன்னையும் தன்னைப் படைத்தவனையும் பற்றி ஆராய்ந்து மெய் தெளியும் பேறு பெற்றிருப்பதைப் பற்றியும், உறுதிப் பொருள் நான்கின் உண்மை யுருவத்தைப் பற்றியும், வாழ்க்கையின் உண்மையான நோக்கம் யாது, அது நிறைவேற மக்கள் இனம் யாது புரியவேண்டும் என்பது பற்றியும் அந் நல்லவையிலே பேசி முடிவு காணமுயன்றனர்.

கோப்பெருஞ் சோழன் எப்பொழுதும் சான்ருேர் குழுவில் இருப்பதும், மெய்ப்பொருள் தெளியவே முயன்று கொண்டிருப்பதும், சோழ நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியையே விளைத்தது. முதியவர் பலரும் அரசன் செயலைப் பாராட்டுதல் கண்ட பொதுமக்களும் அரசியல் நன்கு நிகழ்வதாகவே எண்ணி, அமைதியோடிருந்

தனர். பெருமக்கள் கருத்தை மற்றெல்லாரும் மதித்துப் போற்றும் நெறி நிலைத்த அந்நாளிலே ஒரு புதுமை தோன்றியது. சோழ குலக் குமாரர் இருவர் தந்தை செல்லும் நெறி கண்டு மனம் வெம்பினர். உள்ளூரப் புகைந்த உணர்ச்சி மெல்ல மெல்ல வெளிப்படலாயிற்று. செல்வர் இருவரும் தம்மை யொத்த இளம் பிள்ளைகளைத் துணைசேர்த்து ஒரு சிறு படை திரட்டினர். நாட்டுப்படையிலும், இளைஞராய் இருப்பவரைத் தம் கருத்துக்கு இணங்கச் செய்தனர். படையே இரு பிரிவாகப் பிரிந்தது. மக்களிலும் முதியவர் கட்சி ஒன்று, இளைஞர் கட்சி ஒன்று என்று இருவேறு வகையாகப் பிரியும் என்றே தோன்றியது.

**குமாரர் எதிர்ப்பு:** அரச குமாரர் ஒரு நாள் தம் தோழர்களோடு ஆராய்ந்து ஒரு முடிவு செய்து, தாம் திரட்டிய படைகளோடு உறையூர்க்கு வெளியே சென்று அரணை முற்றுகையிடலாயினர். அரண் புறத்தே பெரும் படை திரண்டு முற்றுகையிடும் போது, அரணகத்தே நகர்க்கு நடுநாயகமான அரச மாளிகையில் சோழ மன்னனும் சான்றோரும் கூடியிருந்தனர். அயல் நாட்டிலிருந்து பகைப்படைஞர் அரணை வளைத்து முற்றினால், உள்நாட்டுள் உண்டாகும் பரபரப்பு, இப்பொழுது உண்டாகவில்லை. அகப்படையிலே தந்தையும் மாமனும் தமையனும் அரசன் கடமை பூண்டு வில் வேல் ஏந்தி நின்றார். புறப்படையிலே இளஞ் செல்வர் எல்லாரும் ஒரு மனத்தோடு இளவரசுகளின் துணைமை பூணும் துணிவோடு நின்றனர். கோப்பெருஞ் சோழனே அரணகத்திருக்கும் படையை

நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

சோழ நாட்டில், அறம் நின்று நிலைபெற்ற உறையூரில் இங்ஙனம் தந்தையும் மைந்தரும் எதிரெதிர் நின்று பகைவர் போலப் போர் புரிய முனையும் புதுமையைக் கண்டு நன்மக்கள் மனங்கள் புழுங்கின. தந்தையை எதிர்க்கும் மைந்தர் பிறந்து அறியாத நாட்டிலே, மைந்தரை வெறுக்கும் தந்தையர் ஒருவரேனும் இருந்தறியாத நாட்டிலே இங்ஙனம் எழுந்த புதுக் குழப்ப விளைவு என்னாகுமோ என்று குடிகள் கலங்கினர். 'எவர் மனந் தளர்ந்தாலென்! எவர் மனம் கலங்கினாலென்! எவர் நம் செயலை இகழ்ந்தாலென்! எவர் நம் எதிர்த் திறத்தைப் புகழ்ந்தாலென்! நாமே எடுத்த செயலை வெற்றிகண்டன்றி நிறுத்த மாட்டோம்'என்று இளைஞர் அறைகூவினர், அரசன் போர் நிகழ்த்தவே துணிந்து படைகளை அணிவகுத்து அரணகத்தே பல பக்கமும் போக்குவதை நல்லோர் பலரும் கண்டு மனம் கலங்கினர்.

நகர்ப்புறத்தே உள்ள பறந்தலையில் வில், வேல், வாள் முதலிய படைகளோடு திரண்ட இளவரசர் படை போர்! போர்!! என்று முழங்கியது. இளவரசுகள் இருவரும் படைஞரை அடக்கி நிறுத்திப் போர் தொடங்கு முன்பு தூது விடத் துணிந்தனர். தூதர் இருவர், புறத்தார் படையிலிருந்து அகத்தே வந்து அரசனிடம் இளைஞர் கருத்தைக் கூற வந்தனர். சோழ மன்னன் சான்றோர் அவையில் அமர்ந்திருந்தான்.

**சோழன் :** பொத்தியாரே, அன்பர்களே, இன்ற ளவும் நாம் கண்டு கேட்டு அறியாத புதிய நிலைமை ஒன்று நம் நாட்டிலே தோன்றியிருக்கிறது. நாம் தக்கவாறு முயன்று நம் நோக்கம் நிறைவேறப் பார்க்கவேண்டும்.

**தூதுரை :**

**தூதன் ஒருவன் :** அரசர் பெருமானே, அமைச்சர் தலைவரே, பகைக்கும் எண்ணம் சிறிதும் எமக்கு இல்லை. இளவரசுகட்கும் இல்லை என்றே கூறுவோம். உறையூர்ப் புறத்தே இளவரசர் படை திரண்டிருப்பது பகை நோக்கம் இல்லையோ, என்று கேட்கலாம். இளவரசர் இருவரும் கருதும் கருத்தை வணக்கத்தோடு தெரிவிக்கவே வந்தோம். புறப்படையில் மைந்தர் வில்லேந்தி நிற்கின்றார். அகப் படையிலே தந்தையர் வாள், வேல் ஏந்தி நிற்கின்றார். இப்போர் நடந்தால் உலகமே நம்மை இகழும் என்பதை நன்கு அறிவோம். போர் நிகழாதிருக்க ஒரு வழி கூறுகின்றோம். அரசி யற் பொறுப்பில் மனம் ஊன்றி, மனிதப் பிறப்பு முடிந்த பிறகு வரும் வாழ்வு என்ன என்ற ஆராய்ச்சி யிலேயே பொழுது போக்கும் சான்றோர் குழுவி லிருந்து அரசர் பெருமான் விலகவேண்டும். குடிகள் நலம் ஒன்றே கருதி அரசை நடத்த வேண்டும். இச் சிறிய சீர்திருத்தம் நிகழ்த்த மனம் இல்லை என்றால் அரசாட்சியை இளவரசரிடம் ஒப்பித்துச் சான்றோர் குழுவோடு அரசரும் வனத்திற் சென்று முனிவர் போல வாழலாம். இக் கருத்து ஒருவர் இருவர் நினைத்

ததன்று. உறையூர்ப் புறத்தே நிற்கும் மக்கள் அனைவரும் கொண்ட ஒற்றுமை எண்ணமே ஆகும்.

பொத்தியார்: சான்றோர் உறையூருள் இருப்பதற்கும் இடம் இல்லை என்று கூறுகிறீர்களா? சான்றோர் குழுவின் தலைமை பூணத்தக்க அரசர், வனவாழ்க்கை மேற்கொள்ள வேண்டுமா? அரசர் இன்று ஆளும் முறை குடிகள் நலங் கருதிய முறையாகாதா?

தூதன் மற்றொருவன்: அமைச்சர் தலைவரே, அரசர் பிரான் எம் சொல்லைச் செவியில் ஏற்கவில்லை. நன்மக்களை வெறுக்க வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. உறையூரிலோ சோழ நாட்டிலோ இம்மை மறுமை ஆய்ந்து மெய்ம்மை தெளியும் சான்றோர் இருத்தல் தகாது என்று நாங்கள் கூறவில்லை. அவர்கள் வாழ்வு தனிமை வாழ்வாக இருக்க வேண்டும். அரசின் போக்கையே மாற்றுவதாய் இருக்கக் கூடாது. இரவும் பகலும் அரசர், இப்பெருமக்களையே வணங்கி வாழ்ந்தால் அரசு நடப்பது எப்படி? குடிகள் குறை நீங்குவது எப்படி என்றே கேட்கிறோம். நாடு செழிக்க வேண்டிய நல்வழிகளைச் சென்ற மூன்றாண்டுகளாக நம் மன்னர் பெருமான் சிந்திக்கவே இல்லை. மூன்றாண்டுகளாக நம் நாட்டின் வருவாய் வளர்ச்சியில்லாமல் இருக்கிறது. படைஞர் அயல் நாடுகளிற் போர் புரியப் போகும் பழக்கம் இல்லை. நம்மைப் பகைவர் தாக்க வந்தாலும் வணங்கி, வரம் வேண்டும் நிலையில் இருக்கின்றோம். நாட்டின் நிலை இங்ஙனம் இருப்பது அரசர் மனத்துக்கு உவப்பாயிருக்கலாம். இளவரசுகள் இந் நிலை கண்டு பொறுக்க மாட்டாமலே, இப் போர்

நிகழ்ச்சி எழுந்துளது. அரசர் மனநிலை மாற வேண்டும் என்பதே எம் வேண்டுகோளாம். போர் நிகழ வேண்டும் என்று இளவரசர் இருவரும் துடிப்பதாக நாங்கள் உரைக்க மாட்டோம்.

சோழன்: தூதுவர்களே, உங்கள் கருத்தை அறிந்தோம். இனி நீங்கள் போகலாம். நமது கருத்தை விரைவிலே தெரிவிப்போம். போர் நிகழ்ந்தாலும் நிகழா விட்டாலும் உம் இனத்தார் வேண்டுகோள் கேட்டு, மனம் மாறும் நிலையில் நாம் இல்லை என்றே கூறுவோம்.

தூதன் ஒருவன்: அரசர் பெருமான்! போர் நிகழுமாயின் நாடு என்ன பாடுபடும் என்பதை நாங்கள் கூறவேண்டா. உலகம் காணாத ஒரு புதுமைப் போர் நம் நாட்டில் நிகழ வேண்டும் என்பது அரசர் கருத்தாயின், நாங்கள் அதனை மறுத்துரைக்கும் வலிமை இல்லோம். விடை பெறுகின்றோம்.—தூதர் இருவரும் சென்றனர். கோப் பெருஞ் சோழன் சிந்தனையில் ஆழ்ந்தான். அவைக்களத்தில் இருந்த நன்மக்கள் தலை குனிந்தனர். சிறிது பொழுது மவுனம் நிலவியது.

சோழ அரசன் வாய்மொழி: நன்மக்களே, இனி நாம் தகுதி யில்லாதவர் ஆயினேம். நற்பொருளைச் சிந்தனை செய்வது குற்றம் என்ற எண்ணம் புதுமையாய் எழுந்துளது. போர்ப் படை உறையூர்ப் புறத்தே திரண்டுளது. நாம் போர்க்குத் துணிவதே தகுதி என்று எண்ணுகிறேன். சோழ நாட்டில் உறையூரானை ஒருவன் முற்றுகையிட்டு வெற்றியோடு மீண்டான் என்ற இழிவை நாம் அடைதலாகாது.

படையிற் பெரும்பகுதி புறத்தே இருக்கலாம். ஆயினும் நாம் போர்க்குத் துணியவே வேண்டும். நம்மை எதிர்க்கத் துணிபவர் நம் உறவினர் என்ற எண்ணம் சிறிதும் கொள்ளலாகாது. அவர் நம்மை உறவாக மதியாது, பகை என்றே கருதியதால், நாமும் அவரைப் பகை என்றே கருதிப் போர் தொடுக்க வேண்டும். இது, முன் என்றும் நிகழாத புதுமைப் போரே ஆயினும் நாம் நம் கடமையை இயற்றியே ஆகவேண்டும். அரண் வலிமை குறைந்துளது என்று கூறமாட்டேன். அரண் வாயிற் கதவும் தன் உறுதி குறையாதிருக்கிறது. அகத்தே இருக்கும் படைஞர் தம் கடமை யாற்றுவதிற் சிறிதும் சோர்வு படமாட்டார் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

பாண்டியரையோ சேரரையோ புறத்தார் துணையாகஅழைக்கத் துணியார். அவரைப் படைத்துணை அழைப்பதால் தமக்கே கேடு விளையலாம் என்று அறிந்திருப்பார். நம் நாட்டுப் படையே இருதிறமாகப் பிரிந்து நடத்தும் இப் போரில் அகத்தே தந்தை இறக்கலாம்; புறத்தே மைந்தன் இறக்கலாம். பிறந்த எவனும் இறந்தேயாக வேண்டும். போர்க் களத்தில் இறக்க இடம் கிடைப்பது சிறப்பன்றோ! போர்க்கே துணிவோம். போர்ப் பொறுப்பை நானே ஏற்க வேண்டுமாதலால் இன்றோடு நான் உங்களிடம் விடைபெற்றுக் கொள்ள விரும்புகிறேன். போர் தொடங்கு முன்னே நீங்கள் உங்கள் ஊர் களுக்குப் போய் உங்கள் உற்றார் உறவினரோடு சேர்ந்து வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்.

**பொத்தியார்:** அரசர் பெருமானே, போர் நிகழ்ந்தே ஆகவேண்டும் என்பது இறைவன் திருவருள் என்றால் இங்குள்ள நன்மக்கள் கருத்தை அறிந்து பிறகே போர் தொடங்கலாம்.

**சோழன்:** பெருமக்களே உங்கள் கருத்தை ஒளியாது வெளியிட வேண்டுகிறேன்.

**எயிற்றியனார்:** அரசே, நான் ஒன்று கூற விரும்புகிறேன். செவிசுடும் சொல்லாகத் தோன்றினாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**சோழன்:** செம்மனம் படைத்த சீரியர் உரைக்கும் சொல் ஒரு நாளும் என் செவியைச் சுடாது. மனத்தையும் வாட்டாது. உங்கள் கருத்தை உள்ளவாறு உரைக்கலாம்.

**புலவர் அறிவுரை:**

**எயிற்றியனார்:** அரசர் பெருமானே, இன்றளவும் போர்க்களங்களில் வெற்றியே பூண்டு சோழ நாட்டு மக்களை உமது வெண் குடை நிழலில் நன்கு வாழச் செய்துள்ளீர். இன்று உம்மை எதிர்க்கத் துணிந்த இருவரும் பழங்கால முதல் உம் குடியைப் பகைத்த குடிகளில் வந்தவர் அல்லர். போர்க்களப் புதுமையைக் காணும் கருத்தால் எழுந்தவர் போலவே தோன்றுகிறார். நீரும் அச்செல்வர்களைப் பகைக்கத் தக்க குடியிற் பிறந்தவரில்லை. இவ்வுலகில் இன்னும் பல்லாண்டு குடிகள் உவப்ப அரசாண்டு உயர்ந்தோ

ருலகத்துக்குப் புறப்படும் நாளில், இச் செல்வம் அவர்க்கே உரியதாகும். புகழையே விரும்பும் புரவலர் ஏறே, இன்னென்றும் கேட்டருளவேண்டும். பெரும் படை திரட்டி மனவுரனேடு இன்று உறையூர்ப் புறத்தே உம்மை எதிர்க்கத் துணிந்திருக்கும் இருவரும் தோற்பதாகவோ போர்க்களத்தில் இறப்பதாகவோ நேரிடுமானல், இச்செல்வத்தை இனி யார்க்குக் கொடுக்க எண்ணியுள்ளீர்? இப்புதுமைப் போரில் அவர்க்கு நீர் தோற்ருலோ உமது குடியை இகழும் பகைவர் மனம் மகிழப் பெரும் பழியைப் பூணநேருமே! ஆதலால் அறம் அறிந்த அரசே, சான்ருேர் இணக்கமே துறக்கம் என்று துணிந்த மன்னர் பெருமானே, இப்போர் நிகழவேண்டா. நாம் எல்லோருமே நகர்க்குப் புறத்தே போய்விடுவோம். நாடாளும் விருப்பம் யாருக்கு உண்டோ அவரே நாட்டைக் கைக்கொண்டு ஆள்வாராக.

**பொத்தியார் :** மிகச் சிறந்த கருத்தை நன்ருக உரைத்தீர்.

**சோழன் :** பெருமக்களே, உங்கள் மனக்கருத்தைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன். ஒரு நாட்டை இரண்டாக்கும் போரில் எனக்கும் கருத்தில்லை. பழமைப் பெருமை பூண்ட ஒரு குலத்தை இரு துண்டாடும் சமர்க்களத்தில் நுழைய என் உள்ளம் இசையவில்லை. ஆயினும் என் மக்கள் இங்ஙனம் என்னைப் பகைக்கத் துணிந்ததால் நான் இனி இவ் வுறையூரில் வாழ விரும்பவில்லை. இன்றே உறை

யூர்க்கு வெளியே சென்று உணவும் நீரும் உட்கொள்ளாது உயிர்விடத் துணிந்தேன்.

**எயிற்றியனார்:** அரசர் துணிவு அதுவாயின் இங்கு இன்று கூடிய அனைவருமே உறையூர்ப் புறத்தே வடக்கிருந்து உயிர்விடவே துணிந்தோம்.

**பொத்தியார்:** எனக்கும் அப்பேறு வாய்க்குமா?

**சான்றோர் வடக்கிருத்தல்:** சோழ மன்னன் அவைக் களத்தில் நிரம்பிய சான்றோர் எல்லோரும் அன்றே அவனுடன் வடக்கிருந்து உயிர் துறக்கத் துணிந்ததால், இளஞ் செல்வர் போர் முழக்கம் எழுமுன்பு, உறையூர் அரண்வாயிலை அகலத்திறந்து, மெல்ல நடந்து வெளிச் சென்றனர். அரசன் முன் சென்றான். பொத்தியார் இறுதியில் நடந்து வந்தார். மற்ற நன்மக்கள் எல்லாரும் இடையே நடந்தனர். உறையூர் நகரமக்கள் இக்காட்சியைக் கண்டு கதறிக் கண்ணீர் பெருக்கினர். உறையூர் அரண்மனை வெறும்பாழ் போலக் காட்சி கொடுத்தது. நகரத்தின் அரண்வாயில் கடந்து சிறிது தூரத்தில் இருந்த ஒரு பெரும் பறந்தலையில் கூடிய சான்றோரும் சோழமன்னனும், தமக்கு அமைந்த இடம் தேடிக்கொண்டு, இறைவனை உள்ளத்தில் நிறுத்தி வடக்கிருக்க அமர்ந்தனர்.

**பொத்தியார் அன்பு:** பொத்தியாரும் அக் குழுவில் அமர்ந்து உயிர்விட மனங் கொண்டார். சோழன் அவர் கருத்தை அறிந்தான். பல்லாண்டு தாம் அமைச்சுப் பூணும் பேறு பெற்ற பெரு மன்னனை

இந் நிலையிற் பிரிய அவருக்குச் சிறிதும் மனம் இல்லை என்பதை அங்கிருந்த சான்றோர் எல்லாரும் அறிந் தனர். சான்றோர் பலரோடு அளவளாவியே வாழ்ந்த மன்னன் அச் சான்றோர் குழுவின் இடையே உறையூர்ப் பறந்தலையில் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்த காட்சியை நகரமக்கள் கண்டு கண்டு துயர்க் கடலிலாழ்ந்தனர். இளவரசரும் படைஞரும் அரண் வாயில் திறந்தது கண்டு உறையூரைக் கைக் கொண் டனர். நகரமும் அரண்மனையும் இருந்த நிலை கண்டு இளவரசர் மனமே துணுக்குற்றது. அவ்விருவர்க்கும் துணைநின்ற பிற இளைஞரும் எதிர்பாராத வண்ணம் உறையூர்ப் போர் எளிதில் முடிந்தது கண்டு ஒன்றும் கூற இயலாது நின்றனர்.

பறந்தலையில் வெயில் பனி முதலிய வேற்று மையை அறியாமலே அரசரும் சான்றோரும் இரண்டு நாட் கழித்தனர். மூன்றாம் நாள் அரசரை நோக்கிப் புலவர் சிலர் "அரசே, பிசிராந்தையார் என்ற பாண்டிய நாட்டுப் புலவர் உமக்குச் சிறந்த நண்பர் என்று அடிக்கடி கூறுவதுண்டே. இப்பெருங் குழுவில் அவர்க்கு இடம் இல்லையா?" என்று கேட் டனர்.

சோழன்: பொதியமலைக் கிழவனை பாண்டியன் நாட்டில் இன்று என்னையே நினைத்திருக்கும் பிசிராந் தை என்ற புலவர் என் உயிரையே போற்றும் நன் மனம் உள்ளவர். அப்புலவர் பெருமான் நான் பெருஞ் செல்வத்தோடு வாழ்ந்த நாளில் என்னை வந்து

பார்த்ததே இல்லையாயினும் உயிர்விடத் துணிந்திருக்கும் இந்நாளில் இங்கு வராதிரார்.

**கண்ணகனுர்:** அரசே, நீர் முன்பு அப்புலவரைக் கண்டதும் இல்லை. அவரோடு நெருங்கிப் பழகியதும் இல்லை. அவரை நண்பர் என்று எங்ஙனம் கொண்டீரோ!

**பிசிராந்தையார் சிறப்பு:**

**பொத்தியார்:** புலமையிற் பெரியீர், அரசர் பெருமான் பிசிராந்தையார் உள்ளத்தை உணர்ந்தவர். அப்புலவரும் நம் அரசர் மனமாண்பை நன்கு உணர்ந்தவர். நெடுங்காலமாகவே இருபெருஞ் செல்வரும் நண்பு பூண்டிருப்பதை நான் அறிவேன். அவருக்கு இன்றைய நிலை தெரியாது என்று கூற என் மனம் துணியவில்லை.

**சோழன்:** அன்பர்களே, அறிவுடைப் பெருமக்களே நாம் மன வொற்றுமையால் இன்று இங்கு இறைவன் திருமுன் வேறு நினைப்பின்றி அமர்ந்திருக்கிறோம். பிசிராந்தையார் எவர் புகழையும் பாடி வாழும் நிலை இல்லாதவரே. ஆயினும், அவர் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு ஒரு பாடல் பாடி அருளியிருக்கிறார். எனக்கும் ஒன்று பாடியிருக்கிறார். புகழ் விருப்பம் இல்லாத புலவர் பாட்டு ஆதலின், அதனை உலகம் அறியவில்லை. பாண்டிய மன்னன் சிறந்த புலமை பூண்டவன் ஆதலின், இரு செய்யுட்களையும் பொன்னேட்டில் எழுதி எனக்குப் போக்கியுள்ளான். என்னை

மதித்துப் பாடிய பாடல் அன்னத்தை என்னிடம் தூது விடுவது போல அமைந்தது. அறிவுடைநம்பி செவியேறப் பாடிய பாடலே அரசனுக்கு அமைச்சர் தரும் அருள்மொழி போன்றது.

**பூதநாதனார் :** பிசிர்ப் புலவர் இரண்டு செய்யுள் பாடியிருக்கின்றாரா? இன்றளவும் நாங்கள் கேட்கவில்லையே!

**பொத்தியார் :** அவர் பாடியிருப்பது உண்மையே. சோழ நாட்டில் பெருஞ் செல்வங்களாக அச் செய்யுட்கள் இன்றளவும் மிகவும் மறைவாகப் போற்றப்பட்டன. இனி அவை உலகத்துக்கே பொதுச் செல்வம் ஆகும். பாண்டியநாட்டுப் பெரும் புலவர், சோழமன்னனோடு நண்பு பூண்டிருப்பது புதுமை என்றே தோன்றும். வள்ளுவப் பெருந்தகையார் " புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்" என்று அருளிச் செய்திருப்பதை நாம் எளிதில் மறக்க இயலாதே. வள்ளுவர் வகுத்த இலக்கணத்துக்கு இலக்கியமாய் இருப்பவர் அப் புலவரும், இப் புரவலருமே ஆவர். உணர்ச்சியே கிழமை தரும் என்று நம் மனமும் உணர்கிறது. அரசர் பெருமான் இன்று இருக்கும் நிலையைப் பிசிர்ப் பெரும் புலவர்க்கு ஒருவரும் தெரிவிக்க வேண்டா. அவர் மனமே இந் நிகழ்ச்சியை உணர்ந்து விரைவில் இங்கு அவரை அழைத்துவரும்.

**கண்ணகனார் :** அரசர்பிரானே, பொன்னேலையிற் பொறித்து வைத்த பிசிர்ப்புலவர் செய்யுட்களின் கருத்து என்னவோ?

**சோழன்:** அறிவுடைநம்பிக்கு உரைத்த அற வுரையை முதலிற் கூறுகிறேன். “நன்கு முதிர்ந்து காய்ந்த நெற்கதிரை அறுத்து அடித்து, நெல்லை அரிசி யாக்கிச் சோறு சமைத்துக் கவளமாகப் படைத்தால், ஒரு பெருங் களிற்றுக்கு மிகச் சிறு நிலத்தில் விளைந்த நெல்லும் பல நாளைக்கு உதவும். அவ் யானை தனியே சென்று தானே புகுந்து உண்ணுமாயின், நூறு வயல்களில் விளைந்த நெல்லே ஆயினும் அதன் வாயிற் புகுவதைக் காட்டிலும், கால்களால் மிகவும் பாழாகும். அது போலவே, அறிவுடை வேந்தன் குடிகளிடம் இறைபெறும் நெறி அறிந்து பெறுவானேயானால், கோடிக் கணக்காக நாட்டின் செல்வம் வளர, நாடும் நலம் பெறும். அரசன் வலிமை யற்றவனாக இருக்க, முறை நெறி தெரியாத பரிவாரங்களும் அமைந்து, குடிகள் வருத்தம் அறியாது, மனம் போலக் கைக் கொள்ளும் பிண்டத்தை விரும்பினால் அரசனும் உண்ண இயலாது; உலகமும் பாழாகும். யானை புகுந்த புலத்தில் அதன் வாயிற் புகும் நெல்லைக் காட்டிலும், கால்களால் அழிவது மிகுதி ஆவதுபோல, அறிவற்ற அரசன் தான் உண்ணப் பெறும் பொருளைக் காட்டி லும் தன் பரிசனம் மிகவும் அழிக்க இடம் தருவான்.

**கண்ணகனார்:** யானை எத்தனை அழகிய உவமை ஆயிற்று. அரசன் பெருமையை விளக்கவும் அறி வில்லாத அரசனை இழிக்கவும் எத்துணைப் பொருத்த மாய் உள்ளது! பிசிராந்தையார் வாக்கிற் பிறந்த சொல் எளிதாய் இருக்குமா? அறிவு நிரம்பிய அரசன் செவியேறிய செய்யுள் சிறவாதிருக்குமா?

**பூதநாதனுர்:** அன்னச் சேவலை அழைத்த பாடல் என்ன கருத்துள்ளதோ?

**சோழன்:** அன்னச் சேவலே! அன்னச் சேவலே!! நாட்டை நன்கு புரக்கும் செங்கோல் வேந்தன் முகம் போல முழு வெண்டிங்களின் நிலா விளங்கும் மாலைக் காலத்தில் யாம் வருந்த நீ குமரிப் பெருந்துறையில் அயிரை மீனைத் தின்று, வடமலை நோக்கிப் பறப்பாயாகில், இடையிலே சோழ நாட்டில் சற்றே இறங்குவாயாக. உறையூரிலே அரண்மனையை அணுகி உனது பேடையோடு உட்புகுந்து எம் பெருங் கோக்கிள்ளி கேட்கப் பிசிராந்தையின் அடியுறை என்று கூறுவாயாகில், உனது அன்பு சிறந்த பேடை அணியும்படி அம்மன்னன் உனக்கு அரும் பொன் கலன்கள் தந்தருள்வான்.

**கண்ணகனுர்:** கோப்பெருஞ் சோழரைக் கண்டு தம் கருத்தை உரைக்கும் வாய்ப்பை அன்னச் சேவலின் உதவியாற் பிசிராந்தையார் பெறுகின்றார். அரசே, இங்ஙனம் உள்ளம் உருகிப் பாடிய புலவர் இன்னும் இங்கு வந்தாரில்லையே!

**சோழன்:** அறிவு சான்ற பெரியீர்! எம் நட்புக் கேள்வியளவால் நிகழ்ந்ததே. காட்சிப் பழக்கம் இன்னும் இல்லை என்பது உண்மையே. இங்ஙனமே பல்லாண்டாக இந்த உள்ளத்துணர்ச்சி பெருகி வந்துள்ளது. இங்ஙனம் இருவர் நட்புப் பூண்பதும் அதனை உறுதியாகக் கடைப்பிடிப்பதும் அரிதே என்று ஐயம் கொள்ள வேண்டா. பிசிராந்தையார்,

இகழ்ச்சி இல்லாதவர். இனிய பண்பினர். என்பால் யாத்த மெய்ந்நட்பு உடையவர். தமது புகழ் கெட வரும் பொய் ஒழுக்கத்தை என்றும் வேண்டார். தம் பெயரைப் பிறர் கேட்க உரைக்கும் போது என் பெயர் பேதைச் சோழன் என்று கூறும் காதற் கிழமை உடையவர். ஆதலால் இன்றளவும் இங்கு வாராதிருந் தாலும் இன்று வாராதிரார். இப்பொழுதே வருவார். அவர்க்கும் இங்கு இடம் ஒழிப்பீராக.

**பிசிர்ப் புலவர் வருகை :**

புதிய கிழவர் ஒருவர் அங்கு வருகின்றார். அவர் பழுத்த முதுமையின் வடிவமாக விளங்குகின்றார். அன்பின் கனிபோலவே காட்சி அளிக்கின்றார். பொத்தியார், அவரே பிசிராந்தைப் பெரும் புலவர் என்று உணர்கின்றார். கோப்பெருஞ்சோழன் அவர்க்கு வலப்பக்கத்தே இடம் தருகின்றான்.

**பொத்தியார் :** நினைத்தால் மனம் மருளும்; என்ன புதுமை இது! மன்னர் பெருமான் எத்துணைச் சிறப் போடு இக் கருத்தைத் துணிவாக உரைத்தருளினன். பிற மன்னன் நாட்டிலே புகழோடு விளங்கும் ஒரு பெருஞ் சான்றோர், புகழே துணையாக, நட்பே பற்றுக் கோடாக இந்த வேளையில் இங்கு வருதல் அதனினும் மருட்கை உடையதே! புதுமையிற் புதுமை இதுவே! இப்புலவர் இப்பொழுது இங்கு வருவார் என்ற மன்னன் பெருமையும், மன்னர் பெருமான் வாய் மொழி பழுது படாமல் வந்த புலவர் அறிவின் சிறப் பும் நாம் வியக்கும் தோறும் வியப்பின் எல்லையைக்

கடந்ததே! அதனல் தன் கோல் இயங்காத தேசத்தில் உறையும் சான்ரூேர் நெஞ்சில் உறப்பெற்ற புகழ் மிக்க மன்னனை இன்று இழக்கும் உலகம் இரங்கத் தக்கதே.

**கண்ணகனர்:** உலகம் நற்பொருளை இழக்கும் காலம் இது என்பது தெளிவே. பொன்னும், பவழமும், முத்தும் மலையிற் பிறந்த மணியும் நெடுந்தொலையில் உள்ள வேறுவேறு இடங்களிற் பிறப்பன ஆயினும் அருவிலை பெறும் நற்பணி ஒன்றை அமைக்கும் போது ஒரு பக்கத்தில் இசைந்தாற்போல என்றும் சான்ரூேர் சான்ரூேரோடு இணங்குவர். ஏனையோர் தமக்குத் தக்க இனத்தோடு சேருவர்.

**பூத நாதனர்:** ஆற்றின் நடுவில் உள்ள மணல் மேட்டிலே பெருமரம் ஒன்றின் நிழலில் உயிர் விடத் துணிந்து உடம்பை வாட்டும் மன்னர் பெருமானே! இங்கு உடனுயிர் விடும் பேறு பெற்றவர் பலரே. எனக்கும் இங்கு இடம் கிடைத்ததே!

**சோழன்:** அன்பர்களே, இனி நாம் பலநாள் இந்த உடற்சுமை சுமக்க மாட்டோம். இன்ரூே நாளையோ இறைவனைக் காண்பது உறுதியே.

**பொத்தியார்:** மன்னர் பெரும, இக்குழுவில் உயிர் விட எனக்கும் உரிமை உண்டா?

**சோழன்:** அன்பரே, உமக்கு இப்பொழுது இங்கு உயிர்தரும் உரிமை இல்லை. எங்களுக்கெல்லாம் மக்கட்பேறு உண்டு. உமக்கு அப்பேறு இல்லை. நாளை

உமது நீர்க்கடன் கழிக்கத் தக்க ஒரு மகன் பிறந்த பிறகே, நீர் இங்கு வரலாம். அப்பொழுது உமக்கு இங்கு இடம் கிடைக்கும்.

**பிசிராந்தையார்:** பொத்தியாரே, போய்வாரும். சோழன் வாய் பொய்உரையாது. நடுகல் ஆனாலும் உமக்கு இடம் உண்டு.

**பொத்தியார்:** பெரியீர், உமக்கு மூதுமை தெளிவாக வந்துள்ளது. ஆண்டு எழுபதுக்குமேல் இருக்கவேண்டும். உமது சென்னியில் நரை சிறிதும் இல்லை. முகத்திலும் நரை தோன்றவில்லை. இதற்கு என்ன காரணமோ?

**கண்ணகனார்:** பிசிர்ப் புலவர் பெருமானே, நானும் உமது திருமுகம் நோக்கியதும் நினைத்த நினைப்பு இதுவே. பெருமக்கள் முன்பு இதனை எப்படிக் கேட்பது என்று அடங்கி இருந்தேன்.

**நரைக்கு மருந்து:**

**பூத நாதனார்:** நரைக்கு மருந்து ஏதேனும் உண்டோ?

**சோழன்:** இனி நாம் மருந்தே வேண்டாத உலகத்து வாழ்வு பெறப் போகிறோம். நரை மருந்து நமக்கேன்?

**பிசிராந்தையார்:** நரைக்கு மருந்து எளியதே. நம்மிடமே உளது. மருத்துவரைத் தேடிப் பெற வேண்டா. ஆண்டுகள் பலவாகியும் நரை இல்லாதிருப்

பது எவ்வண்ணம் என்று கேட்கின்றீர்கள். என் இல்லத்தில் உத்தம குணம் உள்ள மனைவியும் மக்களும் நிறைந்திருக்கின்றனர். ஏவலரும் நான் விரும்பியதே செய்வர். எம் நாட்டில் உள்ள மன்னன் மறம் ஒழிய, அறம் வளர அரசாள்கின்றான். இவ்வளவுக்கும் மேலாக ஆன்றவிந்து அடங்கிய கொள்கையுள்ள சான்றோர் பலர் எம் ஊரில் இருக்கின்றனர்.

**கண்ணகனார்:** சோழமன்னரை நண்பராகப் பெற்ற பாண்டிய நாட்டுப் புலவரேறே! உம் தமிழ்த்திரு நாட்டில் அரசும் குடிகளும் நன்கு அமைந்திருப்பது கேட்டு என் மனம் மிகவும் மகிழ்கிறது. உலகம் எங்கும் அறம் ஓங்குக. அருள் பெருகுக. உண்மை உயர்க. இறைவனை உணரும் ஏற்றம் உடைய சான்றோர் தொகை பெருகுவதாக.

**பொத்தியார்:** அரசே! இக்குழுவிலிருந்து என்னைப் பிரித்த வினையையே நோவேன். வேறு எதனையும் எவரையும் நோகேன்.

**உயிர் துறத்தல்:** கோப் பெருஞ் சோழனும் அவனைச் சூழ்ந்த சான்றோரும் உறையூர்ப் பறந்தலையில் வடக்கிருந்து உயிர் துறந்தனர். பொத்தியார் இக்காட்சியைக் கண்டு கண்ணீர் சொரிந்து நின்றார். பிறகு உறையூருக்குச் சென்றார். அரண்மனையைச் சுற்றிவந்தார். இளவரசர் இருவரும் தம் துணைவரோடு அரசு பூண்டிருக்கும் நகர்க்குள் நடக்கவும் அஞ்சினர். தம் அரசனைக் காணாமையால் எங்கும் அவர்க்குப் பாழாகவே தோன்றியது. உறையூர் நடுவே நடந்தார். அங்குள்ள பெருமன்றத்தைப் பார்த்தார். அதனை

நோக்கி மனம் நைந்தார். "பெருஞ் சோறு கொடுத்துப் பல்லாண்டு வளர்த்த பெருங்களிற்றை இழந்து துயர் கூர்ந்த பாகன் அவ் யானை இருந்த பாழாலையிலே கட்டுத்தறி பாழாய் இருக்கக் கண்டு கண்ணீர் விட்டது போலவே இன்றளவும் என்னை ஆண்ட தேர் வீசும் வள்ளல் கோக்கிள்ளி போகிய பிறகு பாழாகக் கிடக்கும் இம்மன்றத்தைக் கண்டு கலங்குகிறேன்" என்றார்.

பொத்தியார் துயரத்தோடு, அரசன் ஆணையை மறுத்தற்கு அஞ்சி அவர் தம்மூர்க்குச் சென்றார். உறையூரில் பொத்தியார் வந்து கண்ணீர் விட்டுக் கதறிச்சென்ற காட்சியைக் கண்ட தூதர் சிலர் கூறிய சொற்களால் அரசர் பெருமான் இறந்தது அறிந்த இளவரசர் இருவரும் பறந்தலைக்கு வந்து ஈமக்கடனை முறையே கழித்து அங்கு உயிர் கொடுத்த மன்னனுக்கும் நடுகல் நட்டு வழிபாடும் நடத்தினர்.

பொத்தியார், ஒரு மகன் பிறந்த பிறகு உறையூருக்கு மீண்டு வந்தார். சான்றோர் சூழ வீற்றிருந்த வண்ணமே அரசனுக்கு நடுகல் அமைந்திருக்கும் காட்சியைக் கண்டார். "பாடிய புலவர்க்கு வாரிக் கொடுத்த புகழாளன்; ஆடும் தொழிற்கு உவந்து ஈந்த அன்புருவினன்; அறவோர் புகழ்ந்த செங்கோலன்; திறம் மிக்க மறவர் புகழ்ந்த திண்ணிய வீரன்; மகளிர்க்குச் சாயல்; மைந்தருக்கு மைந்து; குற்றமற்ற கல்வி கேள்வி உள்ள உயர்ந்தோர் புகுமிடம்; — கோப் பெருஞ் சோழன் இத்தகைய பெரியோன் என்று அறியாது கூற்றம் உயிர் உண்டதே! புலவர்களே, அதனை நாம் ஒன்று கூடி

வைவோம் வாரீர். சோழர் பெருமான் உலகம் உவப்ப உதவும் நிலை மாறி நடுகல் ஆகிய துயரம் தந்த எமனை நாம் இகழ்ந்தே அழிப்போம்" என்றார். தமக்கு அங்கு இடம் வேண்டும் என்ற எண்ணத்தால் "அரசே, உன்பால் விருப்பம் மிக்க மனைவி மகனை ஈன்றபின் வருக என்று கூறி அன்று என்னை ஒழித்த அன்பிலா மன்ன, இங்கு எனக்கு இடம் தருவதாய் உரைத்த சொல்லை மறக்கவில்லையே. என்னிடம் எங்கு உள்ளது கூற வேண்டுகிறேன்" என்று வேண்டினர். சோழ மன்னன் நடுகல் சிறிது விலகி இடந் தந்தது. பொத்தியார் அங்கு அமர்ந்து வடக்கிருக்கத் துணிந்தார். அப்பொழுதே அவர் மனம் நடுகல் ஆகியும் இடம் தந்த சான்றோர் தலைவனை நினைத்து உருகியது.

---

## 5. சோழன் செங்கணான்

கோச்செங்கட் சோழ நாயனார் என்ற சிறப்புப் பெயரால் பெரிய புராணத்திலே கேட்கப்படும் சோழ மன்னன் உறையூரில் இருந்து அரசாண்ட மரபிலே வந்தவனே. இம்மன்னன் பண்டைத் தமிழ் மன்னர் குலத்திலே பிறந்தவனே ஆயினும் கரிகாலனுக்குப் பிற்பட்ட சோழருள் இன்னகாலத்தவன் என்று உறுதியாய் அறிய இயலாத நிலையில் இருக்கின்றான். பெரிய புராணத்தில் இம்மன்னன் வரலாற்றைக் கூறப்புகுந்த சேக்கிழார், சுபதேவன் என்ற சோழனுக்கும் இராசமாதேவியான கமலவதி என்ற அரசிக்கும் பிறந்த அரும்பெறல் மைந்தனே செங்கணான் என்று கூறுகிறார். சங்ககாலத்துச் சோழ மன்னர் பெயர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பெயர்களாகவே இருக்கின்றன. அரசியர் பெயர் வடமொழியிலே வழங்கிய வரலாறுகள் இல்லை.

**செங்கணான் பிறப்பு:** செங்கட் சோழன் தந்தை தாயார் பெயர் வேறு ஆதரவுகளால் அறியப்படாமையால் இவ்வண்ணம் சேக்கிழார் கூறுகின்றார் என்று அறிந்துகொள்வோம்.

பெற்றோர் நெடுங்காலம் மக்கட் பேறு இல்லாதிருந்து பல திருப்பதிகளிற் சென்று இறைவனை வணங்கிய பிறகே இச் செல்வனைப் பெற்றனர் என்று பெரியபுராணம் கூறுகிறது. அங்ஙனமே உரிய காலம் கடந்து பிறக்க உதவினராம். குழவி பிறக்கும் போதே சிவந்த கண்களோடு தோன்றினான். இக்

காட்சிகண்ட தாய் என் 'கோச்செங்கணானே' என்று அழைத்து முத்தம் ஈந்து உயிர் பிரிந்தனள் என்று சேக்கிழார் கூறுகின்றார். சேர அரசருள் ஒருவன் யானைக்கட்சேய் என்ற பெயர் பூண்டான். அவன் கண்கள் யானைக்கண் போலச் சிறியவையாக இருந்ததால் அப்பெயர் தோன்றியது. இச்சோழன் பிறக்கும்போதே சிவந்த கண்களுடன் பிறந்ததால் செங்கணான் என்ற திருப் பெயர் பூண்டான்.

செங்கணான் முற்பிறப்பின் வரலாறு ஒன்று தேவாரத்தில் வழங்குகிறது. சேக்கிழாரும் அதனைக் கூறுகின்றார். திருவானைக்காவல் புராணமும் அதனை விளக்குகின்றது. இரண்டு ஆற்றின் இடையே உள்ள ஆற்றிடைக் குறைச் சோலையிலே, யானை ஒன்று ஒரு சிவலிங்கத்தைக் கண்டு, தன் துதிக்கையால் காவிரி நீர் தெளித்துப் பூக்களைப் பறித்து இட்டு, வழிபட்டு வந்தது. சிவலிங்கத்தின் மேல் வெயில் விழுவதுகண்ட சிலந்தி ஒன்று தன் வலையால் அவ்விலிங்கத்துக்கு நிழல் செய்தது. யானை, சிலந்தி வலையை அழித்தே தன் வழிபாட்டை இயற்றியது. சிலந்தி இரண்டொரு நாள் இக் கொடுமையைப் பொறுத்தது. ஒரு நாள் கடுஞ்சினம் கொண்டு, யானைத் துதிக்கையுள் நுழைந்து அதனைக் கடித்தது. யானை அந்த நஞ்சைப் பொறுக்க இயலாது, துதிக்கையால் அறைந்து சிலந்தியைக் கொன்று தானும் செத்தது. வழிபட்டு உயர்வு பெற்ற யானை துறக்கம் புக்கது. சிலந்தியே கோச் செங்கட் சோழ மன்னனாக வந்து பிறந்தது. இவ் வரலாறு இரண்டு, மூன்று புராணங்களில் வருவதே.

அன்றித் தேவாரத்திலும் ஆளப்பட்டிருப்பதால் சேக்கிழார் இதனை ஏற்றுக்கொண்டே கோச்செங்கட் சோழ நாயனர் வரலாற்றை விரித்துரைக்கிருர்.

**சோழன் திருப்பணிகள்:** செங்கட் சோழ மன்னன் முற்பிறப்பின் தொடர்பால் இறையன்பு பூண்டு, சிவாலயத் திருப்பணிகள் புரிய மனம் கொண்டான். சிதம்பரம் சென்று திருப்பணிகள் பல இயற்றினன். எழுபது சிவ தலங்களில் திருப்பணி புரிந்தான் என்ற வரலாற்றைத் திருமங்கை மன்னர் உரைக்கின்ருர். திருஞான சம்பந்தர், இச் சோழ மன்னன் பெருமையைத் திருவானைக்காத் தேவாரத்தில் அழகுற உரைத்திருக்கிருர்.

'சேங்கட் பேயர் கோண்டவன் சேம்பியர் கோன்
அங்கட் கருணை பேரிதாயவனே' (சம்பந்தர்)

கோச்செங்கணன் ஒரு தெய்வ வாள் பெற்று அதன் உதவியாலேயே பல மன்னரை வென்ருன் என்று கூறுவதுண்டு. இச் செய்தியைச் சேக்கிழார் தெளிவாக உரைக்கிருர். திருமங்கை மன்னரும் 'தெய்வ வாள் வலங்கொண்ட சோழன்' என்று பாடியிருக்கிருர். ஆழ்வார் மனிதரைப் பாட மனமில்லாதவரே ஆயினும், இம் மன்னன் பெருமையைப் பலபடப் புகழ்ந்திருக்கிருர். "செம்பியன் கோச்செங்கணன்' 'செங்கணன் கோச்சோழன்' 'தென்றமிழன் வடபுலக்கோன் சோழன்' 'தென்னடன் குடகொங்கன் சோழன்" என்று இம் மன்னன் வரலாறு விளங்கப் புகழ்ந்திருக்கிருர். திருமங்கையாழ்வார் இம் மன்னன் சிவபிரானுக்கு எழுபது கோயில் அமைத்த சிறப்பை

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு
எழில்மாடம் எழுபது செய்துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்"

என்று விளக்குகின்றார். சுந்தரரும் இப் பெருமன்னன் புகழைத் தேவாரத்திலே பாடியிருக்கின்றார்.

புகழ் மொழிகளே ஆயினும் இவை எல்லாம் இம் மன்னன் வாழ்க்கையின் வரலாறுகளே என்பதை நாம் அறியவேண்டும். 'சோழர்குலக் கோமகனே ஆயினும் பாண்டிய, சேர நாடுகளையே யன்றிக் கொங்க நாட்டையும் வட நாட்டையும் இம் மன்னன் தன் போர்த் திறத்தால் அடக்கியாண்டான் என்ற உண்மையைச் சோழ நாட்டுள் ஒரு சிற்றரசராகிய திருமங்கை மன்னர் உரைக்கின்றார். வைணவ நெறியிலே பற்றுக்கொண்ட பெரியோர் ஒருவர் சைவ நெறியிலே பழுத்த மன்னர் புகழை உரைக்கும்போது, அம் மொழிகள் எல்லாம் உண்மையாகவே இருக்க வேண்டும் என்று துணியலாம்.

உறையூரிலிருந்து அரசாண்ட கோச்செங்கட் சோழ மன்னன், குடிகள் நலம் சிறிதும் குறையா வண்ணம் நல்லமைச்சர் துணைகொண்டு நன்றாக அரசாண்டான். தெய்வ வாள் பெற்ற திறத்தாற் பல நாடுகளையும் எளிதில் வென்றான் என்று உரைப்பது இம் மன்னன் போர்த் திறத்தை உண்மையிற் புகழ்வதாகாது. போர்த்திறம் இயல்பிலே பொருந்தாத ஒருவன் கையில் தெய்வ வாள் இருந்தாலென்? முருகன் வேலே வந்து குதித்தாலென்? உண்மையிலே போர்த் திறம் மிக்கதால் அவ் வாளும் பயன்பட்டிருக்கலாம்.

**பழையன் படை :** மற்ற நாடுகளை வென்று பெற்ற புகழைச் சங்கச் செய்யுட்களால் அறிய இயலவில்லை. இம் மன்னன் சேர நாட்டிலே பெற்ற வெற்றியைச் சங்கச் செய்யுட்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. சோழன் செங்கணன் மறத் திறமிக்க மறவரைப் படையிலே சேர்த்து, அவரை நடத்தும் பொறுப்பைச் சோழ நாட்டில் உள்ள போர் என்ற சிற்றூரின் தலைவனை பழையன் என்ற மறவர் தலைவனிடம் ஒப்பித்தான். கோச்செங்கணன் படை முதலியாக இப் பழையன் நெடுங்காலம் பணி பூண்டிருந்தான். அயல் நாட்டுப் போர்களில் எல்லாம் இவன் படை நடத்திய திறமையே சோழ மன்னனுக்குப் பேருதவி ஆயிற்று.

**பழையன் சேர நாடு சென்று போர் புரிதல் :** செங்கட் சோழனுக்குச் சேர நாட்டைக் கைக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழவில்லை. தகுந்ததோர் காரணம் அமைய வேண்டும் என்றே பொறுத்திருந்தான். சேர நாட்டிலே வட பகுதியை ஆண்ட இரும்பொறை மரபினருள் சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற மன்னன் தமிழ்க் கல்வி சிறந்தவன். போர்த் திறம் மிகுந்தவன். பொய்கையார் என்ற புலவர் நட்பைப் பெற்றவனுமாவன்.

சேரன் நாட்டில் கழுமலம் என்பது செல்வமும் சிறப்பும், கல்வியும், கலையும் மிக்கதோர் நகராம். அந் நகரத்தின் ஆட்சி கணையன் என்ற வீரன் கையில் இருந்தது. ஆரியப்பொருநல் ஒருவனைப் போரில் வென்று புகழ் பூண்ட கணையன் சோழ நாட்டுப் படைத் தலைவன் பழையனை எதிர்க்கத் துணிந்தான்.

சோழ மன்னன் ஏவலோடு படை நடத்தி வந்த பழை யன் சேர நாட்டுட் புகுந்து கழுமலம் வரை வந்து போர் தொடுத்தான். கணையன் தனக்குத் துணையாகப் பலரைச் சேர்த்துக் கொண்டான். எழுவர் எதிர்த்த கடும் போரிலே பழையன் இறந்தான். இரு படையிலும் பலர் இறந்து விழவே பருந்துகள் எங்கும் உணவு பெறப் பறந்தன.

**சோழன் சேர நாடு புகுதல்:** செங்கணன் விழிகள் நெருப்பினும் சிவந்தன. படை முதலி பழையன் சேர நாட்டிலே கழுமலத்தில் இறந்த செய்தி அவன் உள்ளத்தை வெதுப்பியது. உடனே சேர நாட்டுக்கு வந்து, கழுமலத்தைத் தாக்கினன். கழுமல நகர் சோழ மன்னனுக்கு உரியதாயிற்று. அந்நகர் காவல் பணி பூண்டிருந்த கணையன் களத்தில் இறந்து விழுந்தான்.

**சேரன் போர்:** சேரமான் கணைக்கால் இரும்பொறை கழுமல நகரத்தில் சோழன் செங்கணன் வீற்றிருப்பதும், தனது வலக் கரம் போன்ற மறவர் தலைவன் கணையன் களப்பலி ஆனதும் அறிந்து, தொண்டியிலிருந்து புறப்பட்டுச் சோழர் படையை எதிர்க்க வந்தான். செங்கட் சோழனும் சேரமானும் ஏழு நாள் போர் புரிந்தனர்.

**சேரன் சிறைப்பட்டது:** கழுமலத்தை அடுத்த திருப்போர்ப்புறத்தே நிகழ்ந்த இப்பெரும் போரில் சேரர் படை மறவர் நன்றாகவே படைகளைக் கையாண்டனர்; ஆயினும், கணைக்கால் இரும் பொறை தனது குலத்தின் பெருமை விளங்க மிகவும் திறமையோடு படையை

நடத்தினனுயினும், கோச்செங்கணன் வெற்றி பெற்ருன். சேரன் போர்க்களத்தில் விழுப்புண்பட்டு இறந்து புகழ் பூணும் பேறு பெறவில்லை. கரிகால் வளவனேடு போர் எதிர்ந்து புறப்புண்பட்டு வடக்கிருந்து உயிர் துறந்த பெருஞ்சேரலாதன் போன்ற புகழும் பூணவில்லை. வினைவசத்தால் சோழன் படைக்கு இடையே சிறைப்பட்டான்.

**பொய்கையார்**: செங்கணன் சேரன் பெருமையை நன்கு அறிந்தவனே ஆயினும், குடவாயிற் கோட்டத்தில் அவனைச் சிறையிருக்கச் செய்து கழுமலத்தில் அமர்ந்திருந்தான். சேரன் மனம் நொந்து கரைந்தான். நீர் வேட்கை மிகுதியோடு சிறைக்குள் அல்லாந்தான். கணைக்கால் இரும்பொறையின் நண்பு பெற்ற பொய்கையார் என்ற பெரும்புலவர், சோழன் செங்கணன் வீற்றிருந்த கழுமலநகர் நோக்கி விரைந்து வந்தார். புலவர்களை அன்போடு வரவேற்று உரிய சிறப்பளிக்கும் சோழன் அவைக்களம் புகுந்தார். அவன் போர் வெற்றியை விளக்கிக் களவழி நாற்பது என்பதோர் போர்ச் செய்யுளை இயற்றினர். நாற்பது பாடலையும் செவிசாய்த்துக் கேட்ட சோழன் அகம் குளிர்ந்து முகம் மலர்ந்து புலவரை நோக்கி, "அரும் பொருட் பேழையான இப்பெருஞ் செய்யுளுக்கு என்ன பரிசில் தருவேன்! புலவர் பெருமானே, உமது சிறப்பு அறிந்து உதவும் செல்வம் என்பால் உண்டோ என்றே ஐயம் உறுகின்றேன். கரிகாற் பெருவளவன் கடியலூர் உருத்திரங் கண்ணனர் பாடிய ஒரு பாட்டைக் கேட்டுப் பதினறு நூறுயிரம் பொன் பரிசில்

கொடுத்த வரலாற்றைக் கேட்டிருக்கிறேன். குறிப் பறிந்து கொடுக்க விரும்புகிறேன்" என்றான்.

பொய்கையார் செங்கணான் குறிப்பை உணர்ந்து கொண்டு, "சோழர் குலத்தின் தவச்செல்வ, கரிகால் வளவன் குலத் தோன்றல், இம் மன்னன் குல முன்னோர் இமயத்தில் விற் பொறித்த பெருமையைப் புலவர் மறந்ததில்லை. கொடைச் சிறப்பும் மறச் சிறப்பும் பொருந்திய இம் மன்னனைப் போர்க்களத் தில் நீ கொன்றிருந்தால், அவன் விழுப்புண் பட்டு இறந்திருந்தால், புலவரும் குடிகளும் வருந்த மாட்டார். இன்று அம்மன்னன் பெருமை மழுங்கச் சிறை வைத் திருப்பது இந் நாட்டுக்கே இழைத்த மானக்கேடு என்றே கருதுகின்றோம். அவன் குற்றம் என்ன என்று சற்றே பார்ப்போம். சோழர் படை முதலி பழையன் சேர நாட்டில் வந்து போர் தொடுத்த போது சேரர் படைஞர் அவனை எதிர்த்துக் கொன்றது குற்ற மாகுமா? தம்நாட்டைத் தாக்க வரும் படையை எந்த மன்னன் தான் எதிர்க்காமற் பொறுத்திருப் பான்? கணைக்கால் இரும்பொறை தன் நாட்டைக் காக்க முன்வந்த குற்றத்துக்காக அவனைச் சிறை செய் வது சோழர் குலத்தின் பெருமைக்குப் பொருந்துமா? அரசே, இன்று நான் வேண்டும் பரிசில் எம்மன்னன் சிறை நீங்கி முன்போல அரசு பூண்டு வாழும் வாழ்வே ஆகும்" என்று கூறி அமர்ந்தார்.

இவ்வாறு கேட்ட சோழன், "புலவர் பெருந் தகையே, உமது விருப்பம் இன்னது என்பதை இங்கு நீர் வரும்போதே உணர்ந்து கொண்டேன்.

ஒரு பாட்டுக்குப் பதினறு நூருயிரம் பொன் கொடுத்த குலத்திலே பிறந்த நான் நாற்பது பாடல் கேட்ட பிறகும் உமது விருப்பத்தை நிறைவேற்றத் தயங்கு வேனு? இன்று முதல் சோழர் குலத்துக்கும் சேரர் குலத்துக்கும் பகை இல்லை என்று உறுதி கூறு கிறேன். நீவிரே சிறைக் களத்துக்கு நேரிற் சென்று சேர மன்னனைச் சிறை வீடு செய்து புகழ் பூண்பீ ராக" என்று கூறினன்.

பொய்கையார் விடுதலை யோலையோடு, குடவாயிற் கோட்டச் சிறைக்களத்துக்குப் புறப்பட்டார். இதற் கிடையிலே சேரன் நீர் வேட்கையைப் பொறுக்க இயலாது, சிறைக் காவலரை அருகே அழைத்துத் தனக்குத் தண்ணீர் தருமாறு வேண்டினன். காவலர் அவன் அரசன் என்பதாக மதியாது சிறைக் கதவை அடைத்துப் புறத்தே கதை பேசி யிருந்தனர். சேரன் வேட்கை பொறுக்கலாற்ருது, இரண்டு மூன்று முறை தண்ணீர் கேட்டான். மூன்ரும் முறை கேட்ட பிறகு, காவலன் ஒருவன் மரியாதை யின்றிச் சிறிதளவு தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான்.

**சேரன் சிறையில் இறந்தது:** கணைக்கால் இரும் பொறை நீர்க் கலத்தைக் கையிற் பெற்று, இப்படிப் பெற்ற தண்ணீரைக் குடித்தேனும் உயிர்வாழ வேண்டுமா? என்று எண்ணி, ஒரு பாடல் பாடினன். "குழவியே இறந்து பிறந்தாலும், ஊன்தடியே பிறந் தாலும் மறக் குலத்தின் சிறப்புக்கு இழுக்காகுமே என்று எண்ணி வாளால் வெட்டியே புதைப்பர். சங்கிலியிற் பிணிப்புண்ட நாயைப் போலச் சிறைக்

களத்தே இருந்து காவற் சேவகர் மனமின்றிக் கொடுக்கும் உணவும், நீரும் இரந்து பெற்று உண்டுவாழும் நிலைக்கு மக்களைப் பெற்று வாழ விடுவாரும் உண்டோ!" என்று கூறித் தண்ணீரைக் குடிக்காமல் உயிரை விட்டான்.

விடுதலை யோலையோடு சிறைக்களத்துக்கு வந்த பொய்கையார் சேரன் இறந்தது அறிந்து மனம் வருந்தி வனத்துக்குச் சென்றார். சோழ மன்னன் சேர நாட்டையும் தன்வசப்படுத்தி அரசாண்டான் என்பது, திருமங்கை மன்னர் வாக்கால் விளங்கும். பொய்கையார் சேரனைச் சிறைவீடு செய்து அரியணையில் ஏற்றினர் என்று கூறும் புலவரும் உள்ளனர்; கலிங்கத்துப்பரணியிலே, செயங்கொண்டார். "களவழிக் கவிதை பொய்கை யுரைசெய்ய உதியன் கால்வழித் தளையை வெட்டி யரசிட்ட பரிசும்" என்று பாடுகிறார். "மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப் பாதத் தளைவிட்ட பார்த்திபனும்" எனவும் பொறையனைப் பொய்கை கவிக்குக் கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோனும்" எனவும், "பொய்கை களவழி நாற்பதுக்கு வில்லவன் காற்றளையை விட்ட கோன்" எனவும் மூவருலாவிலே ஒட்டக்கூத்தர் பாடுகிறார். இப் புலவர் வாக்குக்களை நாம் ஏற்றுக் கொள்வதாயின், புறநானூற்றில், சேரமான் கணைக்கால் இரும்பொறையார் பாடிய பாடலுக்குத் தக்க முடிவு கூற இயலாதவராவோம்.

சோழ மன்னர் பெருமையை உரைக்க எழுந்த கலிங்கத்துப்பரணியும், மூவருலாவும், கோச்செங்க

ஞன் களவழிக் கவிதையைப் பொய்கையாரிடம் பெற்றுக்கொண்ட சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சிறைவீடு செய்து, அரசாளவிட்டான் என்று கூறுமாயினும், போர் நிகழ்ந்த காலத்துக்கும், பரணி உலாப்புலவர் காலத்துக்கும் இடையே பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டதால், பண்டைய வரலாறு சிறிது மாறுபட்டு வந்திருக்கலாம் என்று நினைக்க இடம் உண்டு.

---

# 9. பெருநற்கிள்ளி

சோழர் குலத்திலே கிள்ளி என்ற சிறப்புப் பெயர் பெற்றவர் பலராவர். சங்கச் செய்யுட்களால் அறியப்படும் இவ்வகையினருள் சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவன் ஒருவன். 'இராய சூயம் வேட்ட' என்ற அடைமொழி இம் மன்னன் பெயர் முன் பொருந்தப் பெற்றிருப்பதால், வடநாட்டு மன்னரைப் போல இச்சோழ மன்னன் அரசர் பலரை வென்றதற்கு அறிகுறியாக இராயசூய வேள்வி இயற்றியிருக்க வேண்டும் என்று துணிய லாம்.

பெருநற்கிள்ளி என்ற இச் சோழன், பாண்டிய மன்னனையும் சேர மன்னனையும் பிற சிற்றரசுகளை யும் போர்க்கு அழைத்து வெற்றி பெற்ற பிறகே, இவ் வேள்வியை இயற்றியிருக்க வேண்டும். வெற்றி பெரு விடினும் மற்ற மன்னர்கள் இவன் தலைமைக் கீழ் அடங்கியிருக்க ஏற்றுக் கொண்டனர் என்றாவது துணிய வேண்டும்.

இம்மன்னன் வரலாறு குறிக்கும் பாடல்கள் புற நானூற்றில் நான்கு உண்டு. பாண்டரங் கண்ணனார் என்ற புலவர் 'முருகன் போன்ற சினமுள்ள குரிசில்' என்று இவனைப் புகழ்கிறார். 'வாட்படை, பரிசை முத லிய கருவிகளோடு குதிரைமேல் இம்மன்னன் போர்க் குச் செல்வான்' என்று கூறுகிறார். பகைவர் வயல் களைக் கவர்ந்து தன் படைக்கு ஊட்டுவான்' என்கிறார். பகைவர் நாட்டில் வீடுகளில் உள்ள போதிகை, உத்

தரம், தூண் முதலிய மரங்களை விறகு ஆக வைத்து எரிப்பானும். காவல் மிக்க பகைவர் ஊர்க் குளங்களிலே இம்மன்னன் யானைகள் குளிக்குமாம். ஊர்களைக் கொளுத்திய தீ விளக்கம் செவ்வானம் போலத் தோன்றுமாம். எவர் துணையும் வேண்டாமலே இவன் போர்க்களம் வெற்றி பெறுவானும். வள்ளை, ஆம்பல், பகன்றை, பாகல் முதலிய செடிகொடிகள் நிறைந்த கரும்பு விளை கழனிகளை இவன் பாழ் செய்வானும். நன்கு வாழ்ந்த நாடுகளைத் தீக்கு இரையாக்கி வெற்றி காண்பான் என்றும் கூறுகிறார். இதனால் இம்மன்னன் போர்ச் சிறப்பு நன்கு விளங்கும்.

**முடிமன்னர் மூவர் நட்பு:** இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, குடிகள் உவப்ப நாட்டினை ஆண்டதேயன்றிச் சேர, பாண்டியர் குலங்களோடு நட்பாக வாழவே முயன்றான். அந் நாளில், பாண்டிய நாட்டிலே அரசு பூண்டிருந்தவன், பாண்டியன் கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி ஆவன். புலமையும், புலவரைப் போற்றும் பெருமையும் பொருந்திய பாண்டியன், பெருநற் கிள்ளியோடு பகைபூணும் நினைப்பே இன்றி நட்புரிமை பூண்டிருந்தான்.

அந் நாளிலே, சேரர் குலத்தில் இரு கிளைகள் இருந்தன. இரும்பொறை என்ற சிறப்புப் பெயர் பூண்ட கிளையினர் சேரநாட்டின் வடபகுதியை ஆண்டனர். இவர்களுக்குத் தொண்டி நகரம் அரசிருக்கையாய் இருந்தது. தென் பகுதியிலே உதியன் சேரலாதன் வழியில் வந்த, செங்குட்டுவன் ஆதியர் அர

சாண்டு வந்தனர். தென் பகுதியில் இந் நாளில் அரசு பூண்டிருந்தவன், சேரமான் மாரிவெண்கோ என்ற மன்னனும். அவன் பாண்டிய மன்னரோடு, நெடுங் காலம் பகைபூண்ட தன் குலத்தியல்புக்கு மாருக உக்கிரப் பெருவழுதியோடு நட்புப்பூண்டு இன்புற வாழ்ந்தான்.

சேரமான் மாரிவெண்கோ, உக்கிரப் பெருதிவழுயின், நற் பண்புகளை அறிந்து, சோழன் பெருங்கிள்ளியையும், நட்பாக்கிக்கொள்ள விரும்பினன். ஔவையார் என்ற பெண்பாற் புலவர் அரசியார், முடிமன்னர் மூவரையும் நன்கு அறிந்தவராய் இருந்தார். அவர் உதவியால் இம் மூவரும் நட்புரிமை பெற்றனர். மூவரையும் ஒன்று சேர்த்து மகிழ்ந்த ஔவையார் ஒரு பாடல் பாடி மனம் உருகி இவர்களைப் பாராட்டி இருக்கிருர்.

**ஔவை வாழ்த்து:** ஔவையார் மூவரையும் மனமார வாழ்த்தி அவர்களுக்குத் தக்க நன்மொழியைப் பாடல் உருவத்திலே அமைத்துரைத்தார். பெருநற்கிள்ளி அரசாளும் சோழ நாட்டுக்குப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி நட்போடு வருவதும், உறையூரில் சோழ, பாண்டியரே அன்றிச் சேரமான் மாரிவெண்கோவும் வந்து நட்பு விளங்க அமர்ந்திருப்பதும் நோக்கி மனம் மகிழ்ந்தார். அரசர் குலங்கள் தமிழகத்தில் மூன்ருகப் பிரிந்தே யிருப்பினும் அவை மன வொற்றுமையின்றி என்றும் போர்புரிந்து கொண்டே இருக்கவேண்டும் என்ற கருத்து ஔவையார் போன்ற புலமைப் பெரு மக்களுக்கு என்றும் இருந்ததில்லை.

உள்ளம் ஒன்றி ஒருங்கு சேர்ந்த மூவரை நோக்கி ஔவையார், "அரசர் பெருமக்களே, வான வுலகம் போன்ற விரிவுள்ள பெருநாடு ஒருவர் ஆட்சியில் அமைந்திருந்தாலும், என்றும் அவர் குலத்தின் வழியே உரிமையாய் இருக்கும் என்று உறுதியாய் உரைக்க இயலாது. அந்த நாட்டையே ஆள்வதற்குரிய புண்ணியம் இயற்றியவர் எவரோ அவர் பழைய குலத்தின் தொடர்பு சிறிதும் இல்லாத வேற்று வகையினரே ஆயினும், அவர்க்கு உரிமை ஆய்விடும். கையேந்திப் புகழ்ந்து வரும் பார்ப்பார்க்கு அவர் கைநிறையப் பொன்னும் பூமியும் நீரோடு தந்து, இளமகளிர் பொன் கலங்களில் ஏந்திக்கொடுத்த தூய தேனைப் பருகி, மகிழ்ச்சி மிகுந்து, இரக்க வரும் வறியவர்க்கு அருங் கலங்களை மனம் சுருங்காமல் வாரிக்கொடுத்து உயிர் வாழக் கிடைத்த நாளெல்லாம் நன்கு வாழவேண்டும். இவ்வண்ணம் அறிந்து இயற்றிய நல்வினையன்றி, வாழ்க்கைக் கடல் கடக்க உதவும் தெப்பம் வேறு ஒன்றும் இல்லை. மெய்ப்பொருளை ஆராய்ந்து, தெளிந்து அடங்கிய இரு பிறப்பாளர் ஓம்பும் முத்தீக்களே போல அழகுற வீற்றிருந்த வெண்குடையும், கொடித்தேரும் கொண்ட வேந்தர்களே, வானத்தில் விளங்கித் தோன்றும் மீன்களைக் காட்டிலும், மழைத்துளிகளைக் காட்டிலும் மிகுந்து மேம்பட்டு, உங்கள் வாழ்வு பெருகுவதாகுக. இந்த அளவே நான் சொல் அறிந்ததாம்" என்று வாழ்த்தினர்.

புலமைத் தலைவியார் இங்ஙனம் வாழ்த்தும் பேறு பெற்ற முடிமன்னர் மூவரும் நெடுங்காலம் தமிழகத்துக்கு ஒற்றுமையாகவே நலம்புரிந்து வாழ்ந்தார்;

என்று கேட்பின் நல்லதே. ஆம், வரலாறு அப்படி நிகழ்வதில்லையே. இங்ஙனம் பெற்ற நட்பின் உறுதியால் பெருநற்கிள்ளி தனது நாட்டில் அறம்வளரப் புகழ்வளர வாழ்ந்து வந்தான்.

சேர சோழ பாண்டியர் இங்ஙனம் ஔவை முயற்சியால் ஒற்றுமை பூண்டு வாழும் செய்தியை ஆங்காங்கு போய்வரும் ஒற்றர்களால் அறிந்த சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, சோழ மன்னனைப் பகைத்துப் போர் தொடுக்கத் துணிந்தான். மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஓம்பிய நாடு புத்தேள் உலகம் போலும் என்று புலவர் புகழ வாழ்ந்த இம்மன்னன் சோழனைப் பகைத்தது முடி மன்னர் மூவர் ஒன்று கூடியதால் தன்வலிமைக்குக் குறைவு விளையுமோ என்று கருதிய கருத்தால் இருக்கலாம்.

சோழ நாட்டுக்கு அருகே சென்று படையெடுக்கவே இரும்பொறை கருதினன். சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் சேரன் ஒருவன் தனக்கு நண்பனாய் இருந்தும் சேரர் கிளையில் மற்றொருவன் தன்னைப் பகைத்துப் படைதிரட்டுவதை உணர்ந்துகொண்டான். ஆயினும் அவன் பகையைப் பெரிதாக மதியாது சில நாள் இருந்தான்.

புலவர் புகழ்வது: உலோச்சனார் என்ற புலவர் பெருநற்கிள்ளி புகழைக் கேள்வியுற்று அவனைக் காணவந்தார். அவர் சோழன் குணச் சிறப்பு உணர்ந்து உள்ள முருகினார். ஒரு பாடலால் தம் கருத்தை விளக்கவும் துணிந்தார். "பனி பெய்யும்

இரவுப் பொழுதில் தமது தலைமயிர் நனைவதையும் மதியாமல் இளஞ் சிறுவர் இனிது உறங்கும் திருநகர் அகத்தே நான் என் வறுமை நோய் போக்கும் கருத்தால் பறை முழக்கி வந்தேன். தேவரே தன்னைக் காக்க அறம் நிலைத்த மனம் உள்ள மன்னன் அந்து வாழ்வதாக அறிந்தேன். அவனைக் காணக் கருதி அணுகினேன்.

கரவு சிறிதும் அறியாத வண்மை மிக்க அம் மன்னன், வாழ்க என்று புலவரால் வாழ்த்தப் பெற்ற மன்னர் எவர்க்கும் தான் உவமம் ஆவது உண்டே அன்றித் தனக்கு உவமம் யாரும் இல்லை என்பதை, அவனைக் காணும் முன்பு உணர்ந்தேன். அதனால் அவனைப் புகழவும் துணியாமல் மதி மழுங்கி நின்றேன். அங்ஙனம் நின்ற என்னைக் கண்டு 'நெடுந் தொலையில் இருந்து வந்த பாணனே நீ என்னாற் புரத்தற் குரியவன் ஆவாய்' என்று கூறி மலையிற் பிறந்த மணியும் காட்டிற் பிறந்த பொன்னும் கடலிற் பிறந்த முத்தும் வேறுவேறு வகையான உடைகளும் பிற பொருள்களும் கனவிலே காண்பது போல நான் வருந்தாது நிற்க நனவிலே கொடுத்தான். உண்மையில் நாடு என்று சொல்பவர் அவன் நாட்டையே உரைக்கின்றார். வேந்தன் என்று புகழ் பவர் அம்மன்னனையே உரைக்கின்றார். "யானைப் படையும் தேர்ப் படையும் வாளின் வாழ்பவராகிய மறவர் படையும் மிகுந்து கடல் போன்ற படை கொண்ட இம்மன்னன் நீடு வாழ்வானாக" என்று, பாடினார்.

**சேரன் தோற்றது :** மனம் நிறையக் கொடுக்கும் வள்ளலை உளம் நிறையப் புகழ்வது புலவர்க்கு இயல்பே என்பதை இச்செய்யுள் நன்கு விளக்கும். இத்தகைய புகழ் பூண்ட சோழனை மாந்தரஞ் சேரலிரும்பொறை பகைத்தான். பெரும் படையும் திரட்டினன். சேர நாட்டின் வடபகுதியில் நிகழும் பகை முயற்சியை அறிந்த சோழன் பெரும் படையோடு சேர நாட்டுக்கே புறப்பட்டான். வேளிருள் ஒருவனான தேர் வண்மலையன் என்ற சிறந்த வீரன் இம் மன்னனுக்குப் படைத் துணையாக வந்தான். மாந்தரஞ் சேரல் இரும்பொறை இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் போர்த்திறமும் மலையன் உதவியும் கண்டு மனம் தளர்ந்தான். சேர நாட்டகத்தே நிகழ்ந்த போரில் அவன் தோற்றானாயினும் சோழன் தனியே வந்திருப்பின் தானே வென்றிருக்கலாம் என்ற எண்ணத்தோடிருந்தான். மலையன் துணையால் வெற்றி பெற்ற சோழன் தன் நாட்டுக்கு மீண்டு வந்து முன் போலவே குடிகளை நன்கு அரசாண்டு வந்தான்.

# 10. இளஞ்சேட் சென்னி

மன்னன் ஒருவனே: சங்கச் செய்யுட்களில் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்ற இரண்டு பெயர்கள் வழங்குகின்றன. சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி என்ற பெயர் பூண்ட மன்னனே இங்ஙனம் வேறு வேறு பெயரால் வழங்கப் பட்டுள்ளானே என்று நினைக்க இடம் உண்டு. கரிகாலன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்ற பெயர் பூண்டிருந்தான். சோழன் நலங்கிள்ளியும் சேட்சென்னி என்ற சிறப்புப் பெயர் பூண்டிருந்தான். முன் வந்த அவ்விருவரைப் போல இங்கு மூவர் இப் பெயர் பூண்டிருப்பதாகத் தோன்றும். மூவராகத் தோன்ற இடம் தந்த பெயரைக் கொண்டு வரலாறுகளை ஆராய முயல்வோம்.

ஊன் பொதி பசுங்குடையார் என்ற புலவர் இங்கு நாம் காட்டிய மூன்று வகைச் சிறப்புப் பெயர் பூண்ட சேட்சென்னியைப் பாடியிருக்கிறார். ஆகவே, இம் மூப்பெயர் பூண்ட சேட்சென்னி ஒருவனே என்று துணிதல் தவறாகாது. அப் புலவர் வாக்கிற் கண்டவாறு, இச் சேட்சென்னியின் வரலாற்றை அறிய முயல்வோம். இப் புலவர் புறநானூற்றில் பாடிய நான்கு செய்யுட்களும் இச் சேட்சென்னியைப் பற்றியே பேசுகின்றன. நல்லிசைப் புலவராகிய இவர் வேறு எம்மன்னரையும் பாடவில்லை. வேறு புலவர் எவரும் இச் சேட்சென்னி புகழைப் பாடியதாகவும்

...MBARA PUBLIC L...

சங்கச் செய்யுட்களால் அறிய இயலவில்லை. இக் காரணங்களாலும் மூப்பெயர் பூண்ட மன்னன் ஒருவனே என்று துணியலாம்.

**மன்னன் பண்பு**: புறம் பத்தாம் செய்யுளில் இப் புலவர் முதன் முதலாக இம் மன்னனைக் கண்டு புகழ் கின்றார். அங்கு இவனை 'நெய்தல் அம் கானல் நெடியோய்' என்று அழைக்கின்றார். அது கண்ட குறிப் பாளர் அவன் பெயர் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்று எழுதிவிட்டார். சோழநாட்டில் நெய் தல் நிலம் உண்டு என்பதும் நெய்தல் நிலத்ததான கானல் சோழ மன்னர் ஆட்சியிலே தொன்று தொட்டே இருப்பது உண்மை என்பதும் புகார், திரு மறைக்காடு, கோடிக்கரை முதலிய நகர்களைக் கண்ட வர் அறியாதிரார். ஆகவே, நெய்தல் நிலத்தையும் மருதநில மிகுதியோடு ஆளப்பெற்ற ஆரங்கண்ணிச் சோழமன்னர் குடியில் வந்த சேட்சென்னி நெய்தலங் கானல் நெடியோன் என்று கூறப் பெற்றான்.

இச்செய்யுளில் புலவர் "அரசே, நீ உன்னை வழிபடு வாரை விரைவில் அறிவாய். பிறர் பழி கூறும் புன்மக் கள் சொல்லைத் தேறாய். நீ உன் மனமார ஒருவரிடம் தீமை காண்பாயாயின் தக்கவாறு ஆராய்ந்து குற்றத் துக்கேற்பவே ஒறுப்பாய். அவரே உன்னை அணுகி அடியில் விழுந்து வணங்கி முன் நின்றால் முன் கருதிய அளவைக் காட்டிலும் தண்டம் தணிப்பாய். மண மிகத் தாளித்த அமிழ்து போன்ற இனிய உணவை வருவார்க்கு எல்லாம் வரையாது கொடுக்கும் வசை யற்ற வாழ்க்கையுடையாய், பெண்டிர் உன்னை அன்

பால் எதிர்த்தல் எளிதாகுமே அன்றி வீரர் வன்பால் எதிர்த்தல் இயலாது. நாம் இங்ஙனம் அறியாது செய்து விட்டோமே என்று வருந்தத் தரும் செயல்களை என்றும் செய்தறியாய். உலகம் எங்கும் விளங்கும் புகழ் பூண்டாய். நான் உன்னை அணுக வந்தேன். பலவாறு புகழ்வேன்" என்று உள்ளக் கருத்தை மறையாமல் உரைக்கிறார்.

இச் சேட் சென்னியின் அரசியல், அறத்தையே அடிப்படையாகக் கொண்டது என்பதையும், குற்றமே புரிந்தவரும் இவன் விதிக்கும் தண்டனையால் வருந்த இடமில்லா திருந்தது என்பதையும் நாம் நன்கு உணரலாம்.

சேர நாட்டுப் போர்: இச் சோழ மன்னன் சேர நாட்டிற் புகுந்து ஒரு சிறு போர் இயற்றினன். அப் போரில் இவனை எதிர்த்த சேரன் இரும்பொறை மரபில் வலி குறைந்திருந்த ஒருவனாக இருக்க வேண்டும். சேரனும் சோழனும் இயற்றிய போரில் சேரனுக்கு உரிய பாமுளூர் என்ற சிறு நகரம் அழிந்தது. அவ்வெற்றியோடு சேட் சென்னி உறையூர்க்கு மீண்டு வந்தான். அவனைக் கண்ட ஊன்பொதி பசுங் குடையார் கொடைக் குணமே சிறந்த கோமகனைக முன்பு புகழ்ந்த அளவில் மனம் அமையாமல் அவன் போர்ச் சிறப்பையும் புகழத் துணிகின்றார். இப் போர்ச் செய்தி புறம் இருநூற்று மூன்றாம் செய்யுளில் வருகின்றது. பாமுளூரை எறிந்ததே அன்றி செருப் பாழி என்ற அரணையும் அழித்தான். ஆதலால் அச் செய்தியை இப் புலவரே புறம் மூந்நூற் றெழுபதாம்

செய்யுளாலும் மூந்நூற் றெழுபத்தெட்டாம் செய்யுளா லும் நன்கு விளக்குகின்றார். பாமுளூர் செருப்பாழி என்ற ஊர்ப் பெயர்கள் அச் செய்யுட்களில் வரவில்லை; ஆயினும் குறிப்பு எழுதியவர் அவைகளை வெளியிடு கின்றார்.

பாமுளூரை அழித்து வந்த நிலையிலே சேட் சென்னியைக் கண்ட புலவர் முன்பு ஒருமுறை வந்து பரிசில் பெற்றவராதலால் அரச சேவகர் பலமுறை வருதல் வேண்டா என்று கூறியிருக்கலாம். 'முன்பு பரிசில் நிரம்பப் பெற்றீரே. இன்று ஏன் மீண்டும் வந்தீர்' என்று சேவகரில் ஒருவன் கேட்டிருக்க வேண்டும். இவ்வுணர்ச்சியோடு அரண்மனையுட் புகுந்த புலவர் அரசனைக் கண்டு தம் மனவருத்தத்தை அவன் செவிகேட்க நன்கு வெளியிடுகிறார்.

**புலவர் மனச் சலிப்பு:** "இந்நாட்டுக்கு வேண்டுமளவு மழை பொழிந்து விட்டேன். இனி நான் பெய்ய மாட்டேன். என்று மேகம் வேற்றிடம் சென்று விட்டாலும், பண்டெல்லாம் நிரம்பவும் விளைத்துப் பலன் தந்தேன். இனி நான் தரமாட்டேன் என்று நிலம் தன் இயற்கை வளத்தை ஒளித்துக் கொண்டா லும் எல்லா உயிர்க்கும் இன்ப வாழ்க்கை யில்லாது போய்விடுமே. இன்னும் எமக்கு உதவ வேண்டும் என்று எம்மைப் போன்ற புலவர் இரப்பாராயின், உம்மைப் போன்ற மன்னர் 'நீர் இங்கு வந்து முன்னும் வேண்டுமளவு பொருள் பெற்றீரே' என்று கூறி, இப்பொழுது தர மறுப்பது மிகவும் துன்பம் தருவதே ஆகும். இல்லாப் பொருளைத் தந்து இரப்பும் சிறப்

புள்ள செல்வரைக் காட்டிலும் அவர் தமக்குக் கொ
பார் என்று நம்பி வரும் வறிய மக்கள் இத்தகை
மொழி கேட்பதால் மிகுந்த குறைப்படுகின்ற
கொடுப்பவர்க்கோ எத்தனை முறை கொடுத்தாலு
குறையில்லை. கொள்பவர் ஒருமுறை பெற்ற இட
தில் மறுமுறையும் பெறலாம் என்று நம்பிவந்
பெறாது போனால் ஆசை வீணாகப் பேரிழவு கண்டவ
ஆவர். கொடுக்க மனம் இல்லாத, செயல் இல்லா
மன்னனும் இல்லை நீ. பகைவர் அரண் அவர் வ
வசம் இருக்கும்போதே பாணர்க்குப் பகிர்ந்து உத
சிறப்புடையாய்! நீ பூணத்தக்க கடன் எம்
போன்ற புலவரை என்றும் காத்துப் புகழ் பூ
வாழ்வதே ஆகும்" என்று மனக்குறையை அ
வெளியிட்டே உரைத்தார். இளஞ்சேட் சென்னி
வர் மனத் துணிவு கண்டு மகிழ்ந்து முன் கொடு
தைக் காட்டிலும் மிகுதியாகவே கொடுத்து மே
பலமுறை வரச் சொல்லி விடை தந்தான்.

இச் சோழன் பரதரையும் வடுகரையும் வெ
ரூன் என்பது இப்புலவர் விருப்பால் எழுந்த
மொழியோ உண்மை வரலாறேயோ என்பது
சிக் குரியதே. இளஞ்சேட் சென்னி என்ற
பூண்ட இம் மன்னன் நெடுங்காலம் அரசு பு
கொடையாற் புகழ் பூண்டான் என்பதே இச் செ
களால் விளங்கும் உண்மையாம்.

... PUBLIC LIBRARY
4 - JUN 1956